
திருவள்ளுவர் ஆண்டு 2012
துன்மதி வைகாசி 3

# தமிழரசு

16-5-1981 50 காசு







# சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள்

மாண்புமிகு செய்தி-அற நிலையத் துறை அமைச்சர்
**திரு. இராம. வீரப்பன்**

ஏராளமான சுற்றுலா மையங்களையும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும் தமிழகம் கொண்டு விளங்குகிறது. வான் முட்டும் கோபுரங்களைக் கொண்ட வழிபாட்டு ஆலயங்களும், அற்புதச் சிற்பக் கலைக் கூடங்களும், அழகைக் கொட்டும் அருவிகளும், அடவிகளும், பார்ப்போரைப் பரவசப்படுத்தும் வன விலங்குகளும், கோல எழில் கொழிக்கும் குறிஞ்சி நகர்களும், நலப் புகலிடங்களும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் அழகிய நீண்ட கடற்கரைப் பகுதிகளும், வளம் செழிக்கும் நம் தமிழகத்தை அலங்கரிக்கின்றன. நீண்ட சாலை வசதிகளும், நாளும் வளர்ந்து வரும் போக்குவரத்து வசதிகளும் தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன. எனவே சுற்றுலாத் தொழிலில் எந்தவொரு முதலீடும் மிக நல்ல பலனை அளிக்கும் நிலை உருவாகி வருகிறது.

சுற்றுலாவினால் ஏற்படும் நற்பயன்களை நன்குணர்ந்துள்ள இவ்வரசு, தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருவதினை, வரவு-செலவுத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளிலிருந்து அறியலாம். 1975–76 ஆம் ஆண்டில் சுற்றுலாவிற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 22.70 இலட்சத்திலிருந்து இன்று 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 110 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளதே இதற்கு எடுத்துக் காட்டாகும்.

தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சியானது கீழ்க்கண்ட அடிப்படை நோக்கங்களைக் கருத்தில் கொண்டு அமையப் பெற்றதாகும் :—

1. பன்னாட்டுப் பயணிகளைக் கவரும் சுற்றுலாத் தலங்களை, அதிகப் பயணிகளைக் கவரும் வகையில் மேம்பாடடையச் செய்தல்,

2. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தலங்களை, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணம் வளரும் வண்ணம் மேம்படுத்துதல்.

3. மாநிலத்திற்குள்ளே சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அம்சங்களைக் கொண்டுள்ள, ஆனால் அதிகம் விளம்பரப் படுத்தப் பெறாத, சுற்றுலாத் தலங்களை வளர்ச்சிபெறச் செய்தல்,

4. உள்நாட்டுப் பயணிகளுக்கும் குறைந்த வருவாய்

**தமிழரசு**
16—5—1981
மலர் 11 இதழ் 22
திருவள்ளுவர் ஆண்டு 2012 துன்மதி வைகாசி 3

பெறுவோர்க்கும் ஏற்ற வகையில், குறைந்த வாடகையில் தங்கு மிடவசதி ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவையாகும்.

**பயண வட்டங்களின் மேம்பாடு :**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா வளர்ச்சிக்காக குறைந்தது இரண்டு பெரிய ''பயண வட்டங்களைத்'' தமிழகத்தில் தெரிந்தெடுக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டதன் பேரில், கீழ்க்கண்ட மூன்று பயண வட்டங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பயண வட்டங்களின் மேம்பாட்டிற்கென மைய அரசும், மாநில அரசும் செய்யவிருக்கும் முதலீடுகள் நல்ல பயனைவிளைவிக்கும் வகையில் இப்பயண வட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன :—

1. சென்னை — மாமல்லபுரம் — திருக்கழுக்குன்றம் — காஞ்சிபுரம் — திருச்சிராப்பள்ளி — தஞ்சாவூர் — புதுக்கோட்டை — மதுரை — இராமேசுவரம் — கன்னியாகுமரி — குற்றாலம் — திருவனந்தபுரம் ;

2. சென்னை — கிருஷ்ணகிரி — ஓகேனக்கல் — ஏர்க்காடு — கோயம்புத்தூர் — உதகமண்டலம் — முதுமலை — மைசூர் — பெங்களூர் ;

3. இராமேசுவரம் — மதுரை — கொடைக்கானல் — புதுக்கோட்டை — திருச்சிராப்பள்ளி — தஞ்சாவூர் — மாமல்லபுரம் — சென்னை.

இம்மூன்று பயண வட்டங்களின் மேம்பாட்டிற்கென ரூபாய் 70 கோடி செலவினைக்கொண்ட பெரும் திட்ட வரைவு ஒன்றும் வரையப்பட்டுள்ளது. பயண வட்டங்களின் மேம்பாட்டுத் திட்ட வரைவு, இந்திய அரசின் நிதி உதவியைப் பெறுவதற்கென அனுப்பப்பட்டு, மைய அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

**மாமல்லபுரம் :**

மாமல்லபுரத்தின் மேம்பாட்டிற்காக ரூ. 6 கோடி செலவில் மாபெரும் திட்டம் ஒன்று வகுக்கப்பெற்றுள்ளது. மாமல்லபுரத்தின் குடைவரைக்கோவிலும், கடற்கரைக் கோவிலும், வெண்மணற் பரப்பும், அழகிய கடற்கரையும், மாமல்லபுரத்தை உலகிலுள்ள சிறந்த சுற்றுலா இடங்களில் ஒன்றாக ஆக்குகின்றன. மாமல்லபுரத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழு முன்னுரிமை அடிப்படையில் முதற் கட்டமாக பின்வரும் ஐந்து திட்டங்களை நிறைவேற்றுவதெனக் கருதியுள்ளது :—

1. சுற்றுச் சாலை அமைத்தல்.
2. வாகனங்கள் நிறுத்துமிடத்தை உருவாக்குதல்.
3. ஒழுங்குமுறையில் அங்காடிகளை ஏற்படுத்துதல்.
4. எழில் வளாகம் உருவாக்குதல்.
5. பொழுதுபோக்கு வசதிகளைச் செய்து தருதல்.

இந்த ஐந்து திட்டங்களையும் மேம்படுத்துவதற்காக முதல் தவணையாக ரூ. 25 இலட்சம் வழங்குமாறு நாம் மத்திய அரசினைக் கேட்டுள்ளோம். அவர்களது பதில் எதிர்பார்க்கப்படுகிறது.


குறைந்த வருமானம் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதியாக தேவையான வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் கட்டுவதற்காக



1978–79 ஆம் ஆண்டில் 1,81,814 ரூபாய் செலவிடப் பட்டது. பயணிகள் தங்கவும், உணவினைச் சமைக்கவும் ஏற்ற விடுமுறைக்கால பயணத் திட்டத்திற்காக ரூபாய் 3.5 இலட்சம் 1979–80 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. பயணிகள் தங்குமிட மேம்பாட்டிற்காக 1980–81-ல் ரூபாய் 2.20 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. பயணிகளின் தங்குமிடம் கட்டும் பணி நடந்தேறிவருகிறது. சித்திர, சிற்ப வேலைப்பாடு அமைந்த திறந்தவெளி அருங்காட்சியகம் ஒன்றையும், மாமல்லபுரத்தில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வருங்காட்சியகம் கடற்கரைக்கருகில் சுமார் இருபத்தைந்து ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1980–81-ல் இந்த அருங்காட்சியகத்திற்கென ரூ. 9.80 இலட்சம் செலவிட அனுமதிக்கப் பட்டுள்ளது. 1981–82-ல் ரூபாய் 10 இலட்சம் இத்திட்டத்திற்காகத் தேவை என்பதும் அரசின் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

**இராமேசுவரம் :**

இராமேசுவரம் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மிக முக்கியமான யாத்திரைத் தலங்களில் ஒன்றாகும். ஸ்ரீலங்காவிலிருந்து கப்பலில் வரும் சுற்றுலாப் பயணிகள் இங்குதான் இறங்க வேண்டும். இராமேசுவரம் அழகிய கடற்கரையினையுடையதாகவும், பொழுது போக்குவதற்குச் சிறந்த இடமாகவும் விளங்குகிறது. இதற்கு அருகாமையிலுள்ள தீவுகள், அங்கு



கடல்வாழ் உயிரினங்களைக் கொண்டு தேசிய கடற்பொருள் பூங்கா அமைப்பதற்கு உகந்ததாக இருக்கின்றன. இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு வாய்ப்பிருப்பதால், இராமேசுவரத்தையும், அதன் சுற்றுப் பகுதிகளையும் மேம்படுத்த மாபெருந்திட்டத்தை வகுத்துள்ளோம். இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 28 கோடியாகும். இத்திட்டம் பத்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் அனைத்து நாட்டு உதவிபெறும் தகுதியுடையதாக இருப்பதால் உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்றுத் தரும்படி மத்திய அரசைக் கேட்டுள்ளோம்.

இங்கு போதிய வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்களையும், உடைகளை மாற்றிக்கொள்ள அறைகளையும் கட்டுவதற்கு அரசு ரூ. 3 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இராமேசுவரத்தைக் காண வேண்டுமென்ற ஆவலில் வருகின்ற குறைந்த வருமானமுடைய பயணிகளுக்காக 1981–82-ல் ரூபாய் 10 இலட்சம் செலவில் இளைஞர் இல்லம் (துயிலக விடுதி) கட்டத் திட்டமிட்டுள்ளது.

**கன்னியாகுமரி:**


நம்நாட்டின் தெற்குமுனையில் அமைந்திருக்கும் கன்னியாகுமரியைக் காண நாள்தோறும் வெளிநாட்டுப் பயணிகளும், நம் நாட்டுப் பயணிகளும் வந்தவண்ணமிருக்கின்றனர்.

கன்னியாகுமரிப் பகுதியை மேம்படுத்த பெரும் திட்டத்தை தயாரிக்கவேண்டி சுற்றுலா பற்றி நன்கு அறிந்த வல்லுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இத்திட்டத்தைத் தயாரித்து வருகின்றார்.

குறைந்த வருமானமுடையோர் நிறைந்த பயனைப்பெறும் வண்ணம் துயிலக விடுதியும் (இளைஞர் இல்லம்), சுற்றுலா அலுவலகமும் கட்ட முறையே ரூபாய் 5 இலட்சமும், ரூ. 1 இலட்சமும் 1980–81-ல் ஒதுக்கப்பட்டது.

**உதகமண்டலம் :**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் ஏரிப்பகுதியை அழகுபடுத்த ரூ. 20.5 இலட்சம் ஒதுக்கப்பட்



டுள்ளது. இங்குள்ள படகு இல்லத்தை விரிவுபடுத்தவும், இப்பகுதியில் குழந்தைகள் இரயில் விடவும் கருதப்பட்டுள்ளது. 1981–82 இல் மேற்படி திட்டத்தின் கீழ் உதகமண்டலத்தை மேம்படுத்த ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

**ஏர்க்காடு :**

**ஏர்க்காடு** ஏரியை அழகுபடுத்த அரசு இதுவரை ரூ. 6.72 இலட்சம் வழங்கியுள்ளது. புதிதாகப் படகு இல்லமும், சிற்றுண்டி விடுதியும் கட்டப்பட்டுள்ளன. பயணிகள் படகுகளில் உல்லாசமாகச் செல்வதற்குப் படகுகளும் உள்ளன. மேலும் ''லேடீஸ் சீட்'' என்னுமிடத்தில் தொலை நோக்கியகம் (Telescope House) ஒன்று கட்ட ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**கொடைக்கானல் :**

கொடைக்கானலில் இரண்டு தொலைநோக்கியகங்கள் ரூபாய் 1.6 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. சிற்றுண்டி இல்லம் கட்ட 1977–78 இல் ரூபாய் 2.8 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1978–79 இல் துயிலக விடுதி கட்ட ரூ. 7.03 இலட்சம் வழங்கப்பட்டது. துயிலக விடுதியும், சிற்றுண்டி இல்லமும் கட்டப்பட்டு வருகின்றன.

**பிச்சாவரம் :**

கிழக்குக் கடற்கரையில் இயற்கையன்னை எழிற்கோலம் பூண்டு, நீர்வழிப்பாதைகளும் காண்பதற்கரிய கானகக் காட்சிகளும் அமைந்த சிறப்பிடமாக பிச்சாவரம் அமைந்துள்ளது. விடுமுறை நாட்களில் மகிழ்வுலா வருவோரும், ஓய்வினை விழைவோரும் சென்று காண்பதற்கான சிறப்பினை உடையது. இப்பகுதியை, மேம்படுத்தி அங்கு வருகின்ற பயணிகள் தங்குவதற்கு ஓய்வுக்கூடம் கட்டுவதற்கு 1978–79-ல் அரசு ரூபாய் 4.5 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த ஓய்வுக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், பல வசதிகளை அங்கு செய்து கொடுக்க

1979–80 இல் ரூபாய் 3 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அங்கு படகு இல்லம் கட்டி, வருகின்ற பயணிகள் உல்லாசமாகப் படகு சவாரி செய்ய, படகுகள் வாங்க, 1981–82 இல் ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

**ஒகேனக்கல் :**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவரக்கூடியதாக இருக்கிறது. இந்நீருக்கு நோய்களை நீக்கும் சக்தியும் உண்டு. குறைந்த வருமானம் உடைய பயணிகளுக்காகத் துயிலக விடுதி கட்ட 1979–80 இல் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இவ்விடுதி கட்டப்பட்டு வருகிறது. 1981–82 இல் ரூபாய் 5 இலட்சம் செலவில் அங்கு தொங்குபாலம் கட்டவும் கருதப்பட்டுள்ளது.


**இளைஞர் இல்லங்கள் (துயிலக விடுதிகள்) ;**

இளைய தலைமுறையினரும், குறைந்த வருமானமுடையோரும் பல்வேறு இடங்களையும் கண்டு மகிழ்வதற்கு ஏற்றவாறு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த எல்லா இடங்களிலும் இளைஞர் இல்லங்கள் (துயிலக விடுதிகள்) கட்டப்பட்டு வருகின்றன. ஒரு பயணிக்கு ரூபாய் 5 முதல் ரூபாய் 7.50வாடகை கொடுத்து தங்குவதற்கேற்றவாறு இந்த இல்லங்கள் கட்டப்

படவிருக்கின்றன. கீழ்க்காணும் இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

1. ஏர்க்காடு
2. மண்டபம்.
3. பிச்சாவரம்.
4. ஒகேனக்கல்.
5. கொடைக்கானல்.
6. கன்னியாகுமரி.
7. உதகமண்டலம்.
8. இராமேசுவரம்.
9. மாமல்லபுரம்.

ஏர்க்காடு, மண்டபம், ஒகேனக்கல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் இளைஞர் இல்லங்கள் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மற்ற இடங்களில் இளைஞர் இல்லங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப் பட்டு வருகின்றது.



**சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிகள் :**

போர் நினைவுச் சின்னத்திற்கு அருகில் உள்ள " தீவுத் திடலில் " அகில இந்திய சுற்றுலா வர்த்தக 8-ம் பொருட்காட்சியை தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தியுள்ளது. இந்தத் தீவுத்திடலின் ஒருபகுதியை நமது வேண்டுகோளுக்கிணங்க, சுமார் 6.5 ஏக்கர் கொண்ட பகுதியை மத்திய அரசு மாநில அரசுக்கு மாற்றிக் கொடுத்துள்ளது. இப்பொருட்காட்சித் திடலை நிலையான பொருட்காட்சி இடமாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இதற்காக, இவ்வாண்டில், அரசு அடையாள நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி ஏற்படுத்தப்பட்ட தமிழ்ப்பண்பாட்டுச் சிறப்புப்பொருட்காட்சியில் சுற்றுலாத் துறை சிறப்பாகப் பங்கேற்றது. இதில் இத்துறை ஒலி-ஒளிக்காட்சியை அமைத்திருந்தது. இக்காட்சி, வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும், நம்நாட்டு மக்களையும் பெரிதும் கவர்ந்தது.

**சுற்றுலாத் திரைப்படம் :**

இம்மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களைப்பற்றி அறிவிக்கச் செய்தித் திரைப்படங்களைத் தயாரிப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. " தமிழ்நாட்டின் விடுமுறை நாள் மகிழ்விடங்கள் " என்பது பற்றிய செய்தித் திரைப் படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திரைப்படம் ஓரிரு திங்களில் தயாரித்து முடிக்கப்படும்.

**நிழற்படத் தொகுப்பகம் :**

இத்துறை, நிழற்படத் தொகுப்பகம் ஒன்றை கொண்டுள்ளது. நம் மாநிலத்தில் உள்ள, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் பற்றிய நிழற்படங்களின் மூலப் பிரதிகள், வண்ணப் பிரதிகள் சேகரிக்கப்பட்டு, அட்டவணையிடப்பட்டு, இத்துறையில் வைத்து வரப்படுகின்றன. இவை, இத்துறையின் வெளியீடுகள், பொருட்காட்சிகள், விளம்பரங்கள் ஏனைய விளம்பர முறைகள் ஆகியவற்றில் அதிக அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை, செய்தித் தாள்கள், குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை வெளியிடப்படும் ஏடுகள், போக்குவரத்து வர்த்தக ஏடுகள் ஆகியவற்றிற்கும் வழங்கப்படுகின்றன.

நமது வெளியீடுகளில் வண்ண நிழற்படங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால் 1981-82-ஆம் ஆண்டில் மூன்று இலட்சம்

ரூபாய் செலவில் வண்ணப் புகைப்படம் தயாரிக்கத் தேவையான கருவியும் (Colour Photo Processing Equipment) ஒலி—ஒளிக் கருவியும் (Audio—visual Equipment) வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருட்காட்சிகளும், திருவிழாக்களும் :

பொங்கல் விழாக் காலம் தமிழ்நாட்டிற்குரிய மிக முக்கியமான சுற்றுலாக் காலமாகும். இக்கால அளவில், வெளிநாட்டு மற்றும் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அதிக அளவிற்குத் தமிழ்நாட்டிற்கு வருகின்றனர். முக்கியமான சுற்றுலா நிலையங்கள் அனைத்திலும் பொங்கல் சுற்றுலா விழாவை ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்துறை நடத்தி வருகிறது.

உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு ஆகிய மலை வாழ் இடங்கள் அனைத்திலும் ''கோடை விழா'' வைக் கொண்டாட இத்துறை சிறப்பாக உதவி புரிகிறது.

சுற்றுலாத் தகவல் நிலையங்கள்:

1980-81-ஆம் ஆண்டில் நாம் சுற்றுலாத் துறையை பலப்படுத்தியுள்ளோம். சென்னையில் புதியதாக சுற்றுலா அலுவலகம் ஒன்றை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 1980-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் டில்லியில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்றையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

திருநெல்வேலி இரயில் சந்திப்பு நிலையத்திலும், சென்னை மத்திய இரயில் நிலையத்திலும், சுற்றுலாத் தகவல் நிலையங்கள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்:

சுற்றுலா வளர்ச்சியை வணிக அடிப்படையில் கவனிக்கும் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு அளிக்கும் நிதி உதவி ஆண்டுக்காண்டு பெருகி வருகிறது. இதனால், இத்துறையில் நல்ல முன்னேற்றம் காண இக்கழகத்திற்கு வழி ஏற்பட்டது. கடந்த மூன்றாண்டுகளில் இக்கழகம் வணிக அடிப்படையில் சீரமைக்கப்பட்டு, அதன் பணிகள் பலமடங்கு விரிவடைந்துள்ளன. தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு இன்றியமையாத் தேவையான பயண வசதிகளையும் தங்கும் வசதிகளையும் உருவாக்கித் தருவதில் இக்கழகம் முன்னணியில் நிற்கிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இக்கழகம் அளிக்கும் போக்குவரத்து வசதிகளையும், தங்கும் இடவசதிகளையும் விரும்பி ஏற்கின்றனர். குறைந்த நியாயமான செலவில் அதிக வசதிகளை இக்கழகம் அளிப்பதே இதற்குக் காரணமாகும். இதனால், இக்கழகத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு கோடியையும் மிஞ்சியுள்ளது. எனவே, இது 1—7—1980 முதற்கொண்டு, வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக மாறியுள்ளது.

இக்கழகத்தின் வருவாய் 1971-72-ல் ரூபாய் 4·58 இலட்சமாக இருந்தது. 1976-77-ல் இக்கழகத்தின் வருமானம் ரூபாய் 68·51 இலட்சமாக உயர்ந்தது. 1980-81-ல் இவ்வருவாய் ரூபாய் 153 இலட்சமாகப் பெருகியது. 1981-82-ல் இது ரூபாய் 200 இலட்சமாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. முதன் முறையாக இக்கழகம் 1977-78-ல் நிகர ஆதாயம் ஈட்டியது. முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகள் இப்பொழுது ஈடு செய்யப்பட்டுவிட்டது. மேலும், அரசிடமிருந்து பெற்ற கடன்களுக்கும், இக்கழகம் வட்டி கட்டத் தொடங்கியுள்ளது. வட்டி செலுத்துவதற்கு முன்னர் 1980-81-ஆம் ஆண்டிற்கான நிகர வருவாய் ரூபாய் 15 இலட்சமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் 1971-ல் ரூபாய் 50 இலட்சமே. இது 1974-ல் ரூபாய் 100 இலட்சமாகவும், 1977-ல் ரூபாய் 200 இலட்சமாகவும், 1980-ல் ரூபாய் 500 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. இக்கழகத்தின் தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 195·05 இலட்சமாகும்.

1981-82-ல் இக்கழகத்திற்கு பங்கு மூலதன உதவியாக ரூபாய் 20 இலட்சமும் கடனுதவியாக ரூபாய் 20 இலட்சமும் அரசினால் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஓட்டல்கள் :

1971-ல் இக்கழகம் அமைக்கப்பட்டபோது அரசால் நடத்தப்பட்ட 6 சுற்றுலா மாளிகைகளை அது தனது நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொண்டது. அப்போது அச்சுற்றுலா மாளிகைகளில் இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 253 ஆக இருந்தது.

1975-76-ல் மொத்தம் 752 படுக்கை வசதிகள் கொண்ட

11 சுற்றுலா மாளிகைகள் இருந்தன. அண்மையில் மதுரையில் கட்டப் பெற்ற 3 நட்சத்திர ஓட்டல் உட்பட தற்போது மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை கழகத்திற்குச் சொந்தமான 16 ஓட்டல்களிலும் 1,095 ஆகும். அத்துடன் மதுரை, உதக மண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, ஏர்க்காடு ஆகிய இடங்களில் தற்போதுள்ள ஓட்டல்கள் விரிவு படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூரில் ரூபாய் 35 இலட்சம் செலவில் கட்டப்படும் 91 படுக்கை வசதிகளுடன் கூடிய ஒரு புதிய மூன்று நட்சத்திர ஓட்டல் விரைவில் செயல்படத் தொடங்கும். மாமல்லபுரத்தில் ரூபாய் 30 இலட்சம் செலவில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய 30 புதிய குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன. முதுமலை, காஞ்சிபுரம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதிய ஓட்டல்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளன. சென்னையில் நட்சத்திர ஓட்டல் ஒன்றைக் கட்ட, இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு வழி நெடுகிலும் வசதிகளைச்செய்து கொடுப்பதற்காக இராணிப்பேட்டையிலும், உளுந்தூர்ப் பேட்டையிலும் இரண்டு ''பெருவழி விடுதிகள்'' செயல்படத் தொடங்கியுள்ளன. கிருஷ்ணகிரியில் மூன்றாவது ''பெருவழி விடுதியைக்'' கட்டும் பணி நடந்தேறி வருகிறது. இம்மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் அனைத்திலும் ''பெருவழி விடுதிகளைக்'' கட்ட இக்கழகம் விழைகிறது.

தற்போது கழகம் நடத்தி வரும் ஓட்டல்கள், பெருவழி விடுதிகள் ஆகியவை பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன :—

**ஓட்டல்கள் :**

சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை (இரு ஓட்டல்கள்), இராமேசுவரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி (இரு ஓட்டல்கள்), உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு, ஒகேனக்கல், மாமல்லபுரம்.

**பெருவழி விடுதிகள் :**

இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை.

ஓட்டல்களிலிருந்து 1971-72 ஆம் ஆண்டில் ரூபாய் 4·50 இலட்சம் வருவாய் கிட்டியது. இது 1976-77 ஆம் ஆண்டில் ரூபாய் 40 இலட்சமாகவும், 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 85 இலட்சமாகவும் உயர்ந்தது.

**போக்குவரத்து :**

கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு கடந்த மூன்றாண்டுகளில் முழுவதும் மாற்றியமைக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் தெரிவித்த அனுபவத்தின் அடிப்படையில் பழைய பயணத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டதுமல்லாமல் எல்லோரையும் கவரும் வகையில் புதிய பயணத் திட்டங்களும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. நமது பயணத்திட்டங்கள் நாட்டிலேயே மிகச் சிறந்தவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அண்டை மாநிலங்களிலும் இதுபோன்ற கழகங்கள், நமது போக்குவரத்துப் பணி குறித்துக் கண்டறிந்து செல்வதற்காக தங்களது அலுவலர்களை அனுப்பியுள்ளதுவே, இதற்கு சான்றாகும். இக்கழகம் தற்போது பின்வரும் சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்தி வருகின்றது :

1. சென்னை மாநகரில் முக்கிய இடங்களை அன்றாடம் சுற்றிப்பார்த்தல்.
2. காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்க்கும் அன்றாடப் பயணம்.
3. திருப்பதிக்கு அன்றாடப் பயணம்.
4. ஏழு நாள் தமிழ்நாடு சுற்றுப்பயணம்.
5. ஏழுநாள் தென்னிந்திய சுற்றுப்பயணம்.

வாடிக்கையாளர்களின் வசதிக்குத் தகுந்த வகையில் தனிப்பட்ட சுற்றுலாப் பயணங்களும் நடத்தப்படுகின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே நாம் ஏற்பாடு செய்யும் சுற்றுலாப் பயண திட்டங்கள் மிகவும் பாராட்டு பெற்றவையாக உள்ளன. இப்பகுதிகளிலிருந்து பெருமளவு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்டு, மலேசியாவிலும் சிங்கப்



பூரிலும் பொது விற்பனை முகவர்களைக் கழகம் அண்மையில் நியமித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் இந்தியாவிலேயே இத்தகைய ஏற்பாட்டை முதன் முதல் மேற்கொண்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகமாகும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாப் பயணச் சீட்டுகள் எளிதில் கிடைக்க வகை செய்யும் பொருட்டு, சென்னையிலுள்ள பெரிய ஓட்டல்களும், சுற்றுலாப் பயண முகவர் அமைப்புகளும் 1979 அக்டோபர் திங்கள் முதல் இக்கழகத்தின் பயணச் சீட்டு விற்கும் முகவர்களாக ஆக்கப்பட்டனர். பம்பாய், டில்லி போன்ற பெரும் நகர்களிலும் நமது சுற்றுலாப் பயண ஊர்தியில் பயணம் செய்வதற்கான பயணச் சீட்டுகள் கிடைக்கின்றன.

1972 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட போக்குவரத்துப் பிரிவில் தொடக்கத்தில் 2 சொகுசு ஊர்திகள் மட்டுமே இருந்தன. தற்போது குளிர் சாதன வசதியுடன் கூடிய ஒரு சுற்றுலா ஊர்தி உட்பட மொத்தம் 15 சொகுசு ஊர்திகள் உள்ளன. விரைவில் குளிர்சாதன வசதியுடன் கூடிய ஊர்திகள் இன்னும் இரண்டு சேர்க்கப்படவுள்ளன.

நமது சுற்றுலாப் பயணங்களுக்கு இவ்வூர்திகள் பயன்படுத்தப் படுவதோடு, கூட்டமாகச் சேர்ந்து சுற்றுலா செல்வோருக்கு வாடகைக்கும் விடப்படுகின்றன.

போக்குவரத்துப் பிரிவில் 31—3—1981 ஆம் நாள் வரையில் 35 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவிலிருந்து 1972-73 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ரூபாயும் 1976-77 ஆம் ஆண்டில் 14 இலட்சம் ரூபாயும் வருவாய் கிடைத்தது. 1980-81 ஆம் ஆண்டில் 35 இலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியுள்ளது.

**ஏனைய நடவடிக்கைகள் :**

படகு இல்லம் : **உதகமண்டலத்தில் மீன் வளத் துறைக்குச் சொந்தமான படகு இல்லத்தை 1977 ஆம் ஆண்டில், அதனிட**மிருந்து இக்கழகம் எடுத்துக் கொண்டது. புதிய படகு இல்லம் ஒன்று ஏர்க்காட்டில் 1979 ஏப்ரலில் கட்டப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் பயனுக்காக இப்படகு இல்லத்தில் அதிகப் படகுகள் இயக்கப்பட்டுள்ளன.

**தொழிலாளர் நல நடவடிக்கைகள் :**

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டபோது அதில் மொத்தம் 143 பேர்கள் பணியாற்றினர். தற்போது 750 பேர்கள் பணியாற்றுகிறார்கள். பணியாளர்களின் நலனில் நிர்வாகம் எப்போதுமே அக்கறை செலுத்தி வருகிறது. உணவகப் பிரிவிலும் போக்குவரத்துப் பிரிவிலும் உள்ள பணியாளர்கள், அரசின் பல்வேறு சட்டங்களில் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு சம்பளம், மற்றும் படிகளைவிட அதிகமாகவே பெற்று வருகிறார்கள். இத்துடன், கழகம் தனது பணியாளர்களுக்குப் பல ரொக்க, ரொக்கமல்லாத பயன்களையும் வழங்கி வருகிறது.

இக்கழகம் தனது பணியாளர்களுக்கு முதன் முதலாக 1978 செப்டம்பரில் ஊதியக் கொடையை (Bonus) வழங்கியது. அதிலிருந்து தொடர்ந்து கொடுத்தும் வருகிறது.

பணியாளர்கள் தங்களது பிரிவில் ஈட்டிய உபரித் தொகையில் பங்குபெற இயலும் வண்ணம் ஊக்க ஊதியக் கொடை வழங்கும் முறை தயாரிக்கப்பட்டு 1979 அக்டோபர் முதல் நாளிலிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த நடைமுறை 1980 அக்டோபர் முதல் நாளிலிருந்து மேலும் தாராளமாக்கப்பட்டுள்ளது. சுற்றுலா மாளிகைகளிலும் பெருவழி விடுதிகளிலும் (Motels) உள்ள பணியாளர்களுக்கு குறைந்த விலையில் உணவு வழங்கப்படுகிறது. பணியாளர் பணிக்கொடை பொறுப்பு நிதி ஒன்று 30—1—1980 முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளியூரில் உள்ள பணியாளர் அனைவருக்கும் வீட்டு வசதி செய்து தரும் பொருட்டு, படிப்படியான நிலையில் பணியாளர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கழகப் பணியாளர் அனைவருக்கும் மருத்துவ உதவித் திட்டம் ஒன்றைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி அரசு மருத்துவ மனைகள் அனைத்திலும் இதன் பணியாளர்கள் அரசுப் பணியாளர்களுக்கு நிகராக இலவச மருத்துவ சிகிச்சை பெறலாம்.

தனி ஊதியங்கள் (Adhoc wages) பெற்ற பணியாளர்கள் 1—1—1979 முதல் காலச் சம்பள ஏற்ற முறையின் கீழ் கொண்டு வரப்பட்டனர். ''சிறப்பாக அமைக்கப்பட்ட ஊதியங்கள் துணைக் குழுவின்'' பரிந்துரைகளை ஒட்டி, மலைப் பகுதிப் படி, அகவிலைப்படி போன்ற சிறப்புப் படிகளை வழங்குவதன் மூலம் பணியாளர்களின் ஊதியங்கள் 1980 அக்டோபர் முதல் கணிசமான அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டன.

இவை அனைத்துடன் சேர்த்து பணியாளர் ஒருவரின் மாத சராசரி ஊதியம் 1971-72ல் ரூ. 140 ஆகவும் 1976-77ல் ரூ. 210 ஆகவும் இருந்தது. பின் 1980-81ல் ரூ. 420 க்கு உயர்ந்தது.

**[29—4—1981 அன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட மானியக் கோரிக்கை மீதான கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து].**

# பாவேந்தர் பாரதிதாசன் விழா



உழைப்பாளர் திருநாளான மே முதல் நாள்!

சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள பாவேந்தர் பாரதிதாசன் திருவுருவச் சிலை கம்பீரமாகக் காட்சி தருகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் விழாவினையொட்டி, மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பாவேந்தர் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார். அவ்வமயம் அமைச்சர் பெருமக்களும் உடன் வந்திருந்து பாவேந்தர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அன்று காலை, சென்னை கலைவாணர் அரங்கிலிருந்து மங்கல இசை காற்றிலே மிதந்து வந்தது.

ஆடவர், பெண்டிர், குழந்தைகள் இப்படித் திரள் திரளாக மக்கள் வந்த வண்ணமிருந்தனர்.

பாவேந்தர் பாரதிதாசன்விழாவைக் காணத்தான் வெள்ளம் போல் தமிழர் கூட்டம் அங்கே திரண்டிருந்தது.

தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்பெற்ற இந்தச் சீர்மிகு பெருவிழாவை, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தொடங்கி வைத்தார். தொடக்க உரையில் அவர் குறிப்பிட்டதாவது:

''பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பழகுவதற்கு இனியவர்; தாய் உள்ளத்தோடு பழகுகிற பாங்கினைப் பெற்றவர். அவரது கவிதையிலே இலக்கணமும், இலக்கியமும் இணைந்து நிற்பதைப் பார்க்கிறோம். 1908 - ஆம் ஆண்டிலேயே வித்துவான் பட்டம் பெற்றுப் பாராட்டப்பெற்றவர். அந்தக் காலத்தில், சுதேசமித்திரன், தேசபக்தன் ஆகிய பத்திரிகைகளிலே புரட்சிகரமாக எழுதி மக்களிடையேவிழிப்புணர்ச்சியைஊட்டி வந்தவர். 1929ல் தந்தை பெரியார் அவர்களுடன் அவருக்குப் பழக்கம் ஏற்பட்டது. அதுமுதல் அவர், பகுத்தறிவுக் கருத்துக்களைச் சொல்லி வந்தார்.

''அவர் தொழிலாளர் உலகம் பற்றி, நிறையப் பாடியிருக்கிறார்' லெனினே ஒரு கவிஞராக இருந்தால்கூட அப்படிப் பாடியிருப்பாரோ என்பது சந்தேகம்தான்!

''திருக்குறளுக்குப் புதிய கோணத்தில் புத்துரை கண்டவர் அவர். சோஷலிச சித்தாந்தங்களை ஆராய்ந்த அவர், தமிழைப் பற்றியே எண்ணினார், தமிழுக்காகவே வாழ்ந்தார். அவருடைய கவிதைகள் நோபல் பரிசு பெறக்கூடிய அளவுக்குத் தகுதி வாய்ந்தவை. பாவேந்தர் கண்ட கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது.''

பிறகு, கருத்துமழை பொழியும் கவியரங்கம் நடந்தது. கவியரங்கத்தில் பங்குபெறும் கவிஞர்களை சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

கவியரங்கத்திற்கு டாக்டர் சரளா ராசகோபாலன் அவர்கள் தலைமை வகித்தார். 'பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில்....' என்னும் தலைப்பில், முழுவதும் மகளிரே பங்கு பெற்ற கவின்மிகு கவியரங்கம் நடந்தது.

திருமதி அரசு மணிமேகலை (இயற்கை), செல்வி மதிஒளி (தமிழ்), திருமதி பொன்மணி வைரமுத்து (பத்திரிகையாளர்), திருமதி நிர்மலா சுரேஷ் (குடும்பம்), திருமதி கு. ரோகிணி (மகளிர்), திருமதி தங்க அன்புவல்லி (தொழிலாளர்) ஆகியோர் கவிதை பாடி அவையோரைக் களிப்பில் ஆழ்த்தினர்.

மாலை 3 மணிக்கு இனிய இசை நிகழ்ச்சி நடந்தது. திரு சீர்காழி ஜி. சிவசிதம்பரம் அவர்களின் இன்னிசை விருந்து அனைவரையும் கவர்ந்தது.

மாலை 4 மணியளவில் மாலை நிகழ்ச்சி துவங்கியது, செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு கே.ஏ. சுந்தரம் அவர்கள் தமது வரவேற்புரையில் ''சமுதாய மறுமலர்ச்சிக் கவிஞராக-தனக்கென வாழாத் தகைசால் பெருங்கவிஞராக விளங்கிய பாவேந்தர் பாரதிதாசனின் விழாவினை தமிழக அரசு கொண்டாடுவதில் பெருமை கொள்கிறது'' என்றார்.

''பாவேந்தர் பாடல்களில் காதல் உணர்வே விஞ்சி நிற்கிறது என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கா. காளிமுத்து அவர்கள் தலைமை ஏற்றார். திரு. வலம்புரிஜான், திருமதி உமையாள்முத்து இருவரும் வழக்குத் தொடுத்தனர்.

திரு. தமிழ்க் குடிமகன், திருமதி இளம்பிறை மணிமாறன் இருவரும் எதிர்வழக்காடினர்.

இறுதியில் மாண்புமிகு அமைச்சர் திரு காளிமுத்து அவர்கள் தமது உரையில்,

''இவ்வழக்கில் பாவேந்தர் தம் கவிதை வாக்கு மூலத்தின்

*நிகழ்ச்சித் தொகுப்பு*

**பி. வி. கிரி.**

ஜி. ஆனந்தன்.



பாவேந்தர் பாரதிதாசன் விருது பெறும் கவிஞர் முத்துலிங்கம்.

வாயிலாகத் தீர்ப்பு வழங்கமுனை கிறேன்.

''ஏடெடுத்தேன் கவியொன்று எழுதிட என்று தொடங்கிய பாவேந்தர் 'வானம் என்னை எழுது' என்று சொல்லியது' என் றும், 'மான், மயில், கதிர், நிலவு, தென்றல், குன்றம், அனைத்தும் தம்மை எழுதுமாறு கேட்டன என்றும் குறிப்பிட்டு விட்டு இறுதி யில் இன்னலில் சிக்கிய தொழி லாளர்களைக் குறித்து எழுத முனைகிறார்.

''காதல் என்பது விரிந்துபட்ட பொருள் உடையது என்று வலம் புரிஜான் குறிப்பிட்டார். அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவ் வாறின்றி ஆண் பெண் சேர்க்கை தான் காதல் எனக் கருதப்பட் டால் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்.'' என்று குறிப்பிட் டார்.

மாண்புமிகு தலைமை நீதிபதி டாக்டர் திரு மு.மு. இஸ்மாயீல் அவர்கள் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தலைமை நீதிபதி தமது தலைமையுரையில், 'சாதி மத-இனம் அனைத்திற்கும் வேறு பட்டவராக, கட்சி மாச்சரியங் களுக்கு இரையாகாமல் கட்சி களுக்கு அப்பாற்பட்ட ஒப்புயர் வற்ற உண்மைக் கவிஞராக பாரதிதாசன் திகழ்ந்தார்.

'மக்களின் மனப்போக்குக் கருந்தாற்போல் பாடல்களைப் பாடியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் மக்க ளோடு மக்களாக இரண்டறக் கலந்து எழுச்சியான பாடல் களைப் பாடி நீங்காத புகழுடன் மறைந்தும் மறையாத கவிஞராக விளங்குகிறார். இருபதாம் நூற் றாண்டின் இணையற்ற பெரும் கவிஞராக ப்ாரதிதாசன் புகழ்க் கொடி நாட்டினார். எந்தக் கட் டத்திலும் பாரதிதர்சனின் பாடல்கள் வயிற்றுப் பிழைப்புக் காக இருக்கவில்லை.

'சமுதாயத்திலுள்ள சீர்கேட் டைக் களைவதற்கும் சமுதாய மறு மலர்ச்சியையும் எழுச்சியை யும் உண்டாக்குவதற்காகவும் அவ ரது பாடல்கள் அமைந்திருந்தன. சமுதாய விடிவெள்ளியாக விளங் கும் பாரதிதாசனுக்கு விழா எடுப் பது மிக மிகப் பொருத்த முடை யதே' என்பர்.

பேராசிரியர் திரு ந. ராம நாதன் தமது உரையில், உண்மைக் கவிஞராக சுயமரியாதைச் சுட ராக விளங்கியவர் பாரதிதாசன்.

''மாங்குயில் கூவிடும்
பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும்
சிறைச்சாலை'
''மங்கை ஒருத்தி தரும் சுகமும்
எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை'


என்பன போன்ற பாட்டல்கள் சாகாவரம் கொண்ட பாடல் கள் எக்காலத்திற்கும் எக்காலத் தாராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை' என்று மேற்கோ ளுடன் விளக்கினார்.

பேராசிரியர் டாக்டர் திரு ந. சஞ்சீவி அவர்கள் பேசுகையில் ''முத்தமிழுக்கும் பொருந்தும் வித்தகக் கவிஞராக வாழ்ந்து காட்டியிருக்கிறார், பாரதிதாசன். உணர்வுதான் கடவுள் என்ற உயரிய கருத்தைச் சொல்லி விட்டுச் சென்றவர், 'நடுநிலைப்' பார்வையில் யார் அவரைப் பார்த்தாலும் அவர் பெரும் புல வர் என்பதை மறுக்கவோ மறைக் கவோ முடியாது. ''பாவேந்தர் பாரதிதாசன் விருது'' என்ற அறக்கட்டளை அமைத்த தமி ழக முதல்வரைப் பாராட்டு கிறேன்'' என்றார்.

மாண்புமிகு சட்ட-மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப் பித்தன் அவர்கள் பேசுகையில்,

கவிஞர் கவியரங்கம்





பாவேந்தர் பாரதிதாசன் விருது பெறும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் துணைவியார்.

''மாண்புமிகு புரட்சித் தலைவர் தத்துவங்களாக இருக்கிறவர்களுக்கு அரசு சார்பில் விழா எடுக்க ஏற்பாடு செய்திருக்கிற பாங்கினைப் பாராட்டுகிறோம்.

''தமிழ் என்னுடைய உயிர்'' என்று பாடியவர் பாரதிதாசன்-பொதுவுடைமை, சமுதாய ஏற்றத்தாழ்வுகளை விரட்டுவதற்கு வழி என்ன? என்பன போன்ற புரட்சிக் கவிதைகளைப் பாடிப்புகழ் உச்சியில் நிற்கிறவர் பாவேந்தர்.

''அவர் பாடிய பாடல்கள் அனைத்தும் இன்றைக்கு நனவாகிக் கொண்டிருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், ''வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சியுறச் செய்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். சொல்லுக்குச் சொல் சூடேற்றி, பொருளுக்குப் பொருள் ஒளி ஏற்றியவர் பாவேந்தர். பாவேந்தர் எந்தக் கருத்தானாலும் அது மக்கள் மத்தியில் விரைவாகப் போக வேண்டும் என்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டவர். துணிவுடனும் தயக்கமின்றியும் தான் கொண்ட கருத்தை கூறுவார்.

''பாரதி தாசன் இன்றைக்கும்-என்றைக்கும் அணையாத விளக்காக விளங்குகிறார்''என்று புகழ் மாலையும் சூட்டினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கி விழா நிறைவு உரையாற்றினார்.

மாண்புமிகு முதல்வர் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்: 'அமரர் பேரறிஞர் அண்ணா பிறந்த தினத்தில் இருந்து குற்றவியல் நீதிமன்றங்களில் தமிழ் பயன்படுத்தப்படும். சிவில் வழக்கிலும் தமிழைப் புகுத்த இருக்கிறோம் - அனைத்து மாவட்டங்களிலும் தமிழை ஆட்சி மொழியாக்கி வருகிறோம்.

''பாவேந்தரின் நம்பிக்கைக்குரிய பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் துணைவியார் இங்கு வந்து இருக்கிறார். அவருக்கு நாம் காணிக்கை செலுத்த இருக்கிறோம்.


''1958ஆம் ஆண்டு நான் கால் முறிந்து படுக்கையில் படுத்த நேரம். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை இழக்க நேரிட்டது. அவர் உடல் நிலை மோசம் அடைந்தபோது இதனை என்னிடம் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்.

''அவர் படுக்கையில் இருந்த சமயம் அமைச்சராக இப்போது இருக்கும் மாண்புமிகு ஆர். எம். வீ. அவர்களையும் மற்றும் நண்பர்களையும் அனுப்பி வைத்தேன். ஆனால் இயற்கை நம்மை ஏமாற்றிவிட்டது.

''தேவையான சமயத்தில் இயற்கை நம்மை மோசம்செய்து விடுகிறது. தனது பாடல்களில் அவர் தீவிரமான கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்.

''தூங்காதே தம்பி தூங்காதே'' என்ற பாடல் எல்லாத் தரப்பினருக்கும் பொருத்தமானதாக இருந்தது.

''திருடாதே பாப்பா திருடாதே'' என்ற பாடலும் அவர் எழுதியதுதான். இவ்வளவு சிறப்பான அவர் பரிசுபெற இத்தனை யாண்டுகள் காத்துக் கொண்டிருக்க வேண்டியது இருந்தது. இதற்கு முன்பு யாரும் இதனைச் செய்ய முன்வரவில்லை.




இசை நிகழ்ச்சியில் சீர்காழி ஜி.சிவசிதம்பரம்.




வழக்காடு மன்றத்தில்...

''ஜீவாவின் துணைவியாருக்கு உதவிகள் செய்து இருக்கிறோம். இது எனது பணம் அல்ல-மக்கள் தந்த பணம். அது, மக்களின் தலைவர்களுக்கும் கவிஞர்களுக்கும் தொண்டர்களுக்கும் போய்ச் சேருகிறது. விழா கொண்டாடுவதில் மட்டும் மகிழ்ச்சி அடையவில்லை. மக்களுக்குச் செய்யும் நன்மைகளிலும் மகிழ்ச்சி அடைகிறோம் - மக்கள் துணையாக இருந்தால் மேலும் மேலும் பணியாற்ற முடியும்

''கவிஞர் முத்துலிங்கம், ஒரு கவிஞன் எப்படி இருக்கவேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கிறதோ அந்த வகையில் செயல்பட்டவர். இதுபோல, ஆண்டுதோறும் பரிசுகள் தர இருக்கிறோம். இதைச் செய்வதில் சில பிரச்சினைகளும் வரும். மக்கள் எங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்'' என்று தெரிவித்தார்.

*1980 -81* ஆம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருதாக பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களின் துணைவியாரிடமும், கவிஞர் முத்துலிங்கம் அவர்களிடமும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் பத்தாயிரம் வீதம் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கினார். இறுதியில் செய்தி - மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு. கிருஷ்ணபாரதி அவர்கள் நன்றி கூறினார்.

# பெரியார் நினைவுக்குச் சில திட்டங்கள்



**1922** ஆம் ஆண்டில் கேரள மாநிலத்தில் வைக்கம் என்னும் ஊரில் பெரியார் அவர்கள் தீண்டாமையை எதிர்த்துப் போராடிய வரலாற்றின் நினைவாக அவ்வூரில் தந்தை பெரியார் அவர்களின் முழு உருவச் சிலை ஒன்று வைக்கவும், சிலை எழுப்பப்படவிருக்கும் இடத்தில் பூங்கா ஒன்று அமைக்கவும் கேரள அரசின் உதவியுடன் இத்திட்டங்களை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தந்தை பெரியார் மாநாட்டு அரங்கம் திராவிட கட்டிடக் கலையழகும், புதுமையும், வனப்பும், அனைத்து வசதிகளும் கொண்டதாக தந்தை பெரியார் நினைவாகச் சென்னையில் அமைக்கப்படும் திட்டமொன்று ஆலோசனையில் உள்ளது.

மாவட்டத் தலைநகரங்களில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு நினைவுத்தூண்கள் நிறுவப்பட வேண்டும் என்ற திட்டத்தின்படி முதல் நினைவுத்தூண் திருச்சியில் திறக்கப்படவிருக்கிறது. அந்நினைவுத்தூணில் தந்தை பெரியாரின் பொன்மொழிகள் சிறப்பிடம் பெறும்.

தந்தை பெரியார் சிறை வைக்கப்பட்டிருந்த சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மத்திய சிறைச் சாலைகளில் நினைவுக் கல்வெட்டுக்கள் அமைக்கும் ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட உள்ளது.



# உலகெலாம் மெச்சும் ஒப்பற்ற படைப்புகள்

மாமூலன்

**தோ**ன்று தொட்டு நிலவி வரும் பண்பாட்டுப் பெருமைகளையும், பலதலைமுறையாகப் பழகிவரும் கைவினைத் திறன் நேர்த்திகளையும், தமிழகத்தின் கைவினைப் பொருட்கள் உலகுக்குணர்த்திக் கொண்டிருக்கின்றன.

அவனி முழுவதும் தமிழ்நாட்டின் புகழைப் பரப்பிவருகின்ற கைவினைத் திறன் தொழில்களின் நுணுக்கங்கள், வடிவமைப்புக்கள் இவற்றைப் பாதுகாத்து வளர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சி நிறுவனம் (Tamilnadu Handicrafts Development Corporation) மகத்தான சாதனை புரிந்து வருகிறது.


தமிழ்நாட்டுக்கு என்று தனிச் சிறப்புக்குரிய கைவினைப் பொருட்களைத் தயாரித்து விற்பனைக் கூடங்களான 'பூம்புகார்' விற்பனை மூலம் செய்து வருகிறது.


தமிழ்நாட்டின் கைத்திறன் தொழில்களில் தொன்மையானதும் சிறப்பானதும் உலோக வார்ப்படத் தொழிலாகும். கோவில்களுக்கான சிலைகளை உருவாக்குவது இத்தொழிலின் மூலம்தான். கலைச் சிறப்பும் கற்பனை வளமும் கொண்டது இத்தொழில். இவற்றைக் காப்பாற்றி இத்தொழில் சிதைந்து போகா வண்ணம் செயல்பட வைக்கும் பொருட்டு, சுவாமிமலையில் ஒரு பயிற்சி நிலையமும் சேலத்தில் ஒரு பயிற்சி நிலையமும் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்களில் 3 ஆண்டுகளுக்கு ஒரு நிலையத்திற்கு 15பேர் வீதம் பயிற்சி






















கொடுத்து, பயிற்சி பெற்றவர்கள் இத்தொழிலைத் தொடர்ந்து நடத்த வழிவகை செய்யப்பட்டு வருகிறது. அனுபவம், தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களைக் கொண்டு, அடிப்படைத் தொழில் நுணுக்கங்களான மெழுகுவேலை, கரு உருவாக்குதல், மெழுகுவடித்தல், உலோக வார்ப்படம் செய்தல், வார்க்கப்பட்ட சிலையை முழு வடிவத்துக்கு ராவி, சீவி செதுக்கித் தீர்மானம் செய்தல் போன்ற எல்லா நுணுக்கங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இதுவரை இவ்விரு நிலையங்களிலும் 60 பேர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் தொன்மையான தொழில்களில் கற்சிற்பத் தொழிலும் ஒன்றாகும். முற்காலத்தில் கற்கோயில் பல மன்னர்களால் கட்டப்பட்டுள்ளன. அதனால் அவர்கள் தொடர்ந்து இத்தொழிலைக் கடைப்பிடிக்க ஏதுவாக இருந்தது. இக்காலத்தில் அது போன்ற வாய்ப்புகள் இல்லையாதலால், தமிழ்நாடு அரசு அறநிலையத்துறை சார்பில் பல கோவில்களுக்குத் திருப்பணிகளை நடத்தி இக் கைவினைஞர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்புஅளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பல கற்சிற்பத் தொழி

லாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்குடன் மாமல்ல புரத்தில் ஒரு கற்சிற்ப உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு, ஆற்றலும் திறனுமிக்க கைவினைஞரின் கண்காணிப்பில் 20 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்நிலையத்தில் கோவில்களுக்குத் தேவையான சிற்பங்களும் ஏற்றுமதிக்குத் தேவையான சிற்பங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதே போன்று மரச்சிற்பத் தொழிலும் தமிழ்நாட்டின் மிகப் பழமையான தொழிலாகும். கோயில் இரதங்களை உருவாக்குவது இக்கைவினைஞர்களின் முக்கியத் தொழிலாகும். இப்பழமையான தொழில் சிதைவுறா வண்ணம் தொடர்ந்து வளர்வதற்கு வழி செய்யும் வகையில் நாகர்கோயிலில் தேர்ப் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு, 10 தொழிலாளர்களுக்கு மூன்று ஆண்டு காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் இதுவரை சுமார் 60 தொழிலாளர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

## வெளிநாட்டுத் தேர்

நாகர்கோயில் மரச் சிற்பத் தொழில் நிலையத்தின் மூலம் சென்ற ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் ராயவரம் அருகில் உள்ள சாஸ்தா கோவிலுக்கு 36 அடி உயரத்தில் ஓர் இரதம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கோலாலம்பூரிலுள்ள மகாமாரி யம்மன் கோயிலுக்காக 21 அடி உயரத்தில் ஒரு தேர் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பல கோயில்களுக்குத் தேவையான இரதங்கள் பற்றிய மதிப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது. 'பூம்புகார்' எதிர் காலத்தில் தேர் செய்யும் தொழிலில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் தமிழ்நாட்டின்தொன்மையான கைத்திறன் தொழில்களான தஞ்சாவூர் கலைத்தட்டுத் தொழிலுக்கும் தஞ்சாவூர் பாணி ஓவியத்திற்கும் தனித்தனி பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர்க் கலைத்தட்டின் மையத்தில் இதுவரை இந்து கடவுளர் உருவங்கள் மட்டுமே பதிக்கப்பட்டு வந்துள்ளன. தற்பொழுது திருவள்ளுவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, போன்றோரின் உருவங்கள் , தஞ்சைப் பெரிய கோயில், முஸ்லீம் மார்க்கச் சின்னங்கள், கிறிஸ்துவ மதச் சின்னங்கள், பல நிறுவனங்களின் அடையாளச் சின்னங்கள் போன்றவை பதிக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் பாணி ஓவியத்திலும் கிறிஸ்துவ மத உருவங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இந்தப் பொருட்களின் விற்பனை வாய்ப்பை அதிகரிக்க இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதில் நல்ல பயன் விளைந்துள்ளது.







நம்முடைய கைவினைப் பொருட்களில் இன்று உலகத்தோர் அனைவரையும் கவர்ந்துள்ளவைகளாகக் காணப்படுபவைகளில் தஞ்சாவூர்த் தட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளாக தஞ்சாவூரில், தஞ்சாவூர்த் தட்டுகள் கலைப் பொருட்களை



# தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம்

## சில தகவல்கள்



தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனமாகதமிழ்நாடு கைத்திறன் பொருட்கள் வளர்ச்சி நிறுவனம் 1973-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் நாள் நிறுவப்பட்டது. முன்பு அரசின் தொழில் துறையின் கீழ் இயங்கி வந்த விற்பனைகூடங்களின் சொத்துக்களையும், பொறுப்புக்களையும், மற்றும் மாநில கைத்திறத் தொழில் வளர்ச்சி கூட்டுறவு சங்கத்தின் வாணிப விற்பனைப் பொருட்களையும் ஏற்றுக் கொண்டு 1973ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதி முதல் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இதற்கு அடுத்த ஆண்டில் அதாவது 1974-ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் முதல் தொழில் வணிகத் துறையின்கீழ் இயங்கிவந்த 14 உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களையும் இந்நிறுவனம் மேற்கொண்டது.

கைத்திறன் தொழில்களுக்கும் கைவினைஞர்களுக்கும் தொழில் நுட்ப உதவி தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளித்தும் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் வாயிலாக விற்பனை செய்வதன்மூலமும், மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொருட்காட்சிகள் அமைத்து விற்பனை வசதி ஏற்படுத்துவதன் மூலமும் தமிழ்நாட்டில் கைநுட்பத் தொழில் வளர்ச்சியில் தனியானதோர் எழுச்சியையும் புதிய போக்கையும் உருவாக்கிட கைநுட்பக் கலைத்தொழிலை மேம்பாட்டு வளர்ச்சி அடைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு த்னியானதோர் நிறுவனம் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள சென்னை, மாமல்லபுரம், நெய்வேலி, கடலூர், சேலம், வேலூர், ஈரோடு, கோயம்புத்தூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை திருநெல்வேலி, சிதம்பரம் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்கள் மூலமாகவும், புது டில்லி, பம்பாய் மற்றும் பெங்களூரிலுள்ள மூன்று விற்பனை நிலையங்கள் மூலமாகவும் பல்வேறு வகையான கைத்திறன் பொருட்கள் விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம் 1980-81ஆம் ஆண்டில் புதிய விற்பனை நிலையங்களை கன்னியாகுமரியிலும், மதுரையிலும் உள்ள இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டிடத்திலும் துவக்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் 1979-80ஆம் ஆண்டின் வாணிபத் தொகை ரூ. 143 இலட்சமாகும். 1980-81ஆம் ஆண்டிற்கு வாணிபத் தொகை ரூ. 150.00 இலட்சமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம் 17 பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் பலவகை கைத்திறன்களில் கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1979-80ஆம் ஆண்டில் 291 கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கலைத்தட்டு செய்வதிலும், தஞ்சாவூர் வண்ண ஓவியங்கள் தீட்டுவதிலும் பயிற்சி அளிக்க தஞ்சாவூரில் இரண்டு பயிற்சி நிலையங்களை இந்நிறுவனம் துவக்கியுள்ளது. மேலும், வேலூரில் நூக்கமர கைத்திறன் பொருட்கள் பயிற்சி நிலையத்தையும் சென்னையில் நிர்மல் ஓவியம் பயிற்சி நிலையத்தையும், நடப்பாண்டில் துவக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உள்ளூர் மக்களின் விருப்பத்திற்கும், அயல்நாட்டு சுற்றுலாப்பயணிகளின் விருப்பத்திற்கும் ஏற்றபடி, கைவினைப் பொருட்களில் புதிய வடிவமைப்புகளையும் புதிய செயல்முறைகளையும் உருவாக்கி ஒரு வடிவமைப்பு நிலையத்தை சென்னையில் நடத்தி வருகிறது.

செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. தலைமுறை தலைமுறையாகத் தஞ்சாவூர் தட்டுகளைச் செய்யும் வேலைகளில் ஈடுபட்டுள்ள பொற்கொல்லர்கள் குடும்பங்கள் தஞ்சையில் வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு கைத்திறன் பொருள் நிறுவனத்தின் பயிற்சிக் கூடத்தில் இன்று பலர் ,தஞ்சாவூர்த் தட்டு செய்வதில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தஞ்சாவூர்த் தட்டு ரூ.15 முதல் ரூ. 15,000 வரை செய்யப்படுகிறது. மூன்று அங்குலம் விட்டம் உள்ள தட்டு முதல் 48 அங்குலம் விட்டம் உள்ள தட்டு வரை செய்யப்படுகிறது. இன்று உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் நாட்டுகைவினைப் பொருட்களில் ஒன்றாகத் தஞ்சாவூர்த் தட்டு திகழ்கிறது. உலகிலேயே இது போன்ற கைவினைப் பொருள் தமிழ்நாட்டில் தான் தயாரிக்கப் படுகிறது.

### காகிதப் பொம்மைகள் - மண் பொம்மைகள்

சென்னை, கல்லூரிச் சாலையிலுள்ள வடிவமைப்புக் கூடத்தில் உற்பத்தி யாகும் கைவினைப் பொருட்களில்தான் எத்தனை விதம்!

காகித பொம்மைகளில் எத்தனை விதமான பொம்மைகள்! ஒவ்வொன்றும் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளன.

'' Terrocotta '' என்று அழைக்கப்படும் சுட்ட மண் பொம்மைகள், செய்கிறார்கள். வெளிநாட்டாரைக் கவரும் வகையில் இப்பொம்மைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பித்தளைத் தகட்டில் உருவம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வரு, கின்றன.

தமிழ்நாட்டின் கைவண்ணப் பொருட்களின் களஞ்சியமாகத் திகழும் பூம்புகார் விற்பனைக் கூடங்களில் விற்கப்படும் கைவினைப் பொருட்கள் இன்று உலகப் புகழ் பெரும் அளவில் வளர்ந்துள்ளன. இதற்கு அடிப்படையாக இருந்து, தரமான கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம் நாள்தோறும் வளர்ந்து வருகிறது.

அமெரிக்கா ஜப்பான், கிழக்கு ஆசிய நாடுகள், இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளில் நமது கைவினைப் பொருட்கள் எதிர்காலத்தில் மேலும் விற்பனையாகும் நல்வாய்ப்புகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. தனியான கலைச் செல்வமாக-தரமான கைவினைப் பொருட்களாக உற்பத்தியாகும் தமிழ்நாட்டுக் கைவினைப் பொருட்களால் நம் அனைவருக்குமே பெருமை!

வாழ வழிகாட்டும் வங்கி:



# கூட்டுறவில் வளரும் ஒரு கோபுரம்!

அதோ! வருகிறாரே ஒரு இளைஞர், அவர் பி.ஏ., பட்டதாரி!

படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லையே என்று சும்மா ஊர் சுற்றி வரவில்லை அவர்; வேலைக்கு ஒரு பக்கம் முயன்று கொண்டிருந்தாலும், பொழுதை வீணே கழிக்க விரும்பவில்லை அவர்.

அவருக்கு ஒரு யோசனை வந்தது. அவருடைய தந்தையார் தையல் தொழில் செய்து வந்தார். அந்தத் தொழில் இவருக்கும் தெரியும். அதில் கவனம் செலுத்தினால் என்ன? மனம் அவரை உந்தித் தள்ளியது.

தையல் தொழில்தான் என்றாலும், கடைக்கு இடம் பார்க்க வேண்டும், தையல் மிஷின் வாங்க வேண்டும், இதற்கெல்லாம் பணத்துக்கு எங்கே போவது? எவ்வளவு வேகத்துக்கு ஆர்வம் அவரை முன்னுக்குத் தள்ளியதோ, அதே வேகத்துக்குப் பொருளாதாரச் சிக்கல் அவரைப் பின்னுக்குத் தள்ளியது! அப்போதுதான் அவருக்கு உதவி செய்ய முன் வந்தது ஒரு கரம். அந்தக் கரம் தான் அவர் வாழ வழி காட்டிய வங்கி! ஆம். அதுதான் 'தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்'. (Tamilnadu State Co-operative Bank Ltd.)

சென்னை மந்தைவெளியைச் சேர்ந்தவர் எம். கமாலுதீன், பி.ஏ., (தமிழ்) பட்டம் பெற்றவர். இந்த வங்கி கொடுத்த ரூபாய் ஆயிரத்தில் தையல் தொழிலைத் தொடங்கினார். இப்போது சாந்தோமில் தையற் கடை வைத்திருக்கிறார். இரண்டு தையல் மிஷின்கள் வைத்துக் கொண்டு சொந்தக் காலில் நிற்கும் இவர், 'வேறு வேலை கிடைத்தாலும் இந்த வேலையைவிட மாட்டேன்!' என்கிறார்.

இதேபோல, தங்கசாலையைச் சேர்ந்த எம். ராஜேந்திரன் அவர்களும் சொந்தமாகத் தையற் கடை வைத்திருக்கிறார். இந்த வங்கி இவருக்கு ரூ. 2,000 கடன் தந்து உதவியிருக்கிறது.

இப்படி, சமுதாயத்தின் அடித்தட்டில் இருக்கின்ற நலிந்தவர்களுக்கு நல்வாழ்வு தருகின்ற வகையிலே தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட், சிறு தொழில் முதல் பெருந்தொழில் வரை வளர்வதற்கு உதவி பல புரிந்து வருகின்றது.

சென்னை நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் சாலையிலுள்ள இந்த வங்கியின் தலைமையகத்துக்குள் நுழைகிறோம். வானளாவ நிற்கும் இந்த வங்கியின் வரலாற்றை ஓரளவு தெரிந்து கொள்கிறோம்.

1905ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இந்த வங்கியின் வயது எத்தனைத் தெரியுமா? எழுபத்தைந்து ஆண்டுகள்! ஆம். எழுபத்தைந்து ஆண்டுகள் ஏறுநடை போட்டு இந்த வங்கி இன்று பவள விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. துவக்கத்தில் இதன் பெயர்: 'சென்னை மத்திய நகர வங்கி'.

கடந்த 75 ஆண்டுகளாக தமிழகத்தில் தன் கூட்டுறவுப் பணியில் கோபுரமென வளர்ந்துவரும் இந்த வங்கி, பல்வேறு பணிகளுக்காகக் கடன்கள் தந்து உதவி வருகின்றது:

* விவசாயக் கடனுதவி.
* கைத்தறி நெசவு உற்பத்தி மற்றும் விற்பனைக்கான கடன்கள்.
* கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பு ஆலைகள் ஆகியவைகளின் முதற் பொருள் மூதலனம் மற்றும் நடைமுறை மூலதனக்கடன் வசதி.
* உர வினியோகம், அத்தியாவசியப் பொருள்கள் விநி

பி. வி. கிரி

யோகம் ஆகிய கூட்டுறவு முயற்சிகளுக்கு நிதி வசதி.

* சிறப்பங்காடிகளுக்குக் கடனுதவி.

* நகைக் கடன் உதவி (நேரிடை மற்றும் மறுநிதிக் கடன்).

* சுயதொழில் வளர்ச்சிக்குக் கடன் உதவி, மாதச் சம்பளம் பெறுவோர்க்குக் கடன் உதவி மற்றும் பயன் படுபொருள் பெறக் கடன் உதவி.

* சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல்.

* மாநில தொழில் கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவு மாநில நிலவள வங்கிகளுக்கு நிதி வசதியளித்தல்.

* தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு நிதி உதவி அளித்தல்.

* விவசாய வளர்ச்சிக்குஉதவுகின்ற அரசு நிறுவனங்களுக்கு நிதிஉதவி அளித்தல் (உத்தேசிக்கப்பட்டுள்ளது)

மேலே கூறப்பட்டுள்ள பணிகளுள், ஒரு சில அம்சங்களைத் தவிர ஏனைய அனைத்திலும், மாநில கூட்டுறவு வங்கி, தான் இயங்குகின்ற முறையில் வங்கிகளின் வங்கியாக (Federal) கூட்டுறவுகளின் மாநில அமைப்பாக (Apex Body) இயங்கி வருகின்றது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கிராம அளவில், தமிழகத்தில் இன்று ஏறக்குறைய 5000 விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவின் ஆணிவேர் அமைப்புக்களாக (Grass Root Agencies) விவசாயிகளுக்குப் பெரும்பணி ஆற்றிவருகின்றன. வட்ட அளவில், ஒன்றிய அளவில், 129 கூட்டுறவு நகர வங்கிகள் இயங்கி வருகின்றன. மாவட்ட அளவில் 16 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவின் கேந்திரமான அமைப்புக்களாகச் செயலாற்றி வருகின்றன. இந்த அமைப்புகள் அத்தனைக்கும் தலைமை அமைப்பாக, உயிர் நாடியாக, சிந்தனைப் பெட்டகமாக உயர்ந்தோங்கி நிற்கிறது தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி.

கண்ணைக் கவரும் வண்ண வேலைப்பாடுமிக்க கைத்தறித் துணிகள் ஏழை, எளிய நெசவாளர்களின் கைவண்ணத்தால் உருவாவது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் இன்று ஏராளம்! ஏராளம்! அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நெசவாளர் சங்கங்கள் உற்பத்தி செய்த கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதில் 'கோ-ஆப்டெக்ஸ்' என்னும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் முக்கிய இடம் வகிக்கிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான நூல் வழங்கும் பணியையும் மேற்கொண்டுள்ளது. இந்தப் பணிகளுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்தை கோ-ஆப் டெக்ஸுக்கு ரிசர்வ் வங்கியின் மறு நிதி உதவியுடன் இவ்வங்கி அளித்து வருகிறது. 1979-80ஆம் ஆண்டிற்கென கைத்தறித்துணி உற்பத்தி மற்றும் விற்பனைக்காக ரூ. 1000.00 இலட்சமும், கைத்தறி நூல் விற்பனைக்காக ரூ. 200.00 இலட்சமும் வழங்க கடன் வரம்பு அனுமதிக்கப் பட்டுள்ளது.

நிலவள வங்கி, கடன் வழங்கி அடமானங்கள் திரட்டிக் கடனீட்டுப் பத்திரம் மூலம் நிதி- திரட்டும் முன், பிரதம நிலவள வங்கிகள் மூலம் நில வளர்ச்சிக்கும், டிராக்டர் முதலிய இயந்திரச் சாதனங்கள் வாங்கவும், கடனுதவி வழங்கவும், மற்றும் அவ்வங்கியின் இதர நடவடிக்கைகளுக்காகவும் வங்கி, தனது சொந்த நிதியிலிருந்து ரூ. 750.00 இலட்சம் வரை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கு அனுமதித்துள்ளது.



தனி அலுவலர்

திரு. இரெ. ஆறுமுகம்




பொது மேலாளர்

திரு. டி. ஆர். ராமமூர்த்தி

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் நடைமுறை மூலதனத்திற்கு இவ்வங்கி நிதி உதவி அளித்து வருகிறது. இந்நிறுவனம் தஞ்சாவூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களிலுள்ள பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இரசாயன உரங்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு நிதி உதவி அளிப்பதுடன் இவ்வங்கி உர உற்பத்தியாளர்களுக்குக் கடன் உத்தரவாதமும் அளிக்கிறது. இதற்காக இது அமைத்துள்ள சுழல் நிதி வரையறை ரூ. 500.00 இலட்சமாகும்.

விளைந்த பொருளுக்கு நல்ல விலை கிடைத்தால்தான் விவசாயிகளின் வாழ்வு மலரும். அந்த நல்ல குறிக்கோளை அடையும் பொருட்டு, இந்த ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஏறத்தாழ 17 கோடி ரூபாய்க்கு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தது. இதற்கு வேண்டிய முழு நிதி வசதியையும் மாநில வங்கி கொடுத்து உதவியது.

நுகர்வோருக்குத் தேவையான பொருள்களை விற்பனைச் சங்கங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகளுக்கு இந்நிறுவனம் கொள்முதல் செய்து விநியோகித்து வருகிறது. இதற்காக சம்மேளனத்தின் நடைமுறை மூலதனத்திற்கு வங்கி ரூ. 150.00 இலட்சம் காசுக் கடன் வசதி அளித்துள்



ளது. மத்திய அரசின் உத்தர வாதம் பெற்று கொள்முதல் செய்த பொருள்களின் பேரில் 10 சதவிகிதம் வரம்பு வைத்தும் அதற்கு மேற்பட்ட அளவில் கொள்முதல் செய்த பொருள்களின் பேரில் 40 சதவிகிதம் வரம்பு வைத்தும் நிதி வசதி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி, தமிழ்நாட்டிலுள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. அவ்வங்கி தேயிலைத் தொழிற்சாலை மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலை சேவா சங்கங்களுக்குக் கடன் வழங்கத் தேவையான நிதி வசதியை 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் இவ்வங்கி அளித்து வருகிறது. இதற்கு அளிக்கப்பட்டுள்ள காசுக் கடன் வரம்பு தொகை ரூ. 150.00 இலட்சமாகும்.

இவ்வங்கி தன் சொந்த நிதியிலிருந்து பெருமளவு தமிழகத்திலுள்ள சர்க்கரை மற்றும் நூற்பாலைகளுக்குத் தேவைப்படும் நீண்டகாலக் கடன்களை அளித்து வருகிறது. மேலும் சர்க்கரை மற்றும் நூற்பாலைகள் இயந்திரச் சாதனங்களைத் தவணை முறையில் பெறுவதற்குத் தேவையான உத்தரவாதம் மற்றும் பொறுப்பும் வங்கி அளித்து உதவுகிறது.

பல் கடன் நிவாரண நடவடிக்கைகள் காரணமாகத் தனிப்பட்டோர் வழங்கும் கடன் வசதி குறைந்து விட்டது. எனவே, சென்னை நகரில் இந்த வங்கி அதன் கிளைகள் மூலம் தங்க நகைகளின் ஈட்டின் பேரில் கடன் வசதி அளித்துவருகிறது. 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் 3 கிளைகளில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தற்போது மேலும் 15கிளைகளில் செயல்படுத்தப்படுகிறது. 31.12.1980 வரை 46,687 பேர்களுக்கு நகைக் கடன் வழங்கி ரூ. 200.18 இலட்சமும் அத்தேதியில் நிலுவையிருந்தது.

மேலும் நகர வங்கிகள், பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தங்க நகையின் பேரில் வழங்கும் கடன்களுக்கு வங்கி மறுநிதிக் கடன் வழங்கி வருகிறது. இவ்வகையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வரம்பு ரூ. 3302.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, 31.12.1980 தேதியில் ரூ. 885.60 இலட்சம் நிலுவையிருந்தது.

நலிவுற்ற பிரிவினருக்குக் கடன் வழங்கும் பணியிலும் வங்கி ஈடுபட்டுள்ளது சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷா, தையல் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், நடமாடும் இஸ்திரி வண்டி முதலியன வாங்கி அவை மூலம் சுயதொழில் செய்து தங்கள் பொருளாதார நிலையை வளமாக்கிக் கொள்ள ரூ. 2000 வரை கடன் வழங்கி அதை 24 மாதத் தவணைகளில் எளிய வட்டியுடன் திரும்பி பெறும் கடன் திட்டம் 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மேதகு ஆளுநர் அவர்களால் துவக்கப்பட்டது. இதுவரை 765 பேர்களுக்கு ரூ. 8.76 இலட்சம் கடனாக வங்கி வழங்கி உள்ளது. மேலும் மத்திய கூட்டுறவு வங்கிகள் இத் திட்டத்தின்கீழ் வழங்கும் கடன்களுக்கு மறுநிதி வசதி அளிக்க வங்கி முன் வந்துள்ளது.

ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினரல்லாத, பல நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் வங்கி கடன் உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 2000 அல்லது இரண்டு மாத மொத்த சம்பளம் இவற்றில் குறைந்ததொகை கடனாக வழங்கப்படுகிறது. இக்கடன் குறைந்த வட்டியுடன் 12 மாதத் தவணைகளில் திரும்பிச் செலுத்தப்பட வேண்டும். 31.12.1980 வரை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களில் நிலுவை பாக்கி ரூ.62,413 ஆகும்.


1979ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வங்கியின் ஊழியர்கள் சங்கத்துடன் உடன்பாடு செய்து, ஊழியர்கள் தேர்வு, நியமனம், பதவி உயர்வு, ஊழியர்கள் ஒழுங்குமுறை மற்றும் கட்டுப்பாடு போன்றவை குறித்து வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை தொகுப்பு ஒன்று நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இது வங்கியின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் துவக்கியுள்ளது.

சென்னை நகரில் வங்கியின் 27 கிளைகள் இயங்கி வருகின்றன. குடியிருப்புப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள இக்கிளைகள் யாவும், பொதுமக்களின் வசதிக்கேற்ப காலையிலும், மாலையிலும், தினசரி இரண்டுமுறை செயல்பட்டு வருகின்றன. தலைமை அலுவலகத்திலும் கிளைகளிலும் பாதுகாப்புப் பெட்டக வசதி பொதுமக்கள் உபயோகத்திற்காக உள்ளன.

1978ஆம் ஆண்டு மே மாதம் வங்கி இரண்டு மண்டல அலுவலகங்களைச் சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாகத் துவக்கியுள்ளது. மற்றுமொரு உதவி மண்டல அலுவலகம் சேலத்தில் 18.3.1980ல் திறக்கப்பட்டுள்ளது. இவை மத்திய கூட்டுறவு வங்கிகளின் வங்கி நடவடிக்கைகள் மற்றும் கடன் வழங்கும் முறைகளைப் பரிசீலித்து முன்னேற்றம் காண உதவுகின்றன. மத்திய வங்கிகளை ஆய்வு செய்யவும் மண்டல அலுவலகங்கள் உதவுகின்றன.

இவ்வங்கி தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி முதலிய பொருள்கள் வாங்கவும் கடன் வழங்கி வருகிறது.

நலிந்தோர்க்கு நடமாடும் இஸ்திரிப் பெட்டிக் கடை.



TNSC BANK

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி முதன் முறையாக 1980 நவம்பர் திங்களிலிருந்து தேசிய அளவில் இயங்கும் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்கு நிதி உதவி வழங்க ஆரம்பித்தது. இதன் தென்மண்டல அலுவலகத்தின் பொது விநியோகத்தை வலுப்படுத்த இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

மாநில மற்றும் மத்திய கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகளில் உள்ளது போல தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் நிர்வாகமும் 10.6.1976 முதல் தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட தனி அதிகாரியின் பொறுப்பில் இருந்து வருகிறது.

இந்த வங்கியில் கடன் உதவி பெற்று சோளப்பொறி (பாப் கார்ன்) தயாரிப்பவர் திருவல்லிக்கேணியைச் சேர்ந்த எஸ். சீனிவாசன், கடந்த பத்து ஆண்டுகளாக இவர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளார். இந்த வங்கி இவருக்கு ரூ. 2,000 கடன் தந்திருக்கிறது. முதலில் சோளப்பொறி தயாரிக்கும் ஒருவரிடம் மாதம் ரூ. 150க்கு வேலை செய்து கொண்டிருந்த இவர், சொந்தமாகத் தொழில் தொடங்க முனைந்தபோதுதான், இவ்வங்கி இவருக்குக் கடன் தந்தது. இப்பொழுது இவர் சோளப்பொறி தயாரித்து மூன்று திரைப்பட அரங்குகளுக்குச் 'சப்ளை' செய்கிறாராம். இதன் மூலம் இவருக்கு மாதம் ரூ. 500 வருமானம் கிடைக்கிறதாம்! அதில்தவணைத் தொகையையும் தவறாமல் கட்டி வருகிறார் இவர்.

பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த என்.கே. விஜயன் சிந்தாதிரிப்பேட்டையைச் சேர்ந்தவர். வேலைக்கு முயன்று வந்தாலும், தன் தந்தை வைத்துள்ள பெட்டிக் கடையில் உதவியாக இருந்து வருகிறார். வங்கி தந்த ஆயிரம் ரூபாயில் பொருள்களை வாங்கிப் போட்டிருக்கிறார். ''வெளியில் கடன் வாங்கினால் வட்டி அதிகம் தரவேண்டியிருக்கிறது. சமாளிக்கவும் முடியாது. ஆனால் இந்த வங்கியில் குறைந்த வட்டிக்குக் கடன் தந்ததால், காலை உறுதியாக ஊனமுடிகிறது'' என்கிறார் இவர்.

இதேபோல, தங்கசாலையைச் சேர்ந்த ஆர். ராமச்சந்திரன் வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருக்கிறார். கடந்த 9 ஆண்டுகளாக இதே வியாபாரம் தான். இடையில் புணமுடை ஏற்பட்டது. வியாபாரம் படுத்து விடுமோ என்ற நிலையிலிருந்தது. அந்த இக்கட்டான சமயத்தில் இந்த வங்கி இவருக்கு ரூ. 2,000 கடன் தந்து உதவியது. தவணைப் பணத்தையும் ஒழுங்காகச் செலுத்திவிட்டு, ஐந்துபேர் கொண்ட தன் குடும்பத்தையும் பட்டினி இல்லாமல் கவனித்து வருகிறார் இவர்.

இந்த வங்கியின் **பொது மேலாளர், திரு டி. ஆர். ராமமூர்த்தி** அவர்களைச் சந்திக்கிறோம். அவர் கூறுகிறார்:

''சொந்தமாகத் தொழில் செய்யவும், அவர்கள் சொந்தக் காலில் நிற்கவும் நாங்கள் ஏழை எளியவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா வாங்கித் தருதல், நடமாடும் இஸ்திரிப் பெட்டி வண்டி வழங்குதல் போன்ற உதவிகளைச் செய்து வருகிறோம். இந்த இரண்டு வண்டிகளும் டான்சியின் தயாரிப்புகளாகும்''.

குறிப்பாக, என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்? எதிர்காலத் திட்டங்கள் என்னென்ன? என்பது பற்றியெல்லாம், இந்த வங்கியின் **தனி அலுவலர்-நிர்வாக இயக்குநர் திரு இரெ. ஆறுமுகம் அவர்கள்** சொல்லக் கேட்போமா?

''உலக ஊனமுற்றோர் நலன் ஆண்டானதால், அதனையொட்டி ஊனமுற்றவர்களுக்குக் கடன வழங்கும் திட்டம் ஒன்றை விரைவில் செயல்படுத்த எண்ணியுள்ளோம். சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், அவர்கள் சிற்றுண்டி பங்க் வைத்தல், தையலகம், பழைய பேப்பர் கடை, பெட்டிக்கடை போன்றவைகளுக்குக் கடனுதவி தரவிருக்கிறோம். ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளுக்கு, பொருளாகவோ, அல்லது பணமாகவோ உதவி செய்யும் திட்டம் ஆலோசனையில் உள்ளது. சிறிய அளவில் பள்ளி ஒன்று துவக்கும் திட்டமும் உள்ளது.

''தமிழ்நாட்டில் எண்ணெய் வளம்பெருக்கிடும் நோக்கில்,எண்ணெய் வித்துக்கள் கூட்டுறவு இணையத்திற்கு முழு அளவில் நிதி உதவியளிக்க முனைந்துள்ளோம். இதேபோல பால்வள நிறுவனத்துக்கும் இவ்வங்கி நிதி உதவி செய்யும். விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் விவசாயத்துக்குத் தேவையான இடு பொருட்கள் வழங்கிட இந்த வங்கி உதவி செய்யும். சுமார் 20,000 கூட்டுறவு அமைப்புகள் வளம் பெற இந்தத் தலைமை வங்கி இயங்கிக் கொண்டிருக்கின்றது.

''மேலும், சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகள் ஆகியவற்றுக்கும் நாங்கள் கடன் தந்து உதவுகிறோம். ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்-இதுதான் இந்த வங்கியின் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைய விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு மத்தியக் காலக் கடன்களாக கறவை மாடுகள் வாங்குதல், பண்ணை அமைத்தல், ஆடு கன்றுகள் வளர்த்தல், மீன்வளர்த்தல், பட்டு உற்பத்தி போன்றவற்றுக்கு உதவத் திட்டம் உள்ளது. வரும் ஆண்டில் செயல் படுத்த வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன''

இவை மட்டுமா? தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம், தேசிய விவசாய விளைபொருள் கூட்டுறவு விற்பனை இணையம்-இவை போன்ற தேசிய கூட்டுறவு நிறுவனங்களுக்கும், பல வங்கிகள் இணைந்து கடன்வழங்கும் முறையில் முதன் முறையாக இது நிதி உதவி அளிக்கிறது. இந்த வகையில் இவ்வங்கி ஓர் முன்னோடியாகவும் விளங்கி வருகிறது.

மாணவர்களுக்கு மலிவு விலையில் பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் நியாய விலையில் வழங்கிட 'மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டமும் செயல் படுத்தப்படுகிறது.

டெபாசிட்டைப் பொருத்த வரையில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை விட, கால் சதவீதம் கூடுதலாக வட்டித் தருகிற ஒரே ஷெட்யூல் வங்கி, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிதான்

கிராமங்களில்' ஊருக்கு ஓர் அங்காடி' என்னும் திட்டத்தின் கீழ், அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் அங்காடிகள் இன்று செயல்பட்டு வருகின்றன.


மாவட்டந்தோறும் 'கிராம ஏற்புத் திட்டம்' ஒன்றும் விரைவில் செயல்படவுள்ளது.

இவ்வாறு, பல்வேறு ஆக்கப் பணிகளுக்கு ஊக்கமூட்டும் வகையிலே கடனுதவி தந்து தன் கடமையைச் செவ்வனே ஆற்றிவரும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, கூட்டுறவிலே வளரும் ஒரு கோபுரமாக உயர்ந்து வருகிறது என்று சொன்னால் அது முற்றிலும் உண்மையே!

தமிழ் வளர்த்த பெரியார்கள்

# பேராசிரியர் சி. இலக்குவனார்

இல. பழனியப்பன்



தஞ்சைத் தரணி தமிழுலகத்திற்கு அளித்த தமிழறிஞர்களில் தலையானவர் பேராசிரியர் இலக்குவனார். அவரைப் போன்ற ஈடு இணையற்ற ஒரு தமிழ்ச் சிங்கத்தை இனி தமிழகம் காண்பதரிது.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியாம் தமிழ் குடியின் ஒப்பற்ற கருவூலம் உயரிய செந்தமிழை அணுஅணுவாகப் பகுத்துப் படித்த பேராசிரியர் இலக்குவனார் 17.11.1910ல் தஞ்சை மாவட்டம் வாய்மைமேடு என்னும் சிற்றூரில் சிங்காரவேலு, இரத்தினம் தம்பதிகளின் தவப் புதல்வராகத் தோன்றினார். இவரது கல்விப்பணிக்கும் மொழி பணிக்கும் வித்திட்டது, திருவையாற்றில் உள்ள அரசர் கல்லூரி எனில் மிகையாகாது.

பல தமிழ் அறிஞர்களை உருவாக்கி தமிழன்னைக்குப் புகழாரம் சேர்த்த இலக்குவனார் தமிழ் நாடு முழுவதும் பல கல்வி நிறுவனங்களில் தமிழ்ப் பேராசிரியராகவும் ,முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் அவர் வெளி மாநிலத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உசுமானியாப் பல்கலைக் கழகத்தில் அவர் ஆற்றிய மொழிப் பணி தனித்தன்மை வாய்ந்த பணியன்றோ?

இளமை முதல் இறுதிவரை ஒவ்வொரு கட்டத்திலும் அவர் வாழ்க்கை ஓர் போராட்டக் களமாகவே அமைந்தது எனலாம். தேனியைப் போன்று பம்பரமாய் உழைத்து, தன் சொந்த முயற்சியாலும், மொழியுணர்வாலும் முன்னுக்கு வந்தவர் பேராசிரியர் இலக்குவனார்.

தமிழ்க் கருவூலமாகத் திகழும் தொல்காப்பியம் பற்றி ஆய்வு நடத்தி உலகப் புகழ் பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தில் அந்தக் காலத்திலேயே 'டாக்டர்' பட்டம் பெற்றமை அவரது தனித்தன்மைக்குத் தலைசிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் துணிவு நம்பேராசிரியருக்கே ஏற்பட்டது. மிக ஆழமான நுட்பமான இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியத்தை மொழி பெயர்த்து உலக நாட்டார் தமிழை அதன் தனித்தன்மையை உணர வைக்கும் அளவிற்கு அவர் கற்ற கல்வி ஆழமான கல்வியாகும்.

'குறள்நெறி' எனும் பத்திரிகையைத் தன் மொழிப் போராட்ட வாழ்வின் கேடயமாகப் பயன்படுத்தினார். அதுமட்டுமின்றி குறள்வழி இறுதிவரை வாழ்ந்தும் காட்டினார். வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த வைர நெஞ்சம் அவர் நெஞ்சம்.

தமிழ் மொழியைக் காக்க பல முறை பல வழிகளில் போராடிய பேராசிரியரவர்கள், தமிழைப் பயிற்று மொழியாக்கப்பட்ட பாடு ஏராளம். ஆம். தமிழ் பயிற்றுமொழிக் கொள்கையை வலியுறுத்த 1965ஆம் ஆண்டு மதுரையிலிருந்து புறப்பட்ட வீரத்தமிழ் மறவர் படையின் தானைத் தலைவர் ஐயா இலக்குவனார் அவர்கள்.

சாமி சிதம்பரனாரின் மாணவரான பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் பெரியார் அவர்களின் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளிலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றலிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். அவ்வாறே பெருந்தலைவர் காமராசரின் கல்விப் பணி சிறக்க இறுதிவரை உறுதியாகப் பாடுபட்டவர். தமிழுக்கும், தமிழ் நாட்டவருக்கும் நன்மை பயக்கும் எந்தப் பணியையும் தன் சொந்தப் பணியாகச் சிரமேற்கொண்டு பணியாற்றிய பெருந்தகை.


தமிழகப் புலவர் குழுவில் சிறப்பான பங்கு வகித்த பேராசிரியர் அவர்கள், அக்குழுவின் வளர்ச்சிக்குப் பல்லாற்றாலும் அமைதியாக ஆரவாரமின்றி உழைத்தார்கள்: ''தமிழ்ப் பகைவர் எமது பகைவர். தமிழ் நண்பர் எமது நண்பராவர்'' என்பதே இலக்குவனாரின் சீரிய கொள்கையாகும்.

அந்தக் காலத்தில் மிகச்சிறந்த நூலாசிரியராக விளங்கியவர்களுள் தலையாயவர் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள். சங்க இலக்கியத்தைப் பற்றி தாழ்வாகத் தமிழர்களே கருதிக் கொண்டிருந்த காலத்தில், அதன் பெருமையை உணர்த்த 'சங்க இலக்கியம்' என்ற தமிழ் வார இதழை 1944ல் நெல்லையில் தொடங்கி மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார். டாக்டர் மு.வ. மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் போன்றோர் கட்டுரைகள் தொடர்ந்து இடம் பெற்றன. டாக்டர் மு.வ. அவர்கள் எழுதிய இலக்கியக் காட்சிகள் கட்டுரைகளுக்குச் 'சங்க இலக்கியமே' ஓர் தூண்டுகோலாக அமைந்தது எனில் மிகையாகா. 'சங்க இலக்கியம்' வார இதழ் மட்டுமல்லாமல் 'இலக்கியம்'. 'திராவிடக் கூட்டரசு' 'குறள் நெறி, ஆகிய தமிழ இதழ்களையும், 'குறள் நெறி; 'திராவிடக்கூட்டரசு' ஆகிய ஆங்கில இதழ்களையும் சிறப்பாக நடத்தி சிறந்த பத்திரிகையாளர் ( Journalist ) என்ற பெருமையையும் நிலைநாட்டினார்.

அவ்வாறே குறள்நெறியை நாளிதழாகவும் நடத்திக் காட்டிய பெருமை ஐயா அவர்களையே சாரும். 'தமிழ்நாடு' நடுநிலை நாளிதழ் நின்ற பின்னர் 'குறள்நெறி'யை நாளிதழாக்கித் தமிழ்த் தொண்டாற்றினார்.

'வள்ளுவர் வகுத்த அரசியல்'. 'வள்ளுவர் கண்ட இல்லறம்'. 'தொல்காப்பிய ஆராய்ச்சி', 'பழந்தமிழ்', 'தமிழ் கற்பிக்கும் முறை' ஆகிய நூல்கள் காலத்திற்கு அப்பாற்பட்டவையாக

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—
தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!
டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

இன்னும் நிலைத்து நிற்கின்றன. ஐயா அவர்களின் திறன் ஆய்விற்கும் ஆராய்ச்சித் திறமைக்கும் பெருமை சேர்க்கும் நன் முத்துக்களாகத் திகழ்கின்றது.

ஒரு நாட்டின் வரலாற்றை, உண்மையான பண்பாட்டை எடுத்துக் காட்டும் கண்ணாடி, அந்நாட்டின் இலக்கியங்களே என்றும் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்கிறது, பேராசிரியர் அவர்களின் 'இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்) எனும் வரலாற்றுப் படைப்பு.

கல்விப்பணி சிறக்க காலமெல்லாம் உழைத்த பெருந்தலைவர் காமராசா வாழ்க்கை வரலாற்றை 'கர்மவீரர் காமராசர்' எனும் அழகிய வரலாற்று நூல் வாயிலாகத் தமிழர்களுக்கு வழங்கியுள்ளார்கள். அவ்வாறே 'என் வாழ்க்கைப் போர்' (இளமைப் பருவம்) என்ற பெயரில் தன் வாழ்க்கை வரலாற்றை மேல் நாட்டு இலக்கிய மரபு துணை கொண்டு அழகாக சுவைபட ஆக்கித் தந்துள்ளார்கள். அது பேராசிரியர் அவர்களின் சொந்தவாழ்க்கைப் போர்' என்றுசொல்வதை விட, தமிழ்நாட்டுப் பண்பாட்டுப் போர் என்பதே சாலப் பொருந்தும்.

பேராசிரியர் அவர்கள் ஓர் சிறந்த கவிஞருங்கூட. அவருடைய கவித் திறனுக்கு 'எழிலரசி' 'மாணவர் ஆற்றுப்படை', 'துரத்தப்பட்டேன்', 'அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து' ஆகியவை சான்றாக விளங்குகின்றன.

அவ்வாறே பேராசிரியர் அவர்களின்' திருக்குறள் எளிய பொழிப்புரை' மற்றும் தொல்காப்பிய விளக்கம் ஆகியவைகளைக் கொண்டு தமிழ் தெரியாதவரும் எளிய இனிய செந்தமிழ் விருந்துண்ணலாம்.

ஆங்கிலத்தின் உதவியை தமிழ் வளர்ச்சிக்கு என்றைக்கும் பயன் படுத்திய ஒரு சில தமிழறிஞர்களுள் இலக்குவனார் அவர்கள் முதன்மையானவர்கள்.

(1) The making of Tamil Grammar
(2) A brief study of Tamil words.
(3) Tamil Language.
(4) Semanterms and Morphemes in Tamil Language.
(5) Tholkappiam in English with critical studies.

—ஆகிய ஆங்கில நூல்கள் ஐயா அவர்களின் இலக்கணத் திறமைக்கும், ஆங்கிலப் புலமைக்கும் ஓர் சவாலாகத் திகழ்கின்றன. தொல்காப்பியம் ஆங்கில நூலைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்றிருந்தபோது,அங்குள்ள பல்கலைக் கழகங்களுக்கு வழங்கியதே அந்த நூலுக்கு உள்ள தனித்தன்மையைக் காட்டுகிறது.

கல்வித் துறையில் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய பணியின் விளைவால் இன்று தமிழகம் முழுவதும் தமிழுணர்ச்சி மேலோங்கி நிற்கிறது. பாடம் சொல்லிக் கொடுக்கிறார் என்று சொல்வதைவிட, தமிழர்களுக்கு தமிழ் வரலாற்றைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் என்று சொல்வதே பொருந்தும். 'தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா, தமிழ் சோறு போடுமா?' என்று கேலியும், கிண்டலும் பேசியவர்கள் மத்தியில் மொழியுணர்வை ஊட்டி ஆயிரக்கணக்கானவர்களைத் தமிழ் படிக்க வைத்ததே அவர் செய்த மாபெரும் சாதனை.

சென்னை, அண்ணாமலை, உஸ்மானியா பல்கலைக் கழகங்களின் பாடத்திட்ட குழுக்களில் உறுப்பினராக விளங்கி நல்ல பல திட்டங்கள் கல்வித்துறையில் அறிமுகம் பெற பெரிதும் பாடுபட்டவர் பேராசிரியர் இலக்குவனார்.

தமிழ்க் காப்பு இயக்கத்தின் தலைவராயிருந்து ஆற்றிய பணிகள் கணக்கில் அடங்கா அவ்வாறே பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவராகப் பணியாற்றி ஆசிரியர் சமுதாயத்தின் நல்வாழ்விற்காக அருந் தொண்டாற்றியவர் ஐயா அவர்கள்.

இத்துணை சிறப்பியல்புகளைப் பெற்றுள்ள பேராசிரியர் அவர்களை,

முத்தமிழ்க் காவலர்

செந்தமிழ் மாமணி

பயிற்சி மொழிக் காவலர்

தமிழர் தளபதி

தமிழ்காத்த தானைத் தலைவர்

இலக்கணச் செம்மல்

ஆகிய பட்டங்கள் நாடி வந்து குவிந்தன. ஆனால், அவற்றை எல்லாம் கருதாமல் தமிழர் நல்வாழ்வு - தமிழ்ப் பண்பாட்டுக் காப்பு இரண்டிற்கும் தொல்காப்பியத்தையும், திருக்குறளையும் இரு கண்களாகக் கொண்டுஇறுதி வரை பாடுபட்டு உழைத்தார்கள். அவர் விட்டுச் சென்றுள்ள பணிகளைத் தொடர்ந்து செயலாக்குவதே நாம் பேராசிரியர் அவர் களுக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

## முறையற்ற நிலமாற்றங்கள்

நில உச்சவரம்புச் சட்டம் வரப் போகிறதென்று 1955 - ஆம் ஆண்டிலிருந்தும் அதற்கு முன்பும் பரவலாகப் பேசப்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் ஆளுநர் அவர்களின் உரையிலும், அமைச்சருடைய பேச்சிலும் நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி அவை குறிப்பில் இடம் பெற்றன.

இதனால் முறையற்ற நில மாற்றங்கள் பெரும் அளவில் தமிழ்நாட்டில் ஏற்பட்டது.

இந்த முறையற்ற நிலமாற்றத்தை முற்றிலும் சரிசெய்ய வேண்டுமானால் 1955-இல் இருந்து செய்யப்பட்ட நில மாற்றங்களைச் செல்லுபடி ஆகாதென்று சட்ட முன் வடிவு கொண்டு வரவேண்டும்.

ஆனால், இதை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சங்கடங்களை எண்ணிப்பார்த்து 1-1-58-க்குப்பிறகும் 6-4-1960க்கு முன்னரும் செய்யப்பட்ட முறையற்ற நிலமாற்றங்கள் செல்லுபடி ஆகாதென்று சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப் பட்டது.

30-8-1980 அன்று குடியரசுத் தலைவர் இசைவுக்காக சட்ட முன்வடிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்காகத் தொடர்ந்து மத்திய அரசினை தமிழக அரசு கேட்டுக்கொண்டு வருகிறது.



# பாரதிதாசன் 91வது பிறந்த நாள்

29-4-1891



## தமிழுக்கும் அமுதென்று பேர் — அந்தத் தமிழ்இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

- ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு பாவேந்தர் விருது ரூ. 10,000/-.
- ஆண்டுதோறும் தமிழ் அறிஞர் ஒருவருக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது ரூ. 10,000/-.
- தந்தை பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தம்.
- முதிய தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை.
- மதுரை மாநகரில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு.
- தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம்.
- மதுரையில் உலகத் தமிழ்ச்சங்கம்.
- தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர்கள் ஆக வாய்ப்பு.

## பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை — இந்தப் பிழை நீக்குவதே உயிருள்ளாரின் கடமை!

- தெருக்களின் பெயர்ப் பலகைகளில் சாதிப் பெயர்கள் நீக்கம்.
- கலப்புமணம் புரிந்துகொள்வோருக்குத் தங்கப்பதக்கமும் ரூ. 4,000 வைப்புத் தொகையும்.
- கலப்புத் திருமணம் செய்தவர்களின் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை.
- தீண்டாமைக் குற்றங்களை விசாரிக்க தனி கோர்ட்.
- அனைத்திந்தியப் பணிக்கான தேர்வில் வெற்றிபெற உதவிகள்.
- தீண்டாமை ஒழிப்புச் சேவைபுரியும் சமூகநல ஊழியர்களுக்குப் பாராட்டு.
- கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப் பட்டோருக்கு மறுவாழ்வுத் திட்டங்கள்.
- ஆதிதிராவிட மாணவர்கள் அனைவருக்கும் கல்லூரிப் படிப்பு இலவசம்.
- அரிசனங்கள் தொழில் தொடங்க ரூ. 20 ஆயிரம் வட்டியில்லாக் கடன்.
- ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் சட்டத் தொழில் புரிய ஊக்கமளிப்பு.

## கண்ணிலார் எண்ணிலார்! எண்ணிலார் காதிலார்! காலிலார் கையிலார் எண்ணிலார்! உண்ணிலார் எண்ணிலார்! எப்புறமும் உண்டன்றோ முப்போதும் துன்பமன்றோ?

- ஊனமுற்றோர் ஆண்டான இந்த ஆண்டில் பார்வையற்றோருக்கு இலவச பஸ்பயண வசதி.
- ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிப்பு.
- ஊனமுற்றோர் தொழில் தொடங்க வங்கிக் கடன் வசதி விரிவாக்கம்.
- ஊனமுற்றோருக்கு அதிகப் பள்ளிகள்.
- கண்ணிழந்து வேலையற்றிருப்போருக்கு உதவித் தொகை.
- உடல் ஊனமுற்றோர் நலனுக்காக ரூ. 59 இலட்சம்.

## அண்ணாவின் அரசில் பாவேந்தரின் சிந்தனைகள் செயலாகின்றன.


## புதியதோர் உலகு செய்வோம்

- பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம்.
- உலகவங்கியின் உதவியோடு வேளாண்மை விரிவாக்கப் பணிக்கு புதிய திட்டம்.
- பாசனத் திட்டங்களுக்கு ரூ. 150 கோடி.
- புதிய மீன்பிடித் துறைமுகங்கள்.
- காடுவளர்ப்புக்கு ஸ்வீடன் நாட்டு உதவியுடன் 45 கோடி ரூபாயில் புதிய திட்டம்.
- மின் உற்பத்தித் திறனை இருமடங்காக உயர்த்தும் திட்டம்.
- மதுரை மாவட்டத்தில் 32 கோடியில் புதிய சிமெண்ட் ஆலை.
- கூட்டுறவுத் துறையில் மேலும் 4 நூற்பாலைகள்.
- புதிய சர்க்கரை ஆலை தொடங்க ரூ. 1.70 கோடி ரூபாய்.
- பெரியார் மாவட்டத்தில் விவசாயப் பயிற்சிப் பள்ளி.
- பட்டுப்பூச்சி வளர்ப்புக்கு ரூ. 265 இலட்சம்.
- இணைப்புச் சாலைகள் அமைக்க நிதி ஒதுக்கீடு இருமடங்காக உயர்த்தப்படுகிறது.
- வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தீவிரமான நிவாரணப் பணிகள்.
- கிராமக் குடிநீர் வசதிக்கு ரூ. 24.5 கோடி ஒதுக்கீடு.
- ஏழைஎளிய சிறுவிவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் 70 கோடி ரூபாய்





இயக்குநர் — செய்தி, மக்கள் தொடர்புத்துறை,



# தமிழ் நாட்டில்
## தன்னிறைவுத் திட்டம்

### 1980-81ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல்

**செங்கல்பட்டு மாவட்டம்**

1. மதுராந்தகம்
2. குன்றத்தூர்
3. காஞ்சிபுரம்
4. உத்தரமேரூர்
5. ஸ்ரீபெரும்புதூர்

**வடஆர்க்காடு மாவட்டம்**

6. திருவண்ணாமலை
7. கீழ்பெண்ணாத்தூர்
8. துரிஞ்சாபுரம்
9. போளூர்
10. கலசப்பாக்ககம்

**தென்ஆர்க்காடு மாவட்டம்**

11. கண்டமங்கலம்
12. திருநாவலூர்
13. உளுந்தூர் பேட்டை
14. மயிலம்
15. மங்களூர்

**திருச்சி மாவட்டம்**

16. வேப்பூர்
17. ஆலத்தூர்
18. உப்பிலியாபுரம்
19. செயம்கொண்டான்
20. க. பரமத்தி

**தஞ்சாவூர் மாவட்டம்**

21. கோட்டூர்
22. திருத்துறைப்பூண்டி
23. குத்தாலம்
24. பூதலூர்
25. கீழ்வேளூர்

**புதுக்கோட்டை மாவட்டம்**

26. திருமயம்
27. அன்னவாசல்
28. அரிமளம்
29. விராலிமலை
30. குன்னாண்டார்கோயில்

**சேலம் மாவட்டம்**

31. தலைவாசல்
32. கொளத்தூர்
33. நாமகிரிப்பேட்டை
34. திருச்செங்கோடு
35. காடையம்பட்டி

**தர்மபுரி மாவட்டம்**

36. பென்னகரம்
37. மொரப்பூர்
38. பாப்பிரெட்டிபட்டி
39. ஹோசூர்
40. தளி

**நீலகிரி மாவட்டம்**

41. கூடலூர்
42. உதகமண்டலம்
43. கோத்தகிரி
44. குன்னூர்

**மதுரை மாவட்டம்**

45. பெரியகுளம்
46. போடிநாயக்கனூர்
47. நிலக்கோட்டை
48. பழனி
49. திண்டுக்கல்

**இராமநாதபுரம் மாவட்டம்**

50. காரியாபட்டி
51. வெம்பக்கோட்டை
52. ராஜபாளையம்
53. ராமநாதபுரம்
54. போகலூர்

**கன்னியாகுமரி மாவட்டம்**

55. அகஸ்தீஸ்வரம்
56. ராசாக்கமங்கலம்
57. குருத்தங்கோடு
58. கிள்ளியூர்
59. முஞ்சிறை

**திருநெல்வேலி மாவட்டம்**

60. ஒட்டப்பிடாரம்
61. விளாத்திக்குளம்
62. சங்கரன்கோயில்
63. புதூர்
64. கருங்குளம்

**கோயம்புத்தூர் மாவட்டம்**

65. அன்னூர்
66. அவினாசி
67. பொள்ளாச்சி (தெற்கு)

**பெரியார் மாவட்டம்**

68. காங்கேயம்
69. சத்தியமங்கலம்

### 1981-82ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் பட்டியல்

**செங்கற்பட்டு மாவட்டம்:**

1. எல்லாபுரம்
2. திருப்போரூர்
3. வாலாஜாபாத்
4. திருவள்ளூர்
5. பூண்டி
6. திருவேலங்காடு
7. பள்ளிப்பட்டு
8. திருக்கழுக்குன்றம்
9. சித்தாமூர்
10. திருத்தணி

**வடஆர்க்காடு மாவட்டம்:**

11. அரக்கோணம்
12. சோளிங்கர்
13. நாட்றம்பள்ளி
14. அணைக்கட்டு
15. மேற்கு ஆரணி
16. திமிரி
17. கே.வி. குப்பம்
18. குடியாத்தம்
19. பேரணாம்பட்டு
20. ஆலங்காயம்
21. கந்திலி
22. புதுப்பாளையம்
23. அனக்காவூர்
24. வந்தவாசி
25. தெள்ளார்

**தென்ஆர்க்காடு மாவட்டம்:**

26. மேல்மலையனூர்
27 தியாகதுர்க்கம்

28. நல்லூர்
29. பண்ருட்டி
30. மேல்புவனகிரி
31. கீரப்பாளையம்
32. சங்கராபுரம்
33. விருத்தாசலம்
34. செஞ்சி
35. மரக்காணம்
36. காணை
37. கூடலூர்
38. குறிஞ்சிப்பாடி
39. குமராட்சி
40. சின்னசேலம்
41. ரிஷிவந்தியம்
42. கள்ளக்குறிச்சி

## தர்மபுரி மாவட்டம்:

43. சூளகிரி
44. கேலமங்களம்
45. கிருட்டிணகிரி
46. வேப்பனப்பள்ளி
47. பர்கூர்
48. தர்மபுரி
49. நல்லம்பள்ளி
50. ஊத்தங்கரை

## சேலம் மாவட்டம்

51. ஓமலூர்
52. பெத்தநாயக்கன் பாளையம்
53. கங்கவள்ளி
54. எருமைப்பட்டி
55. எலச்சிபாளையம்
56. எடப்பாடி
57. நங்கவள்ளி
58. மேச்சேரி
59. ஏற்காடு
60. வீரபாண்டி
61. அயோத்தியாபட்டினம்
62. பனமரத்துப்பட்டி
63. வெண்ணந்தூர்
64. புதுச்சத்திரம்
65. பரமத்தி
66. சங்ககிரி

## கோயம்புத்தூர் மாவட்டம்:


67. காரமடை
68. தொண்டாமுத்தூர்
69. கிணத்துக்கடவு
70. மடத்துக்குளம்
71. பொங்கலூர்
72. பல்லடம்
73. சூலூர்
74. மதுக்கரை

## பெரியார் மாவட்டம்:

75. குண்டடம்
76. தாராபுரம்
77. மூலனூர்
78. ஊத்துக்குளி
79. அந்தியூர்
80. நம்பியூர்
81. பவானிசாகர்
82. தாளவாடி

## மதுரை மாவட்டம்:

83. ஆண்டிப்பட்டி
84. சேடபட்டி
85. கல்லுப்பட்டி
86. வத்தலக்குண்டு
87. அலங்காநல்லூர்
88. மதுரை கிழக்கு
89. சாணார்பட்டி
90. ரெட்டியார் சத்திரம்
91. ஓட்டன் சத்திரம்
92. தொப்பம்பட்டி
93. கொடைக்கானல்
94. சின்னமனூர்
95. கள்ளிக்குடி
96. உசிலம்பட்டி
97. திருப்பரங்குன்றம்
98. மதுரை மேற்கு
99. கொட்டாம்பட்டி
100. குஜிலியாம்பாறை



## திருச்சி மாவட்டம்:

101. தாந்தோணி
102. தாத்தையங்கார் பேட்டை
103 துறையூர்
104. புல்லம்பாடி
105. அரவக்குறிச்சி
106. மணப்பாறை
107. பெரம்பலூர்
108. அரியலூர்
109. ஆண்டிமடம்
110. மணிகண்டம்

## தஞ்சாவூர் மாவட்டம்:

111. கொரடாச்சேரி
112. பேராவூரணி
113. நீடாமங்கலம்
114. வலங்கைமான்
115. சீர்காழி
116. வேதாரண்யம்
117. மதுக்கூர்
118. திருவோணம்

## இராமநாதபுரம் மாவட்டம்:

119. திருவாடனை
120. இளையாங்குடி
121. நரிக்குடி
122. கடலாடி
123. முதுகுளத்தூர்
124. அருப்புக்கோட்டை
125. சாக்கோட்டை
126. தேவகோட்டை
127. பரமக்குடி
128. மண்டபம்
129. திருப்புலாணி
130. திருச்சுழி
131. திருவில்லிபுத்தூர்

## திருநெல்வேலி மாவட்டம்:

132. கயத்தாறு
133. கோவில்பட்டி
134. மேலநீலிதநல்லூர்
135. மானூர்
136. ராதாபுரம்
137. வள்ளியூர்
138. திருச்செந்தூர்
139. தூத்துக்குடி
140. தென்காசி
141. கடையம்
142. சேரன்மாதேவி
143. நாங்குநேரி

## புதுக்கோட்டை மாவட்டம்:

144. பொன்னமராவதி
145. திருவரங்குளம்
146. கந்தர்வகோட்டை
147. கரம்பக்குடி
148. ஆவுடையார்கோயில்

## கன்னியாகுமரி மாவட்டம்.

149. தோவாளை
150. மேல்புரம்

# மலேரியா தலை தூக்குகிறது; ஜாக்கிரதை!

உங்கள் குடும்பத்தில் யாருக்கேனும் காய்ச்சல் கண்டிருக்கிறதா? காய்ச்சல், மலேரியாவாக இருக்கலாம்; அலட்சியமாக இராதீர்கள். மலேரியா, எதிர்பாராமல் ஆரோக்கியமானவர்களைத் தாக்கி, உடல் சோர்வுடன் உள சீர்கேட்டையும் ஏற்படுத்த வல்லது. பல சந்தர்ப்பங்களில், இக்காய்ச்சல் முழுக் கிராமம், நகரம் அல்லது பிராந்தியத்தையே பீடிக்கும்.

## அறிகுறிகள்:


மலேரியா ஏற்பட்டால்:

* திடீரென, குளிர் காய்ச்சல் காணும், சாதாரணமாக, குளிர் சில மணி நேரங்கள் நீடிக்கும்.
* உடலெரிவது போன்ற உணர்வும் கடும் தலைநோவும் இருக்கும்.
* இறுதியில், பெருவாரியாக வியர்த்து, காய்ச்சல் குறையும். மிகவும் சோர்வேற்படும்.

## சிகிச்சை:

காய்ச்சல் ஏற்பட்ட உடனடியாக, கட்டாயமாக இரத்தப் பரிசோதனை செய்து கொண்டு, பரிந்துரைக்கப்பட்ட அளவில் குளோரோக்வின் உட்கொள்ள வேண்டும். இரத்தப் பரிசோதனை, மலேரியா இருப்பதை வெளிப் படுத்தினால், தீவிர சிகிச்சையாக, ஐந்து நாட்களுக்கு மலேரியா ஒழிப்பு மருந்துகள் உட்கொள்ள வேண்டும்.

காய்ச்சல் மிகக் கடுமையாக இருந்தால், நினைவிழந்திருந்தால், ஜன்னி கண்டிருந்தால், நோயாளியை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம், மருந்துச் சாலை, அல்லது ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும். இவ்விடங்களில், அனைவருக்கும் இலவசமாக மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் அளிக்கப்படும்.





## மலேரியாவைத் தடுக்க

- உங்கள் வீட்டைச் சுற்றி, தண்ணீர் தேங்க விடாதீர்கள். இத்தண்ணீர், மலேரியாவுக்கு மூலகாரணமான கொசுக்களின் உற்பத்தி இடமாகும். தண்ணீர் தேங்குவதை தவிர்க்க இயலாவிடில், தண்ணீரில் சிறிது மண்ணெண்ணெயை தெளியுங்கள்.
- பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க வரும் குழுவினருடன் ஒத்துழையுங்கள்; மற்றவர்களையும் ஒத்துழைக்கச் செய்யுங்கள்.
- உங்கள் வீடு முழுதிலும் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க வையுங்கள். சமையலறை, பூஜையறை, பண்டக அறை, கொட்டில் ஆகியவற்றையும் மறக்க வேண்டாம்.
- மருந்து தெளிக்கப்படும்போது உணவுப் பொருட்களையும் தீவனங்களையும் மூடி வையுங்கள்.

கொசுவுக்கு எதிரான போராட்டத்தை வெல்லுவோம்

**நேஷனல் மலேரியா எராடிகேஷன் ப்ரோக்ராம்**

(மினிஸ்டிரி ஆஃப் ஹெல்த் & ஃபேமிலி வெல்ஃபேர்)

22, ஷாம் நாத் மார்க், டில்லி-110054.

davp 80/428




சீனாவில் ஏறக்குறைய 420 வகை விலங்குகள் உண்டு. இது உலகிலுள்ள மொத்த வகைகளில் 11 விழுக்காடாகும்.


சீனாவில் மட்டும் காணப்படும் பண்டா, பொன் ரோமக் குரங்கு ஆகியன தென்மேற்குச் சீனாவிலும், கான்சு, சென்சி மாநிலங்களின் தென்பகுதிகளிலும் காணப்படுகின்றன. பொன் குரங்கு கவர்ச்சிகரமானது. நீல மூக்கும், நீண்ட வாலும் அதற்குண்டு. தங்கச் சால்வை போலப் பொன்னிற ரோமம் அதன் முதுகில் படர்ந்திருக்கிறது. சிங்காய் - திபெத் பீடபூமியில் வாழும் வெள்ளை உதட்டு மானும் சீனாவில் மாத்திரம் காணப்படுகின்றது. மானின் முகத்தில் வெள்ளைக் கோடுகள் இருக்கின்றபடியால் அது இப்பெயர் பெற்றது. மெதுவான குரங்கு என்பது சீனாவில் காணப்படும் ஒரேயொரு பூர்வீகக் குரங்காகும். சிறிய உருவம் உடைய இந்தக் குரங்கு மிகவும் மெதுவாக நகர்கின்றது. பகலில் தூங்கி இரவிற் செயற்படும் இந்தக் குரங்கு 'சோம்பற் குரங்கு' என்றும் அழைக்கப்படுகின்றது.

சீனாவில் ஏறக்குறைய 1,200 வகை பறவைகள் உண்டு. இது உலகிலுள்ள வகைகளில் 13 விழுக்காடாகும். உலகிலுள்ள 46 வகை காணற்கரிய பாடும் பறவைகளில் 33 வகைப் பறவைகள் சீனாவில் உண்டு.

**'மாணவர் பக்கம்' பகுதிக்கு எழுதுவோருக்கு....**

தமிழரசு இதழில் 'மாணவர் பக்கம்' பகுதிக்கு — மாணவர்களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிவுக்கு விருந்து தரும் வகையிலும், தாளின் ஒரு பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.





# தம்பி! வேண்டுமே...!

— சென்னிமலை தண்டபாணி

அன்பு வேண்டும் பண்பு வேண்டும்
அறிவில் சிறக்க வேண்டுமே! — தம்பி
உண்மை பேசி நன்மை செய்தே
உலகை வெல்ல வேண்டுமே!

நல்ல காட்சி நாளும் கண்டு
நன்மை கொள்ள வேண்டுமே! — தம்பி
கல்வி யாலே ஏழை மக்கள்
கவலை தீர்க்க வேண்டுமே!

இரும்பு நெஞ்சம் கரும்புச் சொற்கள்
இனிமைப் பழக்கம் வேண்டுமே! — தம்பி
எறும்பு போல சுறுசுறுப்பே
என்றும் வாழ்வில் வேண்டுமே!

மனித வாழ்வில் புனிதனாக
மலர வேண்டும் நாட்டிலே! — தம்பி
இனிய செயல்கள் செய்தே என்றும்
இருக்க வேண்டும் ஏட்டிலே!



தெரிந்து கொள்வோம்:

# இந்தியாவில் பத்திரிகைகள்

இந்தியச் செய்தி பத்திரிகைகளின் விற்பனை 1978-ல் முதன் முறையாக நான்கு கோடியைத் தாண்டியது. 1977-ல் 3,74,37000 ஆக இருநத பிரதிகள் எண்ணிக்கை, 1978-ல் 9.1 சதவீதம் உயர்ந்து 4,08,50,000 பிரதிகளாக உயர்ந்துள்ளது. 1979ல் 'இந்தியாவில் பத்திரிகைகள்' என்ற தலைப்பில் அண்மையில் மாநிலங்களவையில் வெளியிடப்பட்ட தகவல் வருமாறு:

பல்வேறு 75 இந்திய மற்றும் அந்நிய மொழிகளில் வெளியிடப்படும் 15,814 பத்திரிகைகள் 1978ல் இருந்து தொடர்ந்து தமது வளர்ச்சியைக் கடைப்பிடித்து வருகின்றன. 1978-ல் 1234 புதிய பத்திரிகைகள் பிரசுரத்தினைத் துவக்கின.

இந்தியாவிலுள்ள மொத்தப் பத்திரிகைகள் 15,814. இவைகளில் நாளிதழ்கள் 992. வாரம் இருமுறை, மும்முறை வெளிவரும் பத்திரிகைகள் 81. வாரப் பத்திரிகைகள் 4,654; மாத இதழ்கள் 5,739 ஆகும்.

முதன் முறையாக, ஆங்கிலப் பத்திரிகைகள் விற்பனையை இந்திப் பத்திரிகைகள் முறியடித்துள்ளன. எண்ணிக்கையிலும் இந்திப் பத்திரிகைகள் முன்னணியில் உள்ளன. 1977ல் 3,736-ஆக இருந்த இந்திப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 1978ல் 4,196ஆக உயர்ந்தது. இந்திப் பத்திரிகைகளின் விற்பனை 1977ல் 86,79,000 ஆக இருந்து, 1978-ல் 97,06,000 ஆக உயர்ந்து 11.8 சதவீத வளர்ச்சியை எட்டியது. ஆங்கிலப் பத்திரிகைகள் 2,982-லிருந்து 3,085 ஆக உயர்ந்தது. ஆங்கிலப் பத்திரிகைகளின் விற்பனை 81,000 உயர்ந்த போதிலும், இந்திப் பத்திரிகைகளிடம் முதன்மை இடத்தை இழந்தன.

நாளிதழ்களின் எண்ணிக்கையில் முதலிடம் இந்திப் பத்திரிகைகளுக்குச் (294) செல்கின்றது. அடுத்து வரும் பத்திரிகைகள் உருது-103, மராத்தி-102, ஆயினும் ஆங்கிலத் தினசரிகளின் விற்பனை, இந்திப் பத்திரிகைகளின் விற்பனையை விட அதிகம்.

**முன்னணியில் உள்ள மாநிலங்கள்**

அதிக எண்ணிக்கையில், 1978-ல் 2,169 பத்திரிகைகளை வெளியிடும் மாநிலமாக மகாராஷ்டிரம் முன்னணியில் இருக்கின்றது. உத்தரப் பிரதேசம் 2,089 பத்திரிகைகளுடன் இரண்டாவது இடத்தையும், டில்லி 1,909 பத்திரிகைகளுடன் மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன. மேற்கு வங்கம் 1,712 பத்திரிகைகளையும், தமிழ்நாடு 1,112 பத்திரிகைகளையும் வெளியிடுகின்றன.

நாளிதழ்களைப் பொறுத்தவரை உத்தர பிரதேசம் 146 பத்திரிகைகளை வெளியிட்டு முதலிடத்தை வகிக்கின்றது. மகாராஷ்டிரம் 140 பத்திரிகைகளை வெளியிட்டு இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இதர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 100க்குக் குறைவான நாளிதழ்களே வெளிவருகின்றன.

விற்பனையிலும் மகாராஷ்டிரம் முதலிடத்தையும், தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன. மகாராஷ்டிரத்தில் 79,05,000 பிரதிகளும், தமிழ்நாட்டில் 61,14,000 பிரதிகளும் வெளியிடப்படுகின்றன. டில்லியில் 54,05,000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன.

இந்தியாவில் வெளிவரும் மொத்தப் பத்திரிகைகளில் 30.8 சதவீதம் பத்திரிகைகள், பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை போன்ற பெருநகரங்களில் வெளியிடப்படுகின்றன. இதர மாநில, யூனியன் பிரதேசத்தின் தலைநகரங்களில் 16.3 சதவீதப் பத்திரிகைகள் வெளியாகின்றன. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கும் நகரங்களில் 29.2 சதவீதமும், 23.7 சதவீதப் பத்திரிகைகள் ஒரு லட்சத்துக்கும் குறைவாக மக்கள் வாழும் நகரங்களிலும் வெளியாகின்றன. விற்பனையைப் பொறுத்தவரை 49 சதவீதத்துக்கும் மேலாகப் பெருநகரங்களில் விற்பனை செய்யப்படுகின்றது.

டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஐதராபாத், பெங்களூர், புனா, ஜெய்ப்பூர், லக்னோ, பாட்னா, கான்பூர், திருவனந்தபுரம், அகமதாபாத், கொச்சி, சண்டிகார், லூதியானா மற்றும் ஜலந்தர் நகரங்களில் 100க்கும் மேற்பட்ட பத்திரிகைகள் வெளியாகின்றன. முதல் மூன்று நகரங்களில் மட்டும் வெளியாகும் பத்திரிகைகளின் எண்ணிக்கை 1,000க்கும் மேற்பட்டதாகும்.

கடந்த நூறு ஆண்டுகளாக வெளிவரும் பத்திரிகைகளின் எண்ணிக்கை 24. இதில் 9 பத்திரிகைகள் நாளிதழ்கள். 1822-ல் துவக்கப்பட்டு பம்பாயிலிருந்து வெளிவரும் 'பம்பாய் சமாச்சார்' என்ற குஜராத்திப் பத்திரிகையே மிகவும் பழமையாக வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகையாகும்.

பத்திரிகைப் பதிவாளர்களிடமிருந்து வரும் தகவல்களின்படி, 50,000-க்கும் மேற்பட்ட விற்பனை உள்ள 153 பெரிய பத்திரிகைகளும், 15,000-த்திலிருந்து 50,000 வரை விற்பனை உள்ள பத்திரிகைகளில் 288 நடுத்தரப் பத்திரிகைகளும், 15,000-க்கும் குறைவாக விற்பனை உள்ள 7,075 சிறிய பத்திரிகைகளும் உள்ளன.

பெரிய பத்திரிகைகளில் 58 தினசரிகள்; மற்ற 97 இதழ்கள். மொத்தம் 153 பெரிய பத்திரிகைகளில் 66 பத்திரிகைகள் ஒரு லட்சத்துக்கும் மேலாக விற்பனை உள்ளவை. இவற்றில் 28 நாளிதழ்களும் அடங்கும்.

மூன்று பிரிவுகளில் பெரிய பத்திரிகைகள் 43.1 சதவீதம், நடுத்தரப் பத்திரிகைகள் 18.4 சதவீதம்; சிறிய பத்திரிகைகள் 38.5 சதவீதம்.

தினசரிகளைப் பொறுத்தவரை பெரிய பத்திரிகைகள் 56.8 சதவீதமும், நடுத்தரப் பத்திரிகைகள் 23.3 சதவீதமும் வெளியாகின்றன.

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் வங்காள மொழிப் பத்திரிகையான 'ஆனந்த பஜார்' பத்திரிகை 3,76,464 பிரதிகள் விற்பனையுடன் முன்னணியில் நிற்கின்றது.



# அறிவுச்சுடர்

* வெய்யில் காலங்களில் நிலத்தில் மேற் பரப்பில் 'ஜிலுஜிலு' என்று காற்றுப் பாய்வது போன்ற தோற்றம் உண்டா கிறது. இது எதனால் ?

வெய்யில் காலங்களில தார் போட்ட சாலைகளின் மேற்பரப்பில் உள்ள காற்று ஒரே வெப்ப நிலையில் இல்லை. வெப்ப நிலை அதிகமான காற்று மேல் நோக்கிச் செல்கின் றது. வெப்ப நிலை குறைவான காற்று அடிப் புறத்தில் உள்ளது. ஒளி காற்று மண்டலத் தால் விலக்கப்படுகிறது. அதிக வெப்ப நிலை கொண்ட காற்று அடர்வு குறைந்த ஊடகம் போலும், குறைந்த வெப்ப நிலை கொண்ட காற்று அடர்ந்த ஊடகம் போலும் செயல்படுகின்றது. ஒளி விலகல், வெப்பச் சலனம் (Convection) இரண்டு சேர்ந்து காற்று ஓடுவதைப் போல ''கானல் நீரை'' (Mirage) உண்டு பண்ணுகின்றன.

* பஸ் எஞ்சினைக் கண்டுபிடித்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

டீசல் எந்திரத்தை ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் டொல்ப் டீசல் என்பவர் 1890-95இல் அமைத்தார். பெட்ரோல் எந்திரத்தை ஆட்டோ என்பவர் 1876இல் அமைத்தார்.

* பிளாஸ்டிக் சர்ஜரி முறையில் பெரிய அளவுடைய காதுகளைச் சரியான அளவுடைய காதுகளாக்க முடியுமா? இந்த அறுவை சிகிச்சை செய்ய அதிகச் செலவு ஆகுமா ?

வடிவமைப்பு அறுவையினால் (Plastic Surgery) திருத்தி அமைக்க மிக ஏற்ற உறுப்புகளில் முதன்மையானது காது, மண்டையினின்று விலகி விரிந்து நிற்கும் காதுகளை அடக்கி மண்டையோடு ஒட்டி வைத்து அழகுபடுத்துவது எளிது. தைப்பு வெளியே தெரியாது. சாதாரணமாக வெட்டுக் காயங்களைத் தைப்பது போன்ற எளிய அறுவைதான். கைத்திறனும், செவி லியச் சேவையும் (Nursing) மிக்க உயர் ரகமாக அமைய வேண்டும். சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனையில் உள்ள வடிவமைப்பு அறுவைப் பிரிவு இவ்வகையில் சிறந்ததாகத் தெரிகிறது. திறமை மிக்க அறுவை மருத்துவர் எங்கும் உளர். அதற்கு ஏற்ற செவிலியத் திறன் பல இடங்களில் அரிதாகவே உள்ளது. எனவே, இடம் பார்த்துச் சேரவேண்டும். தனியார் மருத்துவ மனையில் ரூ. 500-1000க்குள் இரு காது களையும் செப்பம் செய்து கொள்ளலாம்.

* சில வேளைகளில் சந்திரனைச் சுற்றி ஒளிவட்டம் காணப்படுவதேன் ?

புவி மண்டலத்தில் மேற்பகுதியில் உள்ள பனித் திவலைகளில் சந்திரனிலிருந்து வரும் ஒளி அடையும் ஒளிச் சிதறல் காரண மாக, சந்திரனைச் சுற்றி ஒளி வட்டம் உள்ளது போல் தோன்றுகிறது.

நன்றி : 'கலைக் கதிர்'



# இரண்டு தலை மனிதன்

தென்மேற்குச் சீனாவில் யுன்னா மாகாணத்தில் வாழும் ஒரு இரண்டு தலை மனிதன் பற்றிய வண்ணத் திரைப்படம் ஒன்று தற்பொழுது சீனாவில் காண்பிக்கப்படுகிறது.

சாங்சிபிங் என்ற அந்த இரண்டு தலை மனிதனுக்கு வயது 35. அவர் வடகிழக்கு யுன்னாவிலுள்ள மலைக் கிராமமொன்றில் வாழும் விவசாயி ஆவார். அவர் பிறக்கும்போது அவருடைய உண்மையான தலையில் வலது பக்கத்தில் ஒட்டுயிர்த் தலை ஒன்று முன்தள்ளிக் கொண்டிருந்தது. 'ஒ ர ா னி யோ பா க் க ஸ் பரசிற்றிக்கஸ்' என்று மருத்துவ வார்த்தைகளில் அழைக்கப்படும் இந்த ஒட்டுயிர்த்தலை மிகுதியும் அரிதாக ஏற்படும் ஒரு நிலைமையாகும்.

சாங்சிபிங்கினுடைய ஒட்டுயிர்த் தலையில் குறை வளர்ச்சியுடைய தலைமயிர், கண்கள், நெற்றிப் புருவங்கள், கண் இமைகள், மூக்குத் துளைகள், தாடி, மேல் உதடு, பற்கள், நாக்கு ஆகியன இருந்தன. சாங்சிபிங் உணவருந்தும் போது அல்லது உதட்டைப் பிதுக்கியபோது அல்லது சீழ்க்கை அடித்தபோது, ஒட்டுயிர்த் தலையிலும் இதே போன்ற செயல்கள் ஏற்பட்டன

# நூல் நயம்

**மதுரை வரலாறும் பண்பாடும்**

ஆசிரியர்: வி. கந்தசாமி
வெளியீடு: இந்திரா பதிப்பகம்
72, புதுமண்டபம்,
மதுரை.
விலை ரூ. 10 பக்கங்கள் 240

மதுரை மாநகருக்கு -வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே வரலாறு ஏற்பட்டுள்ளது. அது நித்தமும் தொடர்கிறது என்ற உண்மையை இந்நூல் புலப்படுத்துகிறது.

மதுரை நகரில் உள்ள ஆலயங்கள்-சுற்றுலா இடங்கள் - ஆட்சி செய்த மாமன்னர்கள் பட்டியல்- நகராட்சித் தலைவர் பட்டியல்- நகரில் உள்ள சமயங்கள் -நகரின் தோற்றம் வளர்ச்சி - அருகில் உள்ள சுற்றுலாத் தலங்கள் ஆகியவை குறித்து அரிய தகவல்களை வழங்கும் களஞ்சியமாக இந்நூல் திகழ்கிறது. நாட்டு விடுதலைப் போரில் மதுரை நகரம் வகித்த பெரும்பங்கு குறித்தும் நூலாசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது. தமிழ் வளர்ச்சி-இசை வளர்ச்சி ஆகியவற்றிலும் மதுரை சிறந்து விளங்கியதை - விளங்குவதை நூலாசிரியர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

முக்கிய நிகழ்ச்சிகள் (1790 முதல் 1981 வரை) நிழல்படத் தொகுத்துத் தந்துள்ளமை பாராட்டுக்குரிய தாகும். அச்சு அமைப்பில் பதிப்பாளர்கள் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

**— தமிழ்ப்பித்தன்**

**எலி கடித்த பூனை**

ஆசிரியர் குழ. கதிரேசன், பி.ஏ,
வெளியீடு: மீனாட்சி புத்தக நிலையம்,
கிளை : 228, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-600 005.
விலை ரூ. 5.30 பக்கங்கள் 52.

ஆடல், பாடல் என்றால் குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான். நல்ல நல்ல பாடல்கள் அவர்களை நல்லவர்களாக்குகின்றன. வல்லவர்களாக்குகின்றன. புதுமையான தலைப்புள்ள இந்தக் குழந்தைப் பாடல் தொகுப்பில் அத்தகைய நல்ல நல்ல பாடல்கள் நிறைய இருக்கின்றன.

மழை பொழிகிறது; கவிஞரின் கற்பனை மழையும் பொழிகிறது.

மேகமே ஏனழுதாய்
மின்னலுனை அடித்ததுவோ?
வேகமாய் பெருங்காற்று
வீசிஉனை விரட்டியதோ?

என்கிறார்.' உள்ளே ஒரு கதைப் பாடல். அதுதான் எலி கடித்த பூனை! எலி பூனையைக் கடிக்கிறது. பிறகுதான் தெரிந்து கொள்கிறோம்- அது பிளாஸ்டிக் பூனை என்று!

இத்தொகுப்பில் 23 பாடல்கள் உள்ளன. அவை, தேனாய் இனிக்கின்றன; தெம்பாய்ப் பாட வைக்கின்றன.

**வணக்கம் செய்த வளையாபதி**

ஆசிரியர் : புலவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் பி. லிட்.
வெளியீடு: வசந்தா பதிப்பகம்;
21, தருமராச கோயில் தெரு,
சென்னை-600 016.
விலை ரூ. 5.25 பக்கங்கள் : 112.

மாணவர்கள் மனத்தில் அறிவு, ஒழுக்கம், வீரம் போன்ற நல்ல விதைகளைத் தூவுதல் வேண்டும். அதுவே நாளை மரமாகி எல்லாருக்கும் நிழலைத் தரும்.

ஒருவன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. பணிவும், அடக்கமும் அவற்றுள் ஒன்று. இந்த நல்ல பண்பைப் படம்பிடித்துக் காட்டுகிறது, சிறுவர்க்கான இந்தச் நெடுங்கதை. அத்துடன், ஆணவம் கொள்ளின் அழிவு தொடரும் என்பதையும் சொல்லாமல் சொல்கிறது. ஆசிரியரின் எளிய, இனிய நடை நம்மைக் கவர்கிறது.

**—பி.வி.ஜி.**

## நில உச்ச வரம்புச் சட்டம்

நில உச்ச வரம்புச் சட்டத்தின்படி, நிலப் பிரபுக்களிடமிருந்து, எடுக்கப்படும் நிலம், நிலமில்லாத ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும். அவ்வாறு கொடுக்கப்படுகிற நிலத்திற்கு, நிலத்தைப் பெறுகிற ஏழைகளிடமிருந்து பணம் வாங்கி நிலப் பிரபுக்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையாகக் கொடுக்கப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்படுகிற தொகை. சம்பந்தப்பட்ட அந்த நிலத்தின் சந்தை விலைக்குச் சமமாகும். சில இடங்களில் அதிகமாகவும் இருந்தது. இதனால். நிலம் பெற்ற ஏழை விவசாயி, தவணைத் தொகை கட்ட முடியாமல், கட்டிய தொகையையும் இழந்து பெற்ற நிலத்தையும் இழந்து விட்டார்கள்.

நில உச்சவரம்புச் சட்டத்தில் இருந்த மிகப் பெரிய குறைபாடு ஆகும் இது.


மாண்புமிகு எம்.ஜி.ஆர். தலைமையிலான அரசு வந்த பிறகு, இந்தக் குறைபாடு நீக்கப் பட்டது.

சட்டத்திருத்தம் கொண்டு வந்து, நிலத்தின் விலையைக் குறைத்தது.

இதனால் நிலத்தினுடைய கிரயம், ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 50 முதல், ரூபாய் 3,500 வரையிலும் வரையறுக்கப் பட்டது.

எவ்வளவு நல்ல நிலமானாலும், அதிகப்பட்ச விலை, ரூ. 3,500 க்கும் அதிகமாக ஆகக் கூடாதென்று, சட்டம் கொண்டு வரப்பட்டது.

இதன் பிறகுதான், நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு உயிர் வந்தது.



## மாற்றுச் சிறு நீரகம்

# அறுவைச் சிகிச்சையில் அற்புதம்!

இந்தியாவிலேயே ஆங்கில முறை மருத்துவமனையாக, 1664ல், முதன் முதலில் துவக்கப் பட்டது சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவ மனையாகும். (Government General Hospital). இந்த வகையில் அது முதலாவ தாகவும், இராயப்பேட்டை யிலுள்ள அரசு மருத்துவமனை இரண்டாவதாகவும் கருதப்பட் டாலும்-பல வகைகளில் முதலா வது என்று கூறத்தக்க பெருமை யுடையது இராயப்பேட்டை மருத்துவமனை. உண்மை- வெறும் புகழ்ச்சியில்லை!

மலேரியா போன்ற நோய் வகையைச் சேர்ந்தது காலா ஆஜர் (Kala Azar) என்கிற நோய். இந்தக் கொடிய நோய்க்கு மூலகாரணமான டோனோவன் அணுக்களை (Donovon Bodies) உலக மருத்து வத்துறைக்கு அறிமுகம் செய்த பெருமை இராயப்பேட்டை மருத்துவ மனையையே சேரும். அதைக் கண்டுபிடித்த மருத்துவ மேதை டோனோவன் என்பார் இங்கேதான் பணியாற்றினார்.

இதய நோய் சிகிச்சைக்கான தீவிர சிகிச்சைப்பிரிவை (Intensive Coronary Care Unit) இன்று எல்லா பெரிய மருத்துவ மனைகளிலும் நாம் கண்டாலும் —அதை முதன் முதல் அமைத்த சிறப்புக்குரியவர்கள் இராயப் பேட்டை மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்களான டாக் டர் எம்.வி. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் ஆர் எஸ். ராஜகோபா லன் இருவருமே!

**பி.எல்.ராஜேந்திரன்**

வாய்ப்புற்று நோய்க்கான (Oral Cancer) புதியதோர் அறுவைச் சிகிச்சையினை முதன் முதல் செய்து காட்டி வெற்றி பெற்ற திறமையாளர் இரா யப்பேட்டை மருத்துவமனை அறுவை சிகிச்சை நிபுண ரான டாக்டர் எம். நாராயணன் என்பவரே!

தம்பதிகளுக்கிடையேகுழந்தை யில்லாக் குறைக்குப் பெண் கள் மட்டுமே காரணமல்ல; ஆண் மலட்டுத்தன்மையும் காரணமாக லாம் என்பதை உணர்த்தி, அந் தக் குறை நீக்கும் சிகிச்சைப் பகுதி தென்னகத்திலேயே முதன் முதல் இராயப்பேட்டை மருத் துவமனையிலேதான் துவக்கப் பட்டது. இந்தப் பிரிவின் மூலம் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு அறுவைச் சிகிச்சை அளித்துப் பலன் காணச் செய்த சிறப்புக் குரியவர் சிறு நீரக அறுவைச் சிகிச்சைப் பிரிவின் (Urology) தலைவர் டாக்டர் ஏ. ராஜ சேகரன் ஆவார்!

அவரே இப்போது இன்னொரு பெருமைக்கும் உரியவராகியிருக் கிறார். அண்மையில் செய்தித் தாள்களிலெல்லாம் வெளியிடப் பட்ட 'மாற்றுச் சிறுநீரக அறு வைச் சிகிச்சை'யை (Kidney Transplantation) வெற்றி கரமாகச் செய்துகாட்டி இராயப் பேட்டை மருத்துவ மனையின் புகழ்மகுடத்தில் மேலுமோர் நன் முத்தைப்பதித்திருக்கிறார் டாக் டர் ஏ. ராஜசேகரன்!

1954ல் இந்தச் சிகிச்சை முதன் முதலாக அமெரிக்காவிலும், அதைத் தொடர்ந்து பிரான்ஸ் நாட்டிலும் செய்யப்பட்டது.

நாளடைவில் இந்தியாவும் அந்த வகையில் முன்னேறியது. சண்டிகார், டில்லி, பம்பாய், வேலூர் மருத்துவ மனைகளில் எல்லாம் இப்போது மாற்றுச் சிறு நீரகம் பொருத்தப்படுகிறது. ஆனால், அங்கெல்லாம் ஒருவர் சிகிச்சை செய்துகொள்ளுவதென் றால் கிட்டத்தட்ட நாற்பதாயி ரம் ரூபாய் வரை வசூலிக்கப்படு கிறது. நான்குமாதம் வரையில் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ மனையிலேயே இருத்தப்படு கிறார்கள்.

ஆனால், ஏழை எளியவர்கள் அவ்வாறான பாதிப்புக்கு ஆளா னால் அந்த அளவுக்குத் தங்கு



சிறுநீரியல் அறுவை சிகிச்சைப் பகுதியின் தலைவர் டாக்டர் ஏ. ராஜசேகரன்.



மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் ஆர். எஸ். ராஜகோபாலன்.



சிறுநீரக மருத்துவச் சிகிச்சைப் பகுதியின் தலைவர் டாக்டர் எம். ஏ. முத்துசேதுபதி.



மாற்றுச்சிறுநீரகம் பொருத்தப் பெற்ற புவியரசு.

வதோ-செலவிடுவதோ எப்படிச் சாத்தியம்?

அரசுப் பொது மருத்துவமனைகள் அப்படிப்பட்ட சிகிச்சைகளைத் துவக்கினால், சாதாரண மக்களும் தங்களது சிறுநீரகக் கோளாறைச் சிக்கனச் செலவு-சிரமக் குறைவு மூலம் நிவர்த்தி செய்துகொள்ள முடியும். தென் மாநிலங்களில் எந்த அரசு மருத்துவமனையும் செய்யாத இந்த நூதன சிகிச்சையைச் செய்துதான் பெரும்புகழ் கொண்டிருக்கிறது, அரசினர் இராயப்பேட்டை பொது மருத்துவமனை.

இந்த மருத்துவமனையில் அப்படியொரு அற்புதம் நிகழ்ந்தது பற்றி நேரில் கண்டறியச் சென்றோம். மருத்துவமனைக் கண்காணிப்பாளர் டாக்டர் ஆர்.எஸ் ராஜகோபாலன் அவர்களோடு தொடர்பு கொண்டோம், பெரு முயற்சி எடுத்துக்கொண்டு இந்த மருத்துவமனையில் சிறு நீரக மருத்துவப்பிரிவு (Nephrology) துவக்கியவரான அவர் ''அந்த மாற்றுச் சிறுநீரகச் சிகிச்சையை செய்த டாக்டர்களையே உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அதுபற்றி அவர்களையே கேட்டெழுதினால் நன்றாயிருக்குமே!'' என்றார். சம்மதித்தோம்.

## டாக்டர் முத்து சேதுபதி

டாக்டர் எம்.ஏ. முத்து சேதுபதி முதலில் நமக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகிறார்.

சிறுநீரகம் இரண்டும் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருபது வயது இளைஞரான புவியரசு என்பவரை மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்குத் தக்கபடி பக்குவப்படுத்தவும், அந்தச் சிகிச்சை முடிந்தபின் எந்தத் துன்பமும் நேராமல் பாதுகாக்கவும் அரும்பாடுபட்ட ஆற்றலாளர் டாக்டர் எம்.ஏ. முத்து சேதுபதி.

'சிறுநீரக மருத்துவ சிகிச்சைப் பகுதி' யின் (Nephrology) தலைவர் அவர். அவரது குழுவில் டாக்டர் கே. தாமோதரன், டாக்டர் எஸ். சிவகுமார், டாக்டர் ஜெயகோபால், டாக்டர் எஸ்.பி. கணேசன், டாக்டர் யசோதா ஆகியோர் இடம்பெறுகிறார்கள். இவர்களைத் தவிர வசுந்தரா தேவி, சாந்தா அனந்த கிருஷ்ணன், லட்சுமி, மங்கள கௌரி ஆகிய செவிலியர் நால்வரும் இக்குழுவில் உண்டு. கிருஷ்ண காந்த் என்கிற தொழில் நுணுக்கக் கலைஞரும் உதவியிருக்கிறார்.

''சிறு நீரகக் கோளாறு எதனால் ஏற்படுகிறது?'' என்று நாம் டாக்டர் முத்து சேதுபதியைக் கேட்கிறோம்.


மிக நிதானமாகப் பதில் சொல்கிறார் அவர்— ''சொறி சிரங்கு அதிகரிக்கிற காரணத்தாலும், தொண்டையில் எச்சில்கூட விழுங்க முடியாத அளவில் வலியேற்பட்டு நீடிப்பதனாலும் சிறு நீரகங்கள் பாதிக்கப்படக்கூடும். ஆனால் இப்போது நாங்கள் சிகிச்சை செய்திருக்கிற புவியரசுக்கு அப்படி எதுவும் உண்டானதாகத் தெரியவில்லை. 1976ல், பள்ளியில் படிக்கிற காலத்தில், அவ்வப்போது கால்கையெல்லாம் திடீர் திடீரென்று வீங்கி வடியும் என்றும், அதற்காக டாக்டரை அணுகியபோது அவருடைய சிறு நீரகம் இரண்டும் பழுதுபட்டிருப்பது தெரிந்தது என்றும் சொன்னார். போன வருஷம் ஜூனில் தான் இங்கே இராயப்பேட்டை மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார். சிறுநீர் சரியாகக் கழியாமலும், பாதிக்கப்பட்ட பகுதியின் மேல்தடம் வீங்கியும், இரத்த அழுத்தம் உடையவராகவும் காணப்பட்ட அவருடைய இரண்டு சிறுநீரகமுமே பாதிக்கப்பட்டிருந்ததைப் பரிசோதித்து நாங்கள் கண்டறிந்தோம்! இப்படிப்பட்ட சிறுநீரகக் கோளாறு 'நெப்ரிடிஸ்' (Glomerulo Nephritis) எனப்படும்!''

''மாற்றுச் சிறு நீரகம் பொருத்த வேண்டும் என்று அவரே கேட்டுக் கொண்டாரா, நீங்களாக வலியுறுத்தினீர்களா?''

''ஏற்கெனவே சண்டிகார் மருத்துவமனையில் பணிபுரிந்தவன் நான். அங்கே இது போன்ற மாற்றுச் சிறு நீரக அறுவைச் சிகிச்சைகள் நடந்ததுண்டு. அதையெல்லாம் சொல்லி, உன் உறவினர்கள் யாராவது உனக்கு ஒரு சிறு நீரகத்தைத் தானம் செய்ய முன் வருவார்களா என்று கேட்டோம். இரண்டு வயது மூத்த தன்னுடைய அண்ணனே அதற்கு உடன்படுவார் என்றார். இதில் ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால், ஒரு சிறு நீரகம் சரியாக இருந்தாலே ஒரு கோளாறும் இல்லாமல் உயிர் வாழமுடியும். இரண்டும் பழுதாகிவிட்டால், அவருடைய தகப்பனார், சகோதரர், சகோதரி, தாய், யாராவது சரியாக இருக்கும் தனது இரண்டு சிறுநீரகத்தில் ஒன்றைத் தானம் செய்தால்தான் பொருந்திவரும், நீண்ட நாள் வாழவும் முடியும். மற்ற யாருடைய சிறுநீரகமும் பொருந்தாது. சிலருக்குப் பிறப்பிலேயே ஒரு சிறு நீரகம் அமைந்து விடுவதும் உண்டு. அதனால் எந்தப் பாதகமும் இல்லை. புவியரசுவுக்கு அவருடைய அண்ணன் எழிலரசின் சிறுநீரகம் சரியாகப் பொருந்தியது. ஆரம்பத்தில், டிஸ்யூ டைப்பிங்' (Tissue Typing) என்ற முறையில் திசுக்களின் பாகுபாட்டையும், இரத்தத்தையும் பரிசோதித்தபின் மதுரைப் பல்கலைக் கழகத்தில் உள்ள டாக்டர் பிச்சப்பன் அவர்களும் திசுக்களின் பாகுபாட்டினை பரிசோதித்து எழிலரசின் சிறு நீரகம் புவியரசுக்குப் பொருந்தி வரும் எனத் தெரிவித்தார். இதற்கெல்லாம் பிறகுதான் இந்த அறுவைச் சிகிச்சை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.''

## செயற்கைச் சிறுநீரகம்

சிறு நீரகத்தினுள் இரத்தம் செல்வதும் வெளியேறுவதும்




1 சிறுநீரகத்திற்குக் குருதி கொண்டு செல்லும் நாளம்.

2 சிறுநீரகத்திலிருந்து குருதி எடுத்து வரும் குழாய்.

3 சிறுநீர்ப்பை.

4 சிறுநீர்க் குழாய்.

ஒழுங்குற நிகழவேண்டும். இரத்தமும் சிறுநீரும் கலக்கக்கூடாது. அப்படிக் கலந்துவிடுமானால் சிறுநீரகம் பழுதுபட்டிருப்பதாகப் பொருள்.

அப்படிப்பட்ட நிலையில், செயற்கைச் சிறுநீரக முறை (Dialysis) மூலம் அதை ஒழுங்குபடுத்தி 'யூரியா' சிறுநீரகத்தில் வராமல் இரத்தத்தோடு கலப்பதைத் தவிர்ப்பதுண்டு. இயந்திரத்தின் மூலமே இந்த வித்தை நிகழ்த்தப்படும். இராயப்பேட்டை மருத்துவமனையில் இதற்கான இயந்திரங்கள் மூன்று இருக்கின்றன.


வாரம் இரண்டு முறை, சிறுநீரகம் பாதிக்கப்பட்டவருக்கு இந்த முறையில் சிகிச்சை செய்யலாம். இப்படிப்பட்ட 'நோயாளிகள்' இப்போது மாதம் பன்னிரண்டு பேராவது வருவதாகச் சொல்கிறார்கள்.

வெளி மருத்துவமனையில் இந்த செயற்கைச் சிறுநீரகச் சிகிச்சை செய்து கொள்ளுவதென்றால் ஒரு தடவைக்கு ஏறத்தாழ நானூறு ரூபாய் பிடிக்குமாம்.

இந்த விதச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்படுவதற்கு முன்னால், புவியரசுக்கு 94 முறை செய்யப்பட்டது என்று தெரிவித்தார் டாக்டர் முத்துசேதுபதி.

**டாக்டர் ராஜசேகரன்**

ராயப்பேட்டை மருத்துவமனையின் சிறுநீரக அறுவைச் சிகிச்சைப் பிரிவு (Urology Department) தலைமை மருத்துவர், பேராசிரியர் டாக்டர் ஏ. ராஜசேகரன் அவர்கள் நமக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். மாநில அரசு மருத்துவமனைகளில் எல்லாம் நடைபெறாத அளவில் தமிழக அரசு மருத்துவமனையான இராயப்பேட்டை மருத்துவமனையில் மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சையை (Renal Transplantation) வெற்றிகரமாக நடத்தி முடித்த பெருமிதம் அவரது தோற்றத்திலேயே தெரிந்தது.





தன்னுடைய ஒரு சிறுநீரகத்தைத் தானம் செய்த எழிலரசு.

டாக்டர் ராஜசேகரன் அவர்களின் குழுவில் - டாக்டர் ஸாகூர் அகமது, டாக்டர் எஸ். துரைசாமி, டாக்டர் எஸ். வரதராஜன், டாக்டர் ஆர். என். சுஜீர், டாக்டர் எஸ். பி. உமாபதி ஆகியோர் இடம் பெறுகிறார்கள். ரங்கமணி சரோஜினி, ஞானாம்பாள் லாளி ஆகிய செவிலியர் குழாமும், அறுவைச் சிகிச்சையின் போது பெரிதும் தமக்கு உதவியாக இருந்ததை நன்றிப் பெருக்கோடு சொல்லிக் கொள்கிறார் அவர்.

இது மட்டுமல்ல —இன்னும் இருவரும் அவரது நன்றிக்குரியவர்களாக நமக்குத் தெரிவிக்கப்படுகிறார்கள். ஒருவர் -புவியரசுக்கு அறுவைச்சிகிச்சை நடந்த போது மயக்க மருந்து செலுத்திய டாக்டர் சீனிவாசன், இன்னொரு

டாக்டர் ஏ. ராஜசேகரன் தமது மருத்துவக் குழுவினருடன்.





மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை முடிந்து குணம் பெற்று வரும் இளைஞன் புவியரசை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே, டாக்டர் ஏ. ராஜசேகரன், மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் ஞானதேசிகன், டாக்டர் எம். ஏ. முத்துசேதுபதி, ஆகியோர் பார்க்கிறார்கள்.

வர்-அறுவைச் சிகிச்சை நடைபெற்றபோது புவியரசுவின் இதயத்துடிப்பு சீராக இருக்கும்படி கண்காணித்த டாக்டர் ஆர். கோவிந்தராசன்.

''அறுவைச் சிகிச்சை வெற்றி, இவர்கள் எல்லோரும் என்னுடைய நோக்கம் அறிந்து, வேகம் உணர்ந்து நல்லபடி ஒத்துழைப்பு தந்ததால் தான் அமைந்தது என்றே சொல்லலாம். இவர்களில் யார் என்னைப் புரிந்துகொள்ளத் தவறியிருந்தாலும் நான் சிரமப்பட்டிருப்பேன்!'' என்று பெருமையோடு தன் கீழ் பணியாற்றுவோர் பற்றிக் குறிப்பிட்டார் டாக்டர் ஏ. ராஜசேகரன்.

அந்தோனி, வரப்பிரகாசம், இராமன், வின்சென்ட், மதுரை, கண்ணன், குமார், சுப்பையா- என மற்ற ஊழியர்கள் பெயரையும் அவர் தெரிவிக்கத் தவறவில்லை.

''சிறு நீரகக் கோளாறு அத்தனை ஆபத்தானதா?'' என்று நாம் அவரைக் கேட்கிறோம்.

''இல்லையா பின்னே?'' என்று கேட்டுவிட்டு அவர் சொன்னார்- ''மனித உறுப்புகளில் மூளை, இதயம் போன்றவை ஒன்றாக இருந்தாலும் சிறுநீரகம் மட்டும் இரண்டாக அமைக்கப்பட்டுள்ளது. மனித உடலில் உண்டாகும் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முக்கிய உறுப்பு சிறுநீரகம் தான். அந்தக் கழிவுப் பொருட்கள் உடலிலிருந்து அகற்றப்படாவிட்டால் யூரியாபோன்ற பொருட்களால் மூளையும் மற்ற முக்கிய உறுப்புகளும் தாக்கப்பட்டு உயிருக்கே ஆபத்தாகிவிடும்''.


''ஆணுக்குப் பெண்ணின் சிறுநீரகத்தையும், பெண்ணுக்கு ஆணின் சிறுநீரகத்தையும் பொருத்தலாமா?''


''சிறு நீரகத்தில் பால் வேற்றுமை இல்லை; அமைப்பெல்லாம் ஒன்றுதான். ஆனால் பிளட் குரூப் ஒத்திருக்க வேண்டும்''.

உறுப்புமாற்றுச் சிகிச்சை என்பது மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களில் ஒன்றேயாகும். ஆனால் ஒன்று— ஒருவருக்கு இன்னொருவரின் உறுப்பை எடுத்துப் பொருத்தும்போது இரத்த அணுக்கள் ஒரே வகையினதாக இல்லாத பட்சத்தில் அதன் எதிர்ப்புச் சக்திகள் வெளியாகி அந்த உறுப்பு ஏற்காமல் எதிர்த்துச் செயலிழக்கச் செய்துவிடும்.

''இருதய நோயினால் இறப்பவர்களுக்கு அடுத்தபடி, அதிக

அறுவைச்சிகிச்சையின் போது உடனிருந்து உதவிய செவிலியர்.





டாக்டர் எம். ஏ. முத்துசேதுபதி தமது மருத்துவக் குழுவினருடன்.

அளவில் உயிரிழப்போர் சிறுநீரகக் கோளாறினால் இறப்பவர்களாகவே இருக்கிறார்கள்'' என உருக்கத்தோடு சொன்ன டாக்டர் ஏ. ராஜசேகரன், ''இரண்டு சிறுநீரகத்தில் ஒன்றைத் தானம் செய்வதால் நம் உயிருக்கு எந்த ஆபத்தும் வந்து விடாது என்பதனை மக்கள், உணர்ந்து, சிறு நீரகங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வரவேண்டும். அப்படி வரும் பட்சத்தில் அதனால் ஏற்படும் சாவைத் தவிர்க்கலாம்—குறைக்கலாம்''.

மேனாடுகளில் இதைச்சார்ந்து நடக்கும் ஒரு நல்ல காரியத்தையும் அவர் நமக்குத் தெரிவித்தார்.

யாராவது விபத்தில் சிக்கி உயிரிழக்கிறார்கள் - அல்லது மூளை கலங்கி அடியோடு சுவாதீனம் இழக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய சிறுநீரகத்தை அவர்கள் உறவினர் அனுமதியோடு எடுத்து, சிறுநீரகக் கோளாறால் அவதிப்படுவோருக்குப் பொருத்தி வாழ்வளிக்கிறார்கள்.

''ஒருவருக்கு இன்னொருவருடைய சிறுநீரகம் ஒத்துவராத நிலையில் அதை மறுபடி அறுவை சிகிச்சை செய்து நீக்கிவிட்டுச் சரியான வேறொன்றைப் பொருத்தலாம்'' என்றார் அவர்.

''ஒருவர் உடம்பிலிருந்து சிறுநீரகத்தை எடுப்பது எப்படி? இன்னொருவர் உடம்பில் அதைப் பொருத்துவது எப்படி?''

இப்படி நாம் கேட்டதும் டாக்டர் ராஜசேகரன் , படம் போட்டே நமக்கு விளக்க ஆரம்பிக்கிறார் - ''தானம் அளிக்கிறவரின் ஒரு சிறுநீரகத்தை அவற்றின் இரத்தக்குழாய்களுடனும் சிறுநீர்க்குழாயுடனும் அகற்றி, அப்படி அகற்றிய ஒருமணி நேரத்திற்குள் பாதிக்கப்பட்ட வரின் அடிவயிற்றில் கவனமாகப் பொருத்த வேண்டும். பொருத்துவது என்றால், தானமளித்தவரின் இரத்தக் குழாய்களைப் பாதிக்கப்பட்டவரின் இரத்தக் குழாய்களோடும், சிறுநீர்க் குழாயினை நோயாளியின் சிறுநீர்ப் பையின் உள்ளும் இணைக்கவேண்டும். இந்த அறுவைச்சிகிச்சை ஒரே அறுவைச்சிகிச்சைக் கூடத்தில், ஒரே நேரத்தில் இரண்டு குழுவினரால் - அதாவது ஒரு குழு ஒருவர் உடலிலிருந்து சிறுநீரகத்தை அகற்றவும், இன்னொரு குழு மற்றவர் உடலில் அதைப் பொருத்தவும் வேண்டும். எடுக்கப்பட்ட சிறு நீரகம் பொருத்தப்படுகிற இடைவெளியில் அதன் இயக்கம் ஐஸில் வைத்துப் பாதுகாக்கப்படும். என்ன இருந்தாலும் எடுக்கப்படுவதும் பொருத்தப்படுவதும் ஒருமணி நேரத்திற்குள் முடிந்தாக வேண்டும்''.

டாக்டர் சொல்லச் சொல்ல, கண்ணெதிரிலேயே அந்த அறுவை சிகிச்சை நடப்பதைப் பார்ப்பது போலிருக்கிறது நமக்கு!

''இரத்தச் சேமிப்பு, கண்கள் சேமிப்பு போலச் சிறு நீரகத்தையும் சேமித்து வைத்தால் என்ன?''

''அது ஒருபோதும் முடியாது. ஏனென்றால் அதன் இயக்கம் ஒரு மணி நேரம்தான் செம்மையாக இருக்கும்!'' என்றார் டாக்டர்.

''மொத்தத்தில் இந்த அறுவை சிகிச்சைக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?''

''ஆறு மணி நேரம் பிடிக்கும்'' இப்படிச் சொன்ன டாக்டர் ராஜசேகரன் இராயப்பேட்டை மருத்துவமனை தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களும் அளித்த உதவிகளும் ஆசியும்தான் இந்த சிகிச்சை வெற்றிக்கு முழுமுதற் காரணமாகும்'' என்றும் தெரிவித்தார்.

''எல்லா வயதினரும் இந்த சிகிச்சையைச் செய்து கொள்ளலாமா?'' என்ற நம் கேள்விக்கு— ''ஊகூம், சின்னஞ்சிறு பாலகர்களுக்கும் செய்ய முடியாது, தொண்டுக் கிழவருக்கும் செய்ய முடியாது. இதைத் தாங்கும் சக்தி அவர்கள் உடலுக்கு இருக்காது'' என்று பதில் கூறினார் டாக்டர்.

**புவியரசு எழிலரசு**

இந்தியாவின் கவனமே தன் பக்கம் திரும்பும்படி இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை நடைபெற்றது ஏப்ரல் இருபதாம் தேதி!

சிறுநீரகத்தில் ஒன்றைத் தன் தம்பிக்குத் தானமளித்த எழிலரசைப் போய்ப் பார்த்துப் பேசினோம். அறுவைச் சிகிச்சையின் பின் தனக்கு அவ்வளவுக்கு உபாதை இல்லை என்றும் மே முதல் தேதி 'டிஸ்சார்ஜ்' ஆக விருப்பதாகவும் மகிழ்வோடும் தெளிவோடும் தெரிவித்தார் அவர்.

சிறு நீரகத்தைப் பொருத்திக் கொண்ட புவியரசு குளிர்சாதன வசதிசெய்யப்பட்ட அறையில் வைக்கப்பட்டுள்ளார்.

''பொருத்திய சிறுநீரகத்தின் ஏற்பு - எதிர்ப்பைக் கண்காணிக்கவும், வேறு ஏதேனும் கிருமிகள் தொற்றுவதைத் தவிர்க்கவுமே இப்படி வைத்திருக்கிறோம்'' என்றார்கள் மருத்துவர்கள்.

தெம்போடு நடமாடிய அவருக்கு ஆசி வழங்கி, அரசு மருத்துவமனைகளின் அந்தஸ்தை உயர்த்திய இராயப்பேட்டை மருத்துவமனையை விட்டு வெளியேறுகிறோம் நாம்.

இவர்களது நற்பணி என்றும் வெற்றி பெற வாழ்த்துவோம்.

# சட்டமன்றத்தில் திரட்டியவை!

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய நிர்வாகத்தின் கீழ்க்கண்ட இடங்களில் எட்டு கைமுறை காகித அலகுகளும், ஆறு காகிதக் கூட்டுறவு சங்கங்களும் இயங்கி வருகின்றன.

அலகுகள்

| | இடங்கள் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | வீரராகவபுரம் | செங்கல்பட்டு |
| 2. | மாமண்டூர் | செங்கல்பட்டு |
| 3. | அரப்பாக்கம் | வடஆர்க்காடு |
| 4. | பிடாகம் | தென்ஆர்க்காடு |
| 5. | மகேந்திர மங்கலம் | திருச்சி |
| 6. | செண்பகப்புதூர் | பெரியார் |
| 7. | அத்தியூத்து | நெல்லை |
| 8. | செய்துங்கநல்லூர் | நெல்லை |

காகிதக் கூட்டுறவு சங்கங்கள்

| | | |
|---|---|---|
| 1. | செம்பனார் கோவில் | தஞ்சை |
| 2. | கக்கன்புரம் | தர்மபுரி |
| 3. | பரப்பாடி | நெல்லை |
| 4. | வேப்பங்குளம் | நெல்லை |
| 5. | பிரம்மதேசம் | நெல்லை |
| 6. | கண்ணஞ்சேரி | கன்யாகுமரி |

கீழ்க்கண்டஐந்து புதிய காகித அலகுகள் துவங்க வாரியம் அங்கீகாரம் அளித்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | பொன்னவராயன் கோட்டை | தஞ்சை |
| 2. | வந்தவாசி | வடஆர்க்காடு |
| 3. | வடகீரமங்கலம் | புதுக்கோட்டை |
| 4. | சித்தக்கன்னி | புதுக்கோட்டை |
| 5. | கமுதி | இராமநாதபுரம் |

* * *

**1976** ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 35 சி.சி. சக்தி வாய்ந்த இயந்திரங்களை சைக்கிள் ரிக்ஷாக்களில் பொருத்த அரசு அனுமதித்துள்ளது. அண்மையில் 120 சி.சி. இயந்திரம் பொருத்திய 50 புதிய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்கவும், ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கும் பழைய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு 120 சி.சி. இயந்திரம் பொருத்த அனுமதித்தும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

* * *

**1979-80**-ல் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 3.67 இலட்சம் டன்கள். 1980-81ல் சர்க்கரை உற்பத்தி 3.92 இலட்சம் டன்கள். கூடுதலாக 25,000 டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடும்.

* * *

தஞ்சை மாவட்டத்தில் புதிதாகச் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மாயூரம் பகுதியிலோ அல்லது சீர்காழிப் பகுதியிலோ ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

* * *

எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிப்பதற்கு வகைசெய்யும் நோக்குடன் அவ்வகுப்பை நடுநிலைப் பள்ளிகளிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றலாமா என்பது குறித்து கருத்து அறியப்பட்டு வருகிறது.

* * *

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் தாலுக்கா அலுவலகம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளது.

* * *

ஆரணி நகருக்குக் கிழக்கே உள்ள பையர் என்னும் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான ஏரியை மீன் துறை எடுத்துக் கொண்டு அதில் விரைவாக வளரும் மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. ஓராண்டிற்குப் பின் கிடைக்கும் வளர்ந்த மீன்களை நகர மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம்.

— தொகுப்பு: அ. மருது —

## அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை :
முதுமலைக் காட்டில் ஒரு காட்சி

இரண்டாவது அட்டை :
கண்கவர் கழுகு மலைச் சிற்பம்

கடைசி அட்டை :
முண்டந்துறை வனவிலங்கு உய்விடத்தில் ஒரு காட்சி

வண்ணப் படங்கள் உதவி
சுற்றுலாத் துறை
தமிழ்நாடு அரசு

# காலம் அருளிய கவிஞன்



– ப. ஜீவானந்தம் (ஜீவா)

"ஷேக்ஸ்பியரால் மட்டுமே ஷேக்ஸ்பியரின் வரலாற்று ஆசிரியனாக விளங்க முடியும் அவனும் கூட, நம்முள் இருக்கும் ஷேக்ஸ்பியரை அல்லாமல் வேறெதையும் சொல்ல முடியாது ''– இவ்வாறு அமெரிக்கப் பேரறிஞனாகிய எமர்சன் ஒரு தடவை கூறினான்.

கவிஞர்களையும், கலைஞர்களையும் பற்றிக்கூறுவது இத்தன்மையது என்றால், நான் கண்ட கவிஞர் பட்டுக்கோட்டையை, தமிழ்ப் பெருமக்களான நீங்கள் கண்ட கவிஞர் பட்டுக்கோட்டையை நினைவூட்ட முயல்வது எப்படி இருக்குமென்று சொல்லத் தேவை இல்லை.

ஒருமுறை, நான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை கவிஞர் பட்டுக்கோட்டை என்று அழைத்தேன். ''அண்ணாவுக்குக்கூட நான் 'கவிஞர்' ஆகிவிட்டேனா'' என்று அவர் விநயமாக எதிரொலித்தார். 'கவிஞர்' என்ற சொல்லைப் பற்றிய அவருடைய மதிப்பீடு எவ்வளவு ஆழமும் அகலமும் உடையதோ இன்று வரையில் எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு அவர் கவிஞர் தான்.

**'மக்கள் கவிஞர்'**

எந்தப் புலவர் பேரவையும், எந்தப் பல்கலைக் கழகமும், எந்தத் தமிழ்த் தெய்வமும் பட்டுக்கோட்டைக்கு 'மக்கள் கவிஞர்' என்ற பட்டம் சூட்டவில்லை. மக்கள் மன்றமே அவருக்கு 'மக்கள் கவிஞர்' என்ற பட்டத்தினை மனமார, வாயார வழங்கிற்று.

1957, '58, '59 ஆகிய ஆண்டுகளில், தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதிலும் அவருடைய பாடல்களுக்குச சாதாரணத் தமிழனிடம் ஏற்பட்ட விரைவான வரவேற்பு, எந்தக் கவிஞனுடைய பாடல்களுக்கும் எந்தக் காலத்திலும் ஏற்பட்டதில்லை.

படாடோபத்தில் மயங்கி, 'நஞ்சும் வேம்பும் நன்று' என்று சொல்லும் தமிழகத்தில் பட்டுக்கோட்டை பாடல்களுக்கு ஏற்பட்ட துரித வரவேற்பு, உண்மையில் காலத்தின் அதிசயம்தான், பட்டுக்கோட்டையின் பாடல்களைப் பொறுத்தமட்டில், செட்டியார் மிடுக்கல்ல, சரக்குத்தான் மிடுக்கு என்று சொல்ல வேண்டும்.

இறுதிக் காலத்தில் ஒரு பாடலுக்கு ஓராயிரம் ரூபாய் வீதம் பெற்றார் அவர். அதுவும், அவர் நிர்ணயித்த சன்மானம்தான் அது. ஆனால், திரைப்படத் தொழிலதிபர்களோ, தொகை எழுதாது 'செக்' புத்தகத்தை நமது கவிஞரிடம் கொடுத்து, இஷ்டம்போல், எழுதிக் கொள்ளச் சொன்னார்கள். திரைப்பட உலகில் அவ்வளவு மதிப்பேறி நின்றன அவருடைய பாடல்கள்.

**அனுபவ ஆசான்**

2500 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் வாழ்ந்த அடிமையும் உலகு புகழ் கட்டுக்கதை ஆசிரியனுமாகிய ஈசாப், ''அனுபவமே சிறந்த ஆசிரியன்'' என்று அறிவுறுத்தினான். வாழ்க்கை அனுபவத்தையே முக்கிய உணவாகக் கொண்டு வளர்ந்தவர் கவிஞர் பட்டுக்கோட்டை. அவர் கொஞ்ச வயதில் நம்மை விட்டு மறைந்து விட்டார். ஆயினும் வயதுக்கு மிஞ்சிய ஆழ்ந்த அனுபவம் உடையவர்.

''எழுத்துக் கலைஞனாகப் பிரகாசிப்பதற்குச் சாமர்த்தியம் மட்டும் இருந்தால் போதாது; சரக்கும் இருக்க வேண்டும்'' என்று கூறுகிறான் ஒரு ஆங்கில ஆசிரியன். பட்டுக்கோட்டையின் பாடல்களில் அனுபவச் சரக்கு நிறைந்து கிடப்பதை வரிக்குவரி காணலாம். பல்வேறுபட்ட அடித்தட்டு மக்களின் வாழ்க்கை அனுபவங்களை மிகக் கூர்மையாகத் தன் மயப்படுத்திய கவிஞராக அவர் விளங்கினார்.

**உயிராற்றல் உள்ள சொல்**

''அறிஞர் குழுவிலே பேசப்படும் மொழியைவிட தெருவிலே பேசப்படும் மொழிக்குத்தான் அதிக ஆற்றல் உண்டு'' என்று அமெரிக்க அறிஞனான எமர்சன் கூறுகிறான். பட்டுக்கோட்டை அகராதிப் புலவன் அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். ஆயினும் எளிமையும் இனிமையும் வன்மையும் மிக்க சொற்களுக்கு அகராதிப் புலவர்கள்— மெத்தப் படித்த அறிஞர் திலகங்கள் பட்டுக்கோட்டையிடம் கையேந்தி நிற்க வேண்டும் என்று சொன்னால் அது மிகையாகாது.

**எண்ணமும் வண்ணமும்**

பட்டுக் கோட்டை செயற்கைப் பெரும் புலவனுமல்ல, பன்மொழிப் புலவனுமல்ல, அவர் தமிழ் மொழியில் குறிப்பிடத்தக்க புலமை படைத்தவர்கூட அல்ல. அவர் செம்மைசான்ற தமிழ் யாப்புக்களில் பல கவிதைகள் பாடியவருமல்ல, அவர் தமது எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் நாடோடிப் பாடல்களுக்கு, சிந்துகளுக்குப் பாரம்பரியத்திற்கு அடங்காத சுதந்திர உணர்ச்சியோடு, பலப்பல புதிய வண்ணங்களைத் தீட்டியிருக்கிறார்.

பட்டுக் கோட்டை ஒரு சிறந்த இயற்கை கவிஞர்.

பட்டுக்கோட்டை சாதாரணத்தமிழ்ப் படிப்புள்ளவர். அவர், ''இயற்கையோடு இசைந்த வாழ்வில்'' திளைத்து பாடல் உருவங்களில் கவிதைகள் செய்தார். ''கவிதை சொல்பவன் கவிஞன் அல்ல; கவிதை செய்பவனே கவிஞன்' என்று சிறந்த ஆங்கில எழுத்துக் கலைஞர் தாமஸ் கார்லைல் கூறிய கூற்றினை நினைப்பில் வைத்துக் கொண்டே, ''பட்டுக்கோட்டை கவிதை செய்தார்'' என்று கூறுகிறேன்.

இயற்கை வாழ்வை ஊன்றிப் படித்தவர் கவிஞர் பட்டுக்கோட்டை.

அவரது பாடல்களைத் திரும்பத் திரும்ப பாடி, பாடலின் கருத்தை மென்று மென்று சுவைத்தால்தான், பாடல் தேனினும் இனிப்பது தெரியவரும். பட்டுக்கோட்டை இயற்கை கவிஞன் என்பதன் உட்கருத்தும் விளங்கும்.

ஒரு பாடல்:

பெண்: கொடுமையையும் வறுமையையும்
கூடையிலே வெட்டிவை
கொஞ்சநஞ்சம் பயமிருந்தால்
மூலையிலே கட்டிவை
நெடுங்கவலை தீர்ந்ததென்று
நெஞ்சில் எழுதி ஒட்டிவை
நெருஞ்சிக் காட்டை அழித்து —அதில்
நெல்லுவிதையைக் கொட்டிவை
ஆண்: ''ஏழைகளின் புது உலகம்
தெரியுதடா—நாம்
ஏமாந்து வந்த நிலை
ஒழியுதடா.''


''கவிஞன் என்று நாம் நன்மதிப்புக் காட்டும் ஒருவனிடம் உள்ள சிறப்பு என்னவென்றால், நாம் சொல்ல விரும்புவதை எல்லாம் அவன் ஒருவனே அழகாகச் சொல்லி முடிக்கிறான்'' என்று இரவீந்திரநாத் தாகூர் கூறுகிறார். மேற்காட்டிய வரிகளைப் படித்ததும் அல்லது பாடக் கேட்டதும் கோடானுகோடிச் சாதாரண மக்கள், ''நாம் சொல்ல விரும்புவதை எல்லாம் பட்டுக்கோட்டை ஒருவரே அழகாகச் சொல்லி முடிக்கிறார்'' என்பார்கள்.

''உணர்ச்சிவாயிலாக வாழ்க்கையைப்பார்ப்பதே கலை'' என்கிறான் பிரெஞ்சுப் பேராசிரியனாகிய எமிலி ஜோலா. ஜோலாவின் இலக்கணப்படி, மேற்கூறிய பாடலைப் பார்த்தால் பட்டுக்கோட்டை சிறந்த கலைஞர்'' என்பதில் ஐயமில்லை.

''உள்ளத்தை உணர்ச்சி வழியில் இயக்குவது கலை'' என்கிறான், தாமஸ் டிக்குன்ஸி என்ற பேர்போன ஆங்கில நாவலாசிரியர். மேற்கூறிய பாடலைப் பாடுங்கள்! அல்லது பாடக் கேளுங்கள்! ''பட்டுக்கோட்டை உள்ளத்தை உணர்ச்சி வழியில் இயக்கும் கவிஞன்' என்பது தெள்ளத் தெளிவாகும்.

**கவிதையின் உடலும் உயிரும்**

''பொருளே கவிதையின் உடல்; கற்பனையே அதன் உயிர்'' என்கிறான், ஆங்கில



**கலை இலக்கியப் பெருமன்றம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம்-தமிழ்க் கவிஞர் மன்றம் ஆகியன்வ இணைந்து சென்னை கலைவாணர் அரங்கில் (6.5.1981ல்) நடத்திய கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் 51ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அவரது திருவுருவப் படத்தை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் திறந்துவைத்தார்.**

இலக்கிய ஆராய்ச்சி மன்னனான கோல்ரிட்ஜ். ''கற்பனை!'' ஆ! இந்த அற்புதமான ஆற்றல் மனிதனிடம் குடி கொள்ளவில்லை என்றால், ''கலை' என்ற ஒன்று வாழ்க்கையில் இடம் பெற்றிருக்கவே முடியாது'' என்கிறான் புது உலக இலக்கிய மேதையான மார்க்ஸிம் கார்க்கி தாய்ப்பால் போல் சீக்கிரம் சீரணிக்கத் தகுந்த எத்தனையோ அருமையான கற்பனைகளை, பட்டுக்கோட்டையின் பாடல்களில் பரக்கக் காணலாம்.

''பள்ளம் மேடுள்ள பாதையிலே
பார்த்து நடக்கணும் காளைகளே
பழைய போக்கிலே பயனில்லே-நல்ல
விஷயமிருக்கணும் மூளையிலே''

இப்படி எத்தனை எத்தனையோ நெஞ்சில் இன்பப் பெருக்கெடுக்கச் செய்யும் கற்பனைகள்!

**காதலிப்போம்**

''கவிஞர்கள் செயற்கைக் கவிஞர்கள், இயற்கைக் கவிஞர்கள் என இருவகைப் படுகிறார்கள். முன்னவரை வணங்குவோம்; பின்னவரைக் காதலிப்போம்'' என்று கூறுகிறான் அமெரிக்க ஞானியான எமர்சன். மக்கள் கவிஞரான, இயற்கைக் கவிஞரான பட்டுக்கோட்டையை நாம் நெஞ்சார நேசிக்கிறோம்.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் நினைவு என்றும் பசுமையாகத் தமிழகம் எங்கும் நின்று நிலவட்டும்! அவர் தம் பாட்டுத் திறமும் உயர் குறிக்கோளும் பண்பாடும் வளரும் தமிழகத்திற்கு முன்மாதிரியாக விளங்கட்டும்.

**நன்றி: (''தாமரை'' அக்டோபர் 1960)**



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

தொகுப்பு: அ. மருது

## 4—4—81

கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதில் தவறு நடக்காமல் இருக்க-தரமான துணிகளை ஏற்றுமதி செய்ய பரிசோதனைக் குழு என்ற அமைப்பை ஏற்படுத்த உத்தேசித்து இருப்பதாக மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்தார்.

## 8—4—81

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஏழை எளிய மக்கள் கறவை மாடுகளை வாங்கி தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள ரூ. 2 இலட்சத்திற்கு மேல் மானியமாகவும், ரூ 8 இலட்சத்திற்கு மேல் குறைந்த வட்டியில் கடனாகவும் அரசும் வழங்கியுள்ளது.

## 12—4—81

புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ரூ. 1,75,000 செலவில் கட்டப்பட்ட புதிய அறிவியல் ஆய்வுக் கட்டிடத்தை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.

## 15—4—81

தமிழ்நாட்டில் உள்ள வறட்சிப் பகுதிகளில் ரூ. 8 கோடி நிலவரி ரத்து செய்யப்படும் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

## 16—4—81

இராமநாதபுரத்தில் நடந்து வந்த மோதல்களை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் நேரிடையாகச் சென்று விசாரணை நடத்தினார்.

## 22—4—81

மறைந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜீவானந்தத்தின் குடும்பத்திற்கு தமிழக அரசு மாதம் ரூ. 500 ஓய்வு ஊதியம் அளிக்க முடிவு செய்துள்ளது.

## 25—4—81

தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் தொடங்கப்பட உள்ளது. இப்பல்கலைக் கழகம் தஞ்சை அரண்மனையில் தொடங்கப்படும்.

## 26—4—81

மதுரையில் நடந்த 5வது-உலகத்தமிழ் மாநாடு நிகழ்ச்சிகள் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் எல்லா திரைப்பட அரங்குகளிலும் திரையிடப்படும் என்று மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்.

## 28—4—81

சிறிய விவசாயிகள் கட்டவேண்டிய கடனுக்கான வட்டியும், அபராத வட்டியும் சேர்த்து ரூ. 37 கோடி வட்டி ரத்துச் செய்ய வேண்டும் என்று விவசாய உயர் மட்டக் குழுவின் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் கூடிய குழு முடிவெடுத்துள்ளது.



ஆண்டுதோறும் சென்னைத் துறைமுகத்திற்கு S S Universe என்ற அந்தக் கல்விக் கப்பல் இரண்டு முறை வருகிறது. இந்தியாவில் சென்னைக்கு மட்டும் தான் இந்தக் கல்விக் கப்பல் வருகிறது.

அமெரிக்க நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களும் இக் கல்விக்கப்பலில் பயிலுகிறார்கள். இதில் இளங்கலை பட்டப் படிப்பு மட்டுமே பயில இயலும்.

உலகிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களும் Semester at Sea என்ற வகுப்பில் பயிலலாம். ஆனால், அந்தப் பல்கலைக் கழகங்கள் பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தோடு ஓர் உடன்பாடு செய்து கொண்டிருக்க வேண்டும். மாணவர்கள் கடலில் இருக்கும் நூறு நாட்களையும் ஒரு செமஸ்டர் படிப்புக்காலமாகஏற்றுக்கொள்ள ஒப்புக் கொள்ள வேண்டும். ஆண்டுதோறும் கல்விக் கப்பல் உலகை இரண்டு முறை வலம் வருகிறது. ஒவ்வொரு முறையும் புதிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்.

இக்கப்பலில் ஒரு செமஸ்டர் பயில ஒரு மாணவர் 8,600 அமெரிக்க டாலர்களைக் கட்டணமாகக் கட்ட வேண்டும். கப்பலில் உதவியாளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் —மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை உண்டு. வேறு சில கட்டணச் சலுகை முறைகளும் உள்ளன.

பிப்ரவரி மாதம் 5-ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள லாடர்டேட் துறைமுகத்தில் புறப்படும் இந்தக் கல்விக் கப்பல் லாகுனவரா, ரியோடி ஜனீரோ, கேப்டவுன், டர்பன், மொம்பாஸா, கொழும்பு, சென்னை, ஹாங்காங் கீலுங், கோபே வழியாக மே 16ஆம் நாள் சான்பிரான்சிஸ்கோ துறைமுகத்தை அடையும்.

இப்படி ஒரு முறை உலகைச் சுற்றிய அந்தக் கல்விக் கப்பல் சேர்ந்த இடத்திலிருந்து வந்த வழியாகத் திரும்பி உலகை மீண்டும் வலம் வரும்.


அடுத்த செமஸ்டராக, செப்டம்பர் 7ஆம் நாள் புறப்படும் கல்விக் கப்பல் ஜப்பானிலுள்ள கோபே, தைவானிலுள்ள கீலுங் ஹாங்காங், பிலிப்பைன்ஸிலுள்ள மணிலா, இந்தோனேஷியாவிலுள்ள ஜாகார்த்தா, இந்தியாவைச் சேர்ந்த சென்னை, இலங்கையைச் சேர்ந்த கொழும்பு, எகிப்திலுள்ள ஸஃகபா துறைமுகம், அலெக்சான்டிரியா, ஏதென்ஸ், ஸ்பெயினைச் சேர்ந்த மலகா, அமெரிக்காவைச் சேர்ந்த லாடர்டேட் துறைமுகத்தை டிசம்பர் 16ஆம் நாள் அடையும்.

அந்தந்த நாடுகளின் துறைமுகங்களுக்குச் சென்றால் வகுப்புகள் நடைபெறுவதில்லை. கடலில் செல்லும்போழுதுதான் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இக்கல்விக் கப்பலில் மாணவர்கள், கப்பல் சிப்பந்திகள், உதவியாளர்களுடன் ஆசிரியர்களின் குடும்பங்களும் பயணம் செய்கின்றனர். சில பேராசிரியர்கள் தாங்கள் பணிபுரியும் பல்கலைக் கழகத்திலிருந்து கல்விக் கப்பல் போகும் நாட்டுக்கு விமானம் மூலம் வருகிறார்கள். அக்கப்பல் நிற்கும் துறைமுகத்திலிருந்து

# மிதக்கும் பல்கலைக்கழகம்

**மாமூலன்**










பிடத்தக்கது. மாணவர்கள் இருவர் ஓர் அறையில் தங்கும் அளவுக்குத் தனித்தனியாக அறைகள் உள்ளன.

ஒவ்வொரு நாட்டின் துறைமுகத்தில் தங்கும் மூன்று அல்லது நான்கு நாட்களில் அதில்வரும் மாணவர்கள் அந்நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னைக்கு வருவோரில் பலர் இதற்குமுன்னே டில்லி, தாஜ்மகால் என்று சென்று பார்ப்பதாகவே இருந்தனர். ஆனால், கடந்த ஆண்டிலிருந்து தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பார்த்து வருகிறார்கள். இம்முறை மதுரை, இராமேசுவரம் போன்ற ஊர்களுக்கும் சென்று வந்தனர்.

இக்கப்பலில் வரும் மாணவ, மாணவியர் மிகவும் ஆசைப்படுவது, இந்தியக் குடும்பங்களுடன் ஓரிரு நாட்கள் தங்கி அவர்களுடைய வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.

முன்பெல்லாம், சென்னைப் பல்கலைக் கழகத்தோடு கல்விக் அதுபோகும் சில நாடுகளுக்குச் செல்கிறார்கள். தாங்கள் நடத்த வேண்டிய பாடத்தைக் கற்பித்த பிறகு, அடுத்த துறைமுகத்தில் இறங்கி விமானத்தின் மூலம் ஊர் திரும்பி விடுகிறார்கள்.

S. S. Universe என்ற இக் கல்விக் கப்பலின் உட்புறம் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைவிட மிக நேர்த்தியாக அழகுமிக்கதாக இருக்கிறது. மாணவர்களின் வகுப்புகள் கடலைப் பார்த்துக் கொண்டே கல்வி பயிலும் வகையில் அழகுமிக்கதாக உள்ளன.

பாடங்களைப் பயிலும் மாணவர்கள் அமர பலவிதமான இருக்கை வசதிகள்! சில வகுப்பறைகளில் காலை நீட்டிச் சாய்ந்து கொண்டு பாடங்களைக் கேட்கும் வகையில் கூட இருக்கைகள்! ஏழு அடுக்கு உள்ள இக் கப்பலில் நீச்சல் குளம், கூடைப் பந்து விளையாடும் இடம், பொது அரங்கு, நூலகம் என்று பலவசதிகள் உள்ளன.

இந்த முறை ஏப்ரல் திங்களில் சென்னைக்கு வந்த S S Universe கப்பலில் 520 மாணவர்கள் இருந்தனர். இவர்களில் ஆண்களைவிட பெண்களே அதிகமாக இருந்தனர் என்பது குறிப்

## 'கல்விக் கப்பல்' சில செய்திகள்

அமெரிக்க நாட்டிலுள்ள பிட்டிஸ்பர்க் பல்கலைக் கழகமும், (University of Pittsburgh) கப்பல் வாரிய கல்வி நிறுவனமும் இணைந்து செயல்படுத்திவரும் 'Semester at sea' என்ற கல்விக் கப்பல் பாடமுறை கடந்த 14 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

மிதக்கும் பல்கலைக் கழகத்திற்காக மாற்றியமைக்கப்பட்ட 'கியூன் எலிசபெத்' என்ற கப்பல் ஹாங்காங் துறைமுகத்தில் தீப்பற்றி எரிந்துவிட்டதால், இப்பொழுதுள்ள S. S. Universe என்ற கப்பல் திரு சி. ஒய். துங்கினால் வாங்கப்பட்டு இக்கல்விப் பணிக்காக அளிக்கப்பட்டுள்ளது.

திரு சி. ஒய். துங் உலகிலுள்ள மிகப் பெரிய கப்பல் உரிமையாளர்களில் ஒருவர் ஆவார். கடலில் கல்வி கற்பிக்கும் முறையில் ஈடுபாடுடைய இவர் S. S. Universe கல்விக் கப்பலாக அமையும்படி மாற்றி அமைத்து கப்பல் வாரிய கல்வி நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளார்.

'Semester at Sea' பாடத்திட்டத்தில் இதுவரை 500 கல்லூரிகளைச் சேர்ந்த 12,000க்கு மேற்பட்ட மாணவர்கள் படித்துப் பயனடைந்துள்ளனர்.

இக்கல்விக்கப்பலில் 60 வகையான படிப்புகள் உள்ளன என்று சொன்னால் வியப்படைவோம். மானிடவியல், வணிகம் பற்றி பயிலும் மாணவர்களே கல்விக் கப்பலில் அதிகம் பயிலுகிறார்கள்.







கப்பலைச் சேர்ந்தவர்கள் தொடர்பு மிகுதியாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால், இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் நாகராஜன் போன்றவர்களின் பெரு முயற்சியால் நெருக்கமான தொடர்புகள் உருவாகி வருகின்றன. S S Universe சென்னைத் துறைமுகத்திற்கு வரும் முதல் நாள், பல்கலைக் கழக மாணவர்கள் அக்கப்பலுக்குச் சென்று அவர்களைச் சந்தித்து உரையாடுகின்றனர். அக்கப்பலில் வருவோரில் சிலருக்கு இவ்வாண்டு சென்னைப் பல்கலைக கழக மாணவர்கள் சிலரின் குடும்பத்துடன் தங்கவும் வாய்ப்பு ஏற்பட்டது.

புதிய பாடம்

இக்கப்பலில் கற்பிக்கப்பட்டு வரும் பாடங்களில் தென்கிழக்கு ஆசியா என்று உள்ள பாடத்தைத் தவிர, இந்தியா என்ற பாடத்தை தனித்து வைக்கவும் ஒப்பியுள்ளனர், கப்பல் வாரிய கல்வி நிறுவனத்தினர். இதனால் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் இக்கப்பலில் தங்கி கல்வி கற்பிக்கும் வாய்ப்பையும் பெறவிருக்கின்றனர்.

சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு இக்கல்விக் கப்பலைச் சேர்ந்தோர் நூல்களை நன்கொடையாகவும் நல்கியுள்ளனர். இப்பொழுது நம் மாணவர்கள் இக்கல்விக் கப்பலுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புகளை நிரம்பப் பெற்று வருகின்றனர்.


நாம் கப்பலைச் சுற்றிப்பார்த்து வரும்பொழுது கல்விக் கப்பலின் ஒவ்வொரு பகுதியும் நம்மை மயங்கவைப்பதால் மிக ஆர்வத்தோடு கேட்டோம். ''ஒருநாள் அல்லது ஓரிரவு விருந்தினராய் இங்கே தங்க வழியுண்டா''?

''ஊகூம்...நீங்கள் மட்டுமா! நாங்கள் செல்லும் நாடுகளில் எல்லாம் இதைக் கேட்கிறார்கள். இதற்கு இங்கே இடமில்லையே'' என்று வருத்தத்துடன் இயலாமையை வெளியிட்டனர்.

அவர்களைப் பார்த்துப் பழகிய பரவசத்தோடு விடைபெற்றுக் கொள்ளும்பொழுது கேட்கிறோம். ''உங்கள் கப்பல் பயணத்தில் ஏதாவது தாமதம் ஏற்பட வழி உண்டா''?

''இல்லை, அதை ஒழுங்காகக் கடைப்பிடிப்போம். இப்பொழுதே சொல்லிவிடுகிறோம். அடுத்த முறை எங்கள் கப்பல் சென்னைத் துறைமுகத்துக்கு அக்டோபர் 28-ஆம் தேதி காலை 8 மணிக்கு வரும்'' ஆமாம், அந்த அளவுக்கு நுணுக்கமாகத் திட்டமிட்டுச்செயல்படுகிறார்கள்.

இது மிதக்கும் கல்விக் கப்பல் என்பதைவிட, இங்கு கற்பிக்கும் துறைகளைக் கணக்கிட்டும், பல்வேறு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தோரும் உலகப் பல்கலைக் கழகம் போன்று இங்கு இணைந்திருப்பதாலும் இதனை மிதக்கும் பல்கலைக் கழகம் என்று அழைத்தலே பொருந்தும்.



# அகழ்வாய்வில் கோவலன் பொட்டல்

மா. சந்திரமூர்த்தி
பதிவு அலுவலர்.
மதுரை ராமநாதபுரம் மாவட்டங்கள்
தொல்பொருள் ஆய்வுத்துறை
தமிழ்நாடு அரசு

மதுரை அருகில் மாடக்குளம் கிராமத்தைச் சார்ந்த பழங்காநத்தம் என்னும் ஊரில் கோவலன் பொட்டல் அமைந்துள்ளது. இது தற்போது பள்ளர் சமுதாயத்தின் இடுகாடாக இருந்து வருகிறது.

**கோவலன் வெட்டுப்பாறை:**

இப்பகுதியில்தான் சிலப்பதிகாரத் தலைவன் கோவலன் கொலையுண்டதாகச் செவிவழிச் செய்தி நிலவுகிறது. இதற்கு ஆதாரமாக இங்கே கோவலன் வெட்டுப்பாறை என்னும் ஒரு பெரும் கல்லுக்குக் கோவில் எடுத்து வழிபட்டு வருகின்றனர்.

இவ் வெட்டுப் பாறையின் அருகே மற்றுமொரு பாறை பதிக்கப்பட்டுள்ளது. இதை மாதவி என்று குறிப்பிடுகின்றனர். இதனருகே ஒரு பெண்ணின் தலைப்பகுதி மட்டும் காணப்படுகிறது. இதைக் கண்ணகி என்ற பெயரில் வழிபடுகின்றனர். இத் தலைப் பகுதி சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு கோவலன் பொட்டலின் வடதிசையில் உள்ள குளத்தை அகலப்படுத்தும்போது கண்டெடுக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இத்தலையை 'ஜ்வாலா மகுடம்' அணி செய்கிறது. இக்கோவில் உள்ளடங்கிய சுமார் 2 ஏக்கர் 96 செண்ட் இடுகாட்டுப் பரப்பளவுள்ள பகுதியே தற்போது கோவலன் பொட்டல் எனக் கூறப்படுகிறது.

கோவலன் பொட்டல் என்று வழங்கப்படும் இப்பகுதி எவ்வளவு தொன்மை வாய்ந்தது என்று அறிதற்பொருட்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இப்பகுதியில் 1980ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் தேதி அகழ்வாய்வினை மேற்கொண்டது. இப்பகுதியில் மூன்று ஆய்வுக்குழிகளை இத்துறை அகழ்வாய்வு செய்துள்ளது. ஒவ்வொன்றும் 4 மீட்டர் பக்க அளவினைக் கொண்டதாகும். இவ்வாய்வு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

**முதலாய்வுக் குழி:**

முதல் ஆய்வுக்குழி சுமார் 2.5 மீட்டர் ஆழம் வரையில் ஆய்வு செய்யப்பட்டது. இது 5 பால நிலைகளைக் (மண் அடுக்குகள்) கொண்டுள்ளது. இக்குழியின் 2.5 மீட்டர் ஆழத்திலேயே இயற்கையான மண்களைப் (Natural Soil) பெற்றுள்ளது. இவ்வாய்வுக்குழியில் ஏராளமான பானை ஓடுகள், எலும்புத்துண்டுகள் குறைந்த அளவில் இரும்புத் துண்டுகள், கண்ணாடியில் செய்த வளையல்கள், சங்கு வளையல்கள், பல்வேறு மணிகள், காதணிகள், செம்பினால் ஆன பொருட்கள், சுடுமண்ணால் செய்த விளையாட்டுப் பொருட்கள் மற்றும் கற்காலக் கருவிகள் பலவும் கிடைத்துள்ளன. இவ்வாய்வுக் குழியில் 3 பெரிய முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு தாழிகள் மூடியுடன் காணப்படுகின்றன. மூன்றாவது தாழியின் மீது மூடி காணப்படவில்லை. ஆயினும் அத்தாழி பெருங்கற்களைக் கொண்டு மூடப்பட்டு விளங்குகிறது.

ஒவ்வொரு தாழியும் சுமார் 1 மீட்டர் உயரம் உடையது. இத் தாழியின் மீதும் பக்கங்களிலும், மட்கலங்களும் மூடிகளும், மட்குடமும் அமைந்து காணப்படுகின்றன.

**2000 ஆண்டுகட்கு முற்பட்ட மனிதனின் எலும்புக்கூடு:**

அண்மையில் இத்தாழிகளுள் ஒன்று திறந்து ஆய்வு செய்யப்பட்டது. அத்தாழியின் உள்ளே மண்டை ஓடு, கைகால்கள் ஆகிய மானிட எலும்புகளும் 8 மட்பாண்டங்களும் கண்டறியப்பட்டன. இந்த எலும்புக்கூடு எந்நிலையில் முன்பு வைக்கப்பட்டதோ அதே நிலையில்இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த எலும்புக்கூட்டை மதுரை மருத்துவக்கல்லூரியைச் சார்ந்த டாக்டர். செம்பொன் டேவிட் மற்றும் டாக்டர். ரெங்கநாதன் ஆகியோர் ஆய்வு செய்தனர். இது 5 அடி 8 அங்குலம் உயரமுடைய ஆண் மகனின் எலும்புக்கூடு என்றும், இறக்கும்போது அம்மனிதனின் வயது சுமார் 35லிருந்து 40க்குள் இருக்கும் எனவும் கண்டறிந்தனர். தொல்பொருள் ஆய்வாளர்கள் இவ்வெலும்புக்கூடு 2000 ஆண்டுகட்கு முற்பட்டது எனக்கருதுகின்றனர். தொன்மைவாய்ந்த இந்த எலும்புக்கூடு தமிழக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய தாழிகளில் இட்டுப் புதைக்கும் வழக்கத்தைச் சங்க இலக்கியங்களும் காப்பியங்களும் விரித்துக் கூறுகின்றன.

முதுமக்கள் தாழியினுள், எலும்புகளையும், மட்பாண்டங்களையும் வைத்து அதன் மீது மூடி கவிழ்க்கப்பட்டு விளங்குவது, மணிமேகலை சுட்டும்-இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறையினை மெய்ப்பிக்கின்றது.

**இரண்டாம் ஆய்வுக்குழியில் கண்டெடுக்கப்பட்டவை:**

இரண்டாவது ஆய்வுக்குழியில் நான்கு தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் 'தமிழி' எழுத்து பொறித்த பானை ஓடு ஒன்றும் கிடைத்துள்ளது, குறிப்பிடத்தக்க ஒன்று. மற்றும் கண்ணாடி வளையல்களும், சுடு மண்ணால் செய்யப்பட்ட வட்டச் சில்லுகளும், மட்கலங்களில் பொருத்தப்படும் சுடுமண்ணாலான வடிகுழாயும், பானை மூடியின் கைப்பிடிப்பகுதியும், எலும்புத் துண்டுகளும், நுண்கற் கருவிகளும் கிடைத்துள்ளன.

இவ் ஆய்வுக்குழியும், முன்னதனைப்போலவே மக்கள் வாழ்ந்ததற்கு முன் உள்ள மண் பகுதி வரை ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வும் 2.5 மீட்டர் ஆழத்தில் முடிவடைந்தது.

இக்குழிகளை ஆய்வு செய்தபோது முதுமக்கள் தாழிகள் உள்ள பகுதிகளில் மேல் மட்டத்தில் உறுதியற்ற மண்ணும் ( Loose Soil ) அதன் கீழ் சிறிதும் பெரிதுமான எண்ணிறந்த கற்கள் பரப்பப்பட்டும் அதன் கீழ் முதுமக்கள் தாழி இருப்பதும் கண்டறியப்பட்டது. இதுதாழிகள் உள்ள புதைகுழிகளை ஆராய்ச்சியாளர் எவ்வாறு அணுகலாம் என்பதற்கு வழி திறந்துவிட்டது எனலாம்.

**மூன்றாம் ஆய்வுக்குழியில் கண்டெடுக்கப்பட்டவை:**


இக்குழி கோவலன் பொட்டலிலுள்ள குளத்தின் மேல்திசையில் தொடங்கப்பட்டது. இதில் பானை ஓடுகள் மட்டுமின்றி விலையுயர்ந்த வெண்படிகக்கல்லும், கருப்புநிற மாக்கல்லால் ஆன மணியும், சுடுமண்ணால் செய்யப்பட்ட வட்டச் சில்லுகளும், சங்கு வளையும், இரும்பினாலான ஆணியும், நுண்கற்காலக் கருவியும் கிடைத்துள்ளன.

இவ்வாய்வுக்குழியின் அருகே வடதிசையில் சோதனைக்குழி ஒன்று தோண்டப்பட்டது. அதில் மேல்நிலையிலேயே உடைந்த முதுமக்கள் தாழியின் அடிப்பகுதி கிடைத்தது. இதில் ஏலும்புத் துண்டுகள், மட்கலங்கள், பானை மூடிகள் முதலியன கிடைத்துள்ளன. இவை கி. பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். இங்கு கிடைத்த முக்கியமான பொருட்கள் கீழ்வருமாறு:

**பானை வகைகள்:**

இவ்வாய்வுக் குழியில் பலவிதமான விளிம்புகளையுடைய மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. அவையாவன; குடிநீர்ப் பானைகள், நீண்ட கழுத்தும் சற்றே விரிந்த விளிம்புகளையும் உடைய மட்குடமும், உட்குழிவான கலயமும் குவிந்த தட்டுகள், பானை மூடிகள் குறிப்பிடத்தக்கனவாகும். முதலாம் ஆய்வுக் குழியில் திறக்கப்பட்ட தாழிக்குள் இருந்த மட்பாண்டங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு வகையான அமைப்பைக் கொண்டவையாகும். இவை பெரும்பாலும் கருப்பு, சிவப்பு நிறமுடைய மட்பாண்டங்களாகும். இப் பானை வகைகளின் உட்பக்கம் கருப்பாகவும், வெளிப்பக்கம் விளிம்பினைத் தவிர ஏனைய பகுதிகள் சிவப்பாகவும் காணப்படுகின்றன. இவை மேலாகக் கீழாகச் சுடும் முறையினைப் பின்பற்றிச் செய்யப்பட்டவை. இவ்விதம் சுடும்போது ஏற்படும் வெப்பத்தின் வீச்சு காரணமாக உள்பக்கம் கருநிறமாக அமைந்துவிடுகின்றன.

முதுமக்கள் தாழி ஆய்வு செய்யப்படுகிறது



இவ்வகைப் பானைகளில் சில வற்றில் வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. நீண்ட கழுத்துடைய மட்குடம் ஒன்றின் கழுத்துக்குக் கீழேயுள்ள பகுதியில் சாய்வான கோடுகள்வண்ணத்தில் தீட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**இரும்பு:**

இங்கு ஆய்வு நடத்தியுள்ள மூன்று குழிகளிலும் இரும்புத் துண்டுகள் பரவலாகக் கிடைத்துள்ளன. முதலாவது ஆய்வுக் குழியில் 44 செ. மீ. ஆழத்தில் தட்டையான அம்பு முனை போன்ற அமைப்புடைய இரும்புத்துண்டு கண்டுபிடிக்கப்பட்டது. மற்றும் இவ்வாய்வுக்குழியில் சில மெல்லிய இரும்புத் தகடுகளும் கிடைத்துள்ளன. இவை இலை வடிவிலும் முட்டை வடிவிலும் காணப்படுகின்றன. இவை உடைந்த விளக்குகளின் பகுதியாக இருக்க வேண்டும். இத்தகைய விளக்குகள் தமிழ்நாட்டில் சில இடங்களில் கிடைத்துள்ளன. அவை சுடுமண்ணாலும் இரும்பாலும் செய்யப்பட்டவை. இரும்பு விளக்குகள் சங்ககாலத்தில் புழக்கத்தில் இருந்தமை பற்றி இலக்கியங்கள் பேசும். எண்ணெய்யும் திரியும் இட்டு ஏற்றப்படும் இரும்பு விளக்குகள் பாண்டிய நாட்டில் பண்டுதொட்டே இருந்தமை நெடுநல்வாடையால் அறிகிறோம். எனவே அகழ்வாய்வில் கிடைத்த இத்தகைய இரும்புப் பொருட்கள் சங்க இலக்கியச் செய்தியை உறுதிப்படுத்துகின்றன.

முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ள ஆழத்திலேயே சிறுசிறு இரும்புத் துண்டுகள் அகழ்வாய்வில் கிடைத்துள்ளமையால் இரும்பையும் இரும்பின் உபயோகத்தையும் பெருங் கற்கால மக்கள் பயன்படுத்தி வந்தனர் என்பதை அறிகிறோம்.

**சங்ககால செப்புக் காசு:**

இது முதலாவது ஆய்வுக்குழியில் கிடைத்தது. இது சதுர வடிவான அமைப்பினையுடையது. இச்செப்புக்காசின் ஒரு பக்கத்தில் மீன் உருவம் வரைபடமாகக் காட்டப்பட்டுள்ளது. இம் மீன் வடிவம் உருப்பெற நான்கு நேர்க் கோடுகள் மட்டுமே பயன்படுத்

தப்பட்டுள்ளன. இது சங்ககாலக் காசாகக் கருதப்படுகின்றது. பாண்டிய நாட்டில் இதுகாறும் நடந்த ஆய்வுகளில் இத்தகைய சங்ககாலக் காசு கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

**கழுத்தணி:**

மெல்லிய செம்புக் கம்பியைக் கொண்டு முறுக்கிப் பின்னப்பட்ட சங்கிலி ஒன்றும் முதலாவது ஆய்வுக்குழியில் கிடைத்துள்ளது. இது கழுத்தணியாக இருத்தல் வேண்டும். சங்கிலியின் ஒரு பகுதியே கிடைத்துள்ளது.

**மணிகள்:**

இங்கு இதய வடிவினை யொத்த விலையுயர்ந்த வெண் படிகக்கல் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இதன் ஒருபுறம் தட்டையாகவும் மறுபுறம் திரண்டு புடைத்திருப்பது போலவும் வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளது. இது கழுத்தணியில் பதிக்கப்பட்ட வெண்படிகக் கல்லாக இருக்க வேண்டும்.

இவ்விதம் படிகக்கல்லைக் கொண்டு மெண்மையாக இழைத்து உருவாக்கப்பட்ட 'ஒளி' பொருந்திய அணியை 'ஒளியிழை' எனக் கூறுதல் பொருத்தமாகும். இத்தகைய அணிகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. இந்த அணிகள் சங்ககாலத்தில் பெரு வழக்கில் இருந்தமை சங்க நூற் பாடல்களால் அறிகிறோம். இவை காஞ்சி, கொடுமணல் ஆகிய இடங்களில் கிடைத்த மணிகளுடன் ஒப்பிடத்தக்கன.

இங்கு மற்றுமொரு உயர்ந்த மணி கிடைத்துள்ளது. இது கருப்புநிற மாக்கல்லால் (Steatite) செய்யப்பட்டது. இது மத்தள வடிவில் அமைந்துள்ளது. இம்மணியின் ஒருமுனை குறுகி நீண்ட சதுரமாக அமைந்து விளங்குகிறது. மறுமுனை தேய்ந்த நிலையில் உள்ளது. மணியில் நூலைக் கோப்பதற்கு ஏற்ப துளையிடப்பட்டுள்ளது. இது 94 செ.மீ. ஆழத்தில் கிடைத்துள்ளது. இதுவும் கழுத்தணியில் ஒரு மணியாக இருந்திருக்கலாம்.

**விரல் அணி (மோதிரம்):**

இங்கு அறுகோண வடிவில் சற்றே வளைந்த செம்பாலான அணி ஒன்று கிடைத்துள்ளது. இது முன்புறத்தில் மேலும் கீழும் சுற்றிலும் சிறுகற்கள் அமைந்திருக்க நடுவில் மட்டும் சற்று பெரிய கல் பதிக்கப்பட்டுள்ளது போலவும், அமைப்பினைப் பெற்று விளங்குகிறது. இதன் இடப்பக்கமும், வலப்பக்கமும் சிறிய அளவிலான கற்கள் அமைக்கப்பட்டுள்ளது போன்றஅமைப்பு காணப்படுகிறது. இதன் தோற்றமும் வடிவுங்கொண்டு பார்க்கும் போது விரல்களில் அணியும் மோதிர வகையாக இருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. சிறப்பான அமைப்புடைய இவ்வணி முதலாம் ஆய்வுக்குழியில் கண்டுபிடிக்கப்பட்டது.

**சங்குவளை:**

கோவலன் பொட்டல் அகழ்வாய்வில் இரு சங்கு வளையல்களின் பகுதிகள் கிடைத்துள்ளன. இவை தூய வெள்ளை நிறமாகவும், வழவழப்பாகவும் உள்ளன. முதலாவது வளையின் மேற்பகுதியில் சிறு சிறு செங்குத்துக் கோடுகள் (Vertical Lines) உள்ளன. ஒரு செ. மீ. இடைவெளிக்கு 4 சிறுகோடுகள் வீதம் 15 கோடுகள் இவ்வளையல் துண்டில் காணப்படுகின்றன. இத்துடன் கிடைத்த மற்றொரு வளையல் துண்டில் ஒரு புறத்தில் குறுக்கு நெடுக்குக்கோடுகள் (Criss-Cross) போன்று சிறிய கட்டங்கள் வெட்டப்பட்டுள்ளன. இவை அமைப்பிலும் அழகிலும் கொற்கை, மதுரைகோரிப்பாளையம் ஆகிய இடங்களில் கிடைத்த சங்கு வளையல்களைஒத்துள்ளன. இதைத் தவிர மூன்றாவது வளையல் துண்டில் இரு நேர்க்கோடுகளுக்கு இடையில் சாய்வுக் கோடுகள் இடப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. சங்ககாலப் பெண்களின் அணிவகைகளை அறிய இவை பெரிதும் உதவுகின்றன. இவ்விதம் சங்கு வளைகளைப் பற்றிக்கூறும் சங்க இலக்கியச் செய்திகளுக்கு மேலும் வலுவூட்டுகின்ற வகையில் இக் கண்டுபிடிப்புகள் அமைகின்றன.

இச்சங்கு வளைகள் நுட்பமாக அறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மிக நுட்பமாக அறுப்பதற்கு எத்தகைய கூரிய அறுப்பான்களை அக்கால மக்கள் பயன்படுத்தினர் என அறிய இயலவில்லை. இதுகாறும் நடந்து முடிந்த தமிழக ஆய்விலும் கிடைக்கவில்லை.

**அறுத்த சங்கு:**


இப்பகுதியில் அறுத்த சங்கின் துண்டு ஒன்று கிடைத்துள்ளது. இதன் மேல்விளிம்பில் அறுக்கப்பட்ட அடையாளத்தைத் தெளிவாகக் காணலாம். இங்கு அறுத்த சங்குகள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. ஒரு வேளை இது இடுகாட்டுப் பகுதியாகவே இருப்பதால் இங்கு குறைவாகக் கிடைக்கின்றன போலும்.

கொற்கை போன்ற குடியிருப்புப் பகுதியில் மேற்கொண்ட அகழ்வாய்வில் சுமார் 3000க்கும் மேற்பட்ட அறுத்த சங்குகள் நமக்குக் கிடைத்துள்ளன.

**தமிழ் எழுத்துப் பொறித்த பானை:**

இரண்டாவது ஆய்வுக்குழியில் முதுமக்கள் தாழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதன் மேல் பகுதியில் வழவழப்பானஉடைந்த மட்குடம் காணப்பட்டது. அப்பானையில் கழுத்தின் கீழ்ப்பகுதியில் மூன்று தமிழி எழுத்துக்கள் உள்ளன. அவை 'அ, த' என்ற தொல் எழுத்துக்களாகும். இவற்றைக் கொண்டு ஒரு சொல்லாகப் படிக்க முடியவில்லை. ஒரு வேளை இக்காலப் பாத்திரத்தில் முன்னெழுத்து பொறிப்பது போன்ற வழக்கத்தைப் போல இவற்றைக் கொள்ளலாம்.

கோவலன் பொட்டலில் மேற்கொண்ட அகழ்வாய்வு 2,000 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றுத் தடயங்களைத் தமிழக வரலாற்றுக்குத் தந்துள்ளது.



2000 ஆண்டுகட்கு முற்பட்ட மனிதனின் எலும்புக்கூடு

# மின்னுவதெல்லாம் பொன்னல்ல




"ஃபாரெய்ன்" என்ற முத்திரையுடன் வரும் பொருள்களில் பெரும்பாலானவை
போலியானவை. இவை, வெளிநாட்டு 'ப்ராண்ட்' பெயர்களைக் கொண்ட
ஏமாற்றுப் பொருட்களாக இருக்கக் கூடும்; உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்டு,
'இறக்குமதி செய்யப்பட்டது' என்ற வாக்கியம் ஒட்டப்பட்ட பெட்டிகளில்
அடைக்கப்பட்டிருக்கக்கூடும்.
பணத்தை விரயமாக்காதீர்கள், ஏமாறுதீர்கள்.

**இந்தியராக இருங்கள்,**
**இந்திய நாடு தயாரிப்பதையே வாங்குங்கள்**

davp 80/415

டைரெக்டொரேட் ஆஃப் பப்ளிகேஷன்ஸ் கஸ்டம்ஸ்
& சென்ட்ரல் எக்சைஸ் நியு டில்லி-110002

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


இயற்கை எழிலின்
வண்ணச் சிறகுகள்!
கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள் :
பருத்திச் சேலைகள், அச்சிட்ட பருத்திச் சேலைகள்,
அசல் பட்டுச் சேலைகள், அச்சிட்ட பட்டுச் சேலைகள்,
பாலியஸ்டர் சேலைகள், பாலியஸ்டர் சட்டைகள்,
பருத்திச் சட்டைகள், பட்டுச் சட்டைகள்,
வேட்டிகள், லுங்கிகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள்
தலையணை உறைகள், மேஜை விரிப்புகள்,
அலங்காரத்துணி வகைகள் மற்றும் ரெடிமேட் உடைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

